# விளையாட்டுத் தாலி




## பூவை எஸ். ஆறுமுகம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# விளையாட்டுத் தாலி

(குறுநாவல்)

பூவை. எஸ். ஆறுமுகம்

**துரை. இராமு பதிப்பகம்**
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழைய தாம்பரம், சென்னை-600 045.

**Title :**

VILAIYATTU THALI

**Author :**

**POOVAI S. ARUMUGAM**

**First Edition :** November 1993

**Paper Used :** 11.6 Kg. Cream Woven

**Size :** 1/16 Double Crown

**Pages :** 140 + 4 = 144

**Printers :**

**ARUL VEL ACHAGAM**
40-A, Vembuliamman Koil Street,
Palavanthangal, Madras-600 114.
Phone : 2342854 P.P.

**Publisher :**

Durai RAMU Pathippagam
6, Pillaiyar Koil Street,
Old Tambaram, Madras-600 045.
Phone : 402600

**Price :** Rs. **20/-**



**துரை இராமு**

பதிப்பாளர்
6, பிள்ளையார் கோயில் தெரு
தாம்பரம்,
25—11—93

# பதிப்புரை

**பூவை. S. ஆறுமுகம்** ஒரு மிகச் சிறந்த எழுத்தாளர் என்பது நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. தனக்கென ஒருநடை வாசகர்களுக்கு விறுவிறுப்பான படிப்பூக்கம். கருத்துக்களின் ஏற்புடைய கோர்வை. இவற்றின் விளைவே **'விளையாட்டுத் தாலி'** எனும் இந்நூல். இந்நூல் மூன்று குறுநவீனங்கள் அடக்கம்.

பூவையின் எழுத்துப் பணி வாசகர்களின் தேவையை நிறைவு செய்யவேண்டும். இந்நோக்கத்துடன் இந்நூலை என் பதிப்பகம் வெளியிடுவதில் பெருமை கொள்கிறது.

அன்புள்ள
**துரை. இராமு**

இந்நூலில் வரும் சம்பவங்கள் பாத்திர படைப்புக்கள் எல்லாம் கற்பனையே.

இந்நூலை துரை இராமு பதிப்பகம் வெளியிடுவதில் பெருமை என்னு டையது.

**பூவை. எஸ். ஆறுமுகம்**

# விளையாட்டுத் தாலி!

## 1

அரிசிக் கலயத்தில், சாத்திரத்திற்காக வேனும் மணி அரிசி மிச்சம் மீதம் இருக்காதா? ...

செல்விக்குட்டிக்கு அழுகை அழுகையாக வந்தது; ஆத்திரம் ஆத்திரமாகவும் வந்தது. பட்டுத்தெறித்துச் சுட்டுவிட்ட சுடுநீர்ச் சொட்டுகள் அவளுக்கு மீண்டும் சுயப்பிரச்சினையை உண்டாக்கியிருக்கலாம். சரிந்து கிடந்த சுங்கடிச் சித்தாடையின் 'மாராப்பு' இப்போது சீரடைந்தது; வேர்வைதான் சீரடையவில்லை.

வெயில் வெட்டரிவளாகப் பள்பளக்கிறது; சுள்ளாப்பாக உறைக்கிறது.

ஒட்டிக்கிடந்த நெடுமூச்சை நெட்டித் தள்ளினாள் அவள். விலாக்குடை வலிக்க, முள்ளந்தண்டு நோவெடுக்க, குந்தின இலக்கிலேயே, சீனிப்புளிச் 'சாம்பான் சாமி' மாதிரி எத்தனை நாழிதான் குந்தி யிருப்பாள்? — பாவம்! பாவமும் ஆச்சு; புண்ணியமும் ஆச்சு! 'ஊம்!' பாதங்களை ஒரு தப்படி நகர்த்த முயன்றாள் 'சுரீர்' என்ற உணர்வு கபாலத்திற்குப் பாயவே, "ஆத்தா" என்று கூப்பாடு போட்டாள். எட்டாக் கையிலிருந்த ஈயக்குவளையை எட்டி நகர்த்தி விட்டபோது, அவளுக்கே உரித்தான கருவக்களி அவளையும் அறிந்த விதத்தில் கண்களிலும் உதடுகளிலும் ஊடாடியது. மேனியின் சதைப்பிண்டங்கள் முழங்கால் சட்டையில் உராய்ந்தன. நயந்தநாணம் அழகான அரிசிப்பல் இடுக்கிலே கண்பொத்திக் கொண்டிருக்க

வேண்டும். கண்ணாமூச்சி விளையாட்டென்றால், கஞ்சிக்குப் பச்சை மிளகாயைக் கடித்துக் கொள்கிறமாதிரி தான்! — நல்ல காலமாக, ஒரேயொரு மிடறுக்குக் காணும் படியாகத் தங்காணிக் கம்மாய் நல்ல தண்ணீர் மிஞ்சியிருந்தது அலைக்கழிந்த — அலைக்கழிக்கப்பட்ட ஆசையோடு ஆசையாக அள்ளித் தெளித்துக்கொண்டாள்! 'ஊம்' கருக்கலிலே குடிசையை விட்டுப் பிறிஞ்ச ஆத்தாளை இம்மாம் பொழுதுக்கும் கண்ணுப் புறத்திலே காண வாய்க்கலையே ?போன சங்கதி என்னா ஆச்சோ?' - நெடுமூச்சு பூராகமென நெளிகிறது.

என்னவோ 'கசமுச'வென்று சத்தம் கேட்டது.

முழங்காலில் கையை முட்டுக் கொடுத்துக் கொண்டே எழுந்தாள் செல்வி. கொட்டடி ரவிக்கையின் அடிமுடிச்சு அவிழ்ந்து தொலைத்தது. ஆசையின் இனிய சொப்பனங்கள் எப்படியெல்லாமோ சிலிர்த்தன ; முடிச்சுப் போட்டுக் கொண்டு, தலையைத் தாழ்த்தியவளாக, எட்டடிக் குடிசை விட்டு வெளிப்புறத்திற்கு வந்தாள். கூப்பிடு தொலைவிலே, கூப்பிடாமல் நின்றிருந்த அந்த 'ரேக்ளா' அவள் நெஞ்சிலே தங்கரதமாகச் சுழன்றது. ''ஆத்தாளே அங்காளம்மே!''— பசி என்னமாகப் பிராண்டித் துளைக்கிறது ;— 'சின்ன எசமான்!'— கன்னிப் பூ மெய்ம் மறந்தாள். பசி போன இடம் தெரியவில்லை!

சாம்பான் சாமித் திடலில் இப்போது ஆளும் பேருமாகக் கூட்டம் தெரிந்தது. நெளிந்தது.

அவளுக்குப் புரியாமல் இருக்குமா ?

''அடியே செல்லியோ !''

''என்னாடி, வள்ளி ?''

''கங்காணி வூட்டுக் கடலைக் கொல்லை அலுவலுக்கு வளமைப்படி உண்டான அச்சார ஈவுப் பணத்தை உன் எசமானரு அல்லாருக்கும் குடுத்துக்கிட்டிருக்காங்களே ? நீ இன்னும் வாங்கிக்கிடலையாங்காட்டி ?''

''ஊகூம் ! ஆத்தா குளமங்கலத்திலேருந்து அரிசி வாங்கிக்கினு திரும்பினடியும் வாங்கிக்கிடும் !'' அவளது அழகான உதடுகளிலே நாணம் மணத்தது.

வள்ளி உதட்டைப் பிதுக்கினாள். அவளுக்குக் காசு தான் கடவுள் ! அந்தக் கடவுள் இப்போது அவள் கைப் பிடிக்குள் அடக்கம் !

மேற்புறக் குடிசையில் சின்னப்பயல் மூக்கன் தாளம் தவறித் தப்புக் கொட்டிக் கொண்டிருக்கிறான், இன்னமும்.

மறுபடி, செல்லி பற்களைக் கடித்தாள். 'டேலே' பொடிசு ! தப்புத்தனமான தப்புக் கொட்டப்பூடாதடா, மூக்கா !'—ஆணவப் புன்சிரிப்பை இழையோட விட்டாள். பேசும் கண்கள் பேசவில்லை. எதிர்ப்புறத்தில் ராசாங்கம் நடத்திக் கொண்டிருந்த ஆணைகளும் கெடுபிடிகளும் இன்னமும் நிர்த்தாட்சண்யமாகவே ஒலிக்கின்றன ; எதிரொலிக்கின்றன 'கழுகுக்கு மூக்குமேலே வேர்க்கிற தாட்டம், இந்தப் பாவச் செம்மங்களுக்கு அம்மன் காசு கிடைக்கிறதாக இருந்தாக்கூட, ஒரு அருப்புருவமான கும்மாளம் ஆலாப்பறக்க ஆரம்பிச்சிடுதே !...ம் ; நான் ஒருத்தி துட்டுக்கெட்டதனமா அவங்க பேரிலே பெரிசாய்க் குத்தம் கண்டுக்கினு இருக்கேனே ?—இங்கான மட்டுக்கும் என்னா வாழுதாம் ?—நிலந்தெளியிற நேரத்துக்கு ஆத்தா வக்கனைக் கொப்ப உப்புக்கல்லு. தூவி வள்ளிசா ஒரு பீங்கான் சட்டிக்கு நீச்சத்தண்ணி குடிச்சுங் கூட, பசி அடங்காமல் தூண்டித் துருவித் துளைச்சிக் கிட்டுத்தானே இருக்குதாங்காட்டி !— ஊம், பசியேதான்

வாழ்க்கையோ, என்னமோ ?... அழகான இமை விளிம்பு களிலே அழகான ஈரம் அழகாக விளிம்புகட்டிப் படரலாயிற்று.

கீழத்தெரு அன்னம் உள்ளங்கைகளில் பரப்பிக் கிடந்த காசுகளை இனம் பார்த்து, இனம் பிரித்தபடி குனிந்த தலையை நிமிர்த்தாமலும் நிமிர்ந்த நெஞ்சைத் தாழ்த்தாமலும் அன்னநடை நடந்து வருகிறாள்.

''அடியே அன்னப்பொண்ணு ! அந்தாலே மயிலைக் காளை கொம்பு ரெண்டையும் சிலுப்பிக்கிணு ஒம்மேலே பாயுறதுக்காவப் பாய்ஞ்சு ஓடியாருதுடியோ!'' என்றாள் செல்லி

அவ்வளவுதான் !— 'ஆத்தாடியோ!' என்று கதிகலங்க 'கடலே கடலேகதியென்று பின்வாங்கிய சமயத்தில், அன்னக்கிளியின் மண்டையைப் பதம் பார்த்தது சாம்பான் கிழவனுக்குக் குடிக்காணியாட்சிப் பாத்தியதை கொண்டிருந்த ஒட்டு மாமரம். சுற்றிச் சூழப் பார்வையை மேய விட்டபோதுதான். அவள் ஏமாந்து விட்ட கதை விளங்கியது. 'செல்லிக்கு எப்பவுமே குறும்பு எக்கச்சக்கம் ! — புடிச்சாலும் புடிச்சிருக்குது புளியங் கொம்பப் பார்த்து ! அதுக்கு ராங்கி இருக்காதாக்கும் பின்னே ?' மண்ணைக்கவ்வின பரிதாபத்திலே, மஞ்சள் தாலியை நிரடினாள் அவள்.

செல்லியின் நாதச் சிரிப்பு ஓய்ந்தபாடில்லை. ''காலை எட்டிப்போட்டு நடடி ; காசு பத்திரம். உம்மச்சானான மச்சான் உனக்கோசரம் அங்கிட்டுக் கஞ்சி குடிக்கத் தபசு கிடக்கும்டியோ !'' என்று 'நையம்' பாடினாள்.

அன்னக்கிளிக்கு வெட்கம் வந்து விட்டது, வெட்கம் கருங்காணி வீட்டுக் கடலைக் கொல்லி அலுவலுக்கு ஒங்க குடிக்கு உண்டான அச்சார ஈவு வந்திடுச்சாடி, செல்லி ?'' என்று அவசரமான ஆவலுடன் கேட்டாள்

செல்லிக்கு இருதயத்தில் நெஞ்சி குத்தினமாதிரி ஓர் உணர்வு வலித்தது, உதட்டைப் பிதுக்கியதோடு சரி; வாய் திறந்தால், முத்துக்கள் உதிர்ந்துவிடுமோ ?

அன்னத்திற்குக் காசுதான் கடவுள். ஆனால், கடவுளும் உள்ளங்கைப் பிடிக்குள் அடங்கி விடுகிறாரே! பாவம் !

செல்லி நிமிர்ந்தாள். கொட்டுச் சத்தம் கேட்டதும், திடுக்கிட்டாள் தொடர்பு அறுந்து கேட்டபறையொலியில். தாளக்கட்டு தவறியிருந்தது கைகளிலே 'துறுதுறு' வென்று ஊறல் கிளர்ந்தது. 'யார்னா அவன் கட்டுக் கணக்கு வைக்காமல், மனம்போன போக்குக்குக் கொட்டுக் கொட்டுறவன்?' குற்றத்திற்குரியவன் ஒரு வேளை சின்னப் பிள்ளை மூக்கனாக இருக்கலாம் அல்லவா ? ஒரு செய்தி நினைவில் பிசிறு தட்டியது. 'மகளே செல்லித் தங்கம்! ஒனக்குக் கண்ணாலம் காட்சின்னு ஒண்ணு ஆத்தா புண்ணியத்திலே நல்லதனமாய் நடந்து, அந்த நிம்மதியோட ஆடி அடங்கி நான் கண்ணை மூடுறத்துக்குப் பொசிப்பு வச்சிக் கொடுத்தும் வச்சிருந்தேன்னா, நான் மெய்யாலுமே மகராசியேதான். நம்ம சாதிசனக்கட்டு கொட்டு முழக்க, எம்மாப்பிள்ளைத் தங்கம் தீப்பந்தம் புடிச்சுக் கொள்ளி வைக்க, ஆண் குஞ்சு லவிக்காத குறை மேலுக்குத் தெரியாமல் எங்கதையான கதையும் ஒரு பாடாய் முடிஞ்சிடுமே ?' — செல்லியின் கோலமதர் விழிகள் பொடிக்கின்றன. மனத்தில் மாயமாய் எதிரொலி கிளப்பியவாறு இருந்த தப்புச் சத்தத்தின் ஊடாக, அவள் காதுகளைத் தீட்டிக் கொண்டு உன்னிப்பாகக் கவனித்த

நேரத்தில், அந்தப் பயங்கரச் சத்தம் ஓய்ந்திருந்த அதிபயத்தை உணர்ந்ததுதான் தாமதம் ; மரணத்தின் ஓர் அமைதியை அடைந்தாள் செல்லி. நினைவில் நின்ற தாய் நெஞ்சில் நின்றாள் 'எமன் ஏமாந்தாலும் சரி, ஏமாறாட்டியும் சரி, ஒனக்கு ஆயுசு நூறுதான், ஆத்தா !' எண்ணங்கள் மாத்திரம் சிலிர்க்கவில்லை.

"மகளே, செல்லிப்பொண்ணு !"

"ஆத்தாளா ?... வந்திட்டியா, ஆத்தா ?"

பாசமும் பாசமும் கூடிப் பிடித்து விளையாடின.

பெற்றவளின் காலடியில் கிடந்த சாக்கு முடிச்சை 'கைலாகு' கொடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டாள் மகள். நெல் சுமக்கவில்லை. ஆகவேதான் பசியும் சுமை கழித்து விட்டது போலும் !

கஞ்சி குடிச்சியாடி, ஆத்தா ?"

"ஊகூம் !"

"சமைஞ்ச பொண்ணு இம்மாம் நேரத்துக்கு வயித்தைக் காயப் போட்டுக்கிட்டுக் குந்தியிருக்கலாமாடி மகளே ? ... குளமங்கலத்தை நாடிப் பிறயிறப்பவே ஒங்கிட்டக்கப் படிச்சுப் படிச்சுச் செப்பினேனேடி, ஆத்தாளே ?' மங்காத்தாக் கிழவிக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது ; கண்கள் கலங்கியிருந்தன. மகளுடைய பசியில் அவள் தன் பசியை அடியோடு மறந்துவிட்டிருக்க வேண்டும்.

செல்லி நமட்டுப் புன்னகை செய்தாள். "ஆத்தா ஒரு வேளைக்குக் கஞ்சி குடிக்காட்டி, எம்புட்டு மேனி ஒண்ணும் கட்டுவிட்டுப் பூடாது; பானையிலே கிடந்ததோ நாலு கொத்துத்தான். நான் ஒண்டியுமா ஒரே மூச்சிலே

அதெல்லாத்தையும் சாடாவாய்க் குடிச்சு ஏப்பம் விடுறதுக்கு எனக்கு மனசு இல்லே. ஆனதினாலே, நீயும் அரிசி வாங்கிக்கிணு திரும்பினடியும் ரெண்டு பேரும் ஒட்டுக்காக் குந்திக் கஞ்சி குடிக்கலாமேன்னுதான் உனக்காகக் காத்திருந்தேனாக்கும்!'' என்றாள் உணர்ச்சிகள் சுழித்தன.

''நல்ல பொண்ணுடி, போ !''

''நல்ல ஆத்தாடி ஆத்தா !''

தாயும் மகளும் வாய்விட்டும் மனம்விட்டும் சிரித்த இரட்டைச் சிரிப்பில், மூன்றாவதாக ஒரு சிரிப்பும் கூடிக் கலந்தது.

அங்கே—

கங்காணி வீரமுத்துச் சேர்வைகாரனின் அருமந்தப் புதல்வன் வீரமணி காட்சியளித்தான் !

# 2

கிழவி மங்கத்தாவுக்கு வாயெல்லாம் சிரிப்பு; வாயெல்லாம் பல்லாக இருந்த காலம் ஒன்று இருக்கத் தான் இருந்தது ; இப்போது எல்லாம் ஆண்டு மாறிப் போயிற்று ; ஆகவே, வாயெல்லாம் சிரிப்பு. அம்மட்டில் அவளுக்கு ஓர் ஆறுதல் தான் !— 'எந்த ஒரு சங்கதி யாகட்டுமே, அது, ஆத்தா மூத்தவ விதிக்கிறபடியே தான் நடக்க வாய்க்குமாக்கும்!... முதலாளி மகன் சின்ன முதலாளி அவள் பார்வையிலே ஆலவட்டம் சுழலத் தொடங்கினான் ! பாசம் சிலிர்க்கிறது!

கிழவி மங்காத்தா வாயெல்லாம் சிரிப்புடன் வேக மாக நடை தொடர்ந்தாள். முதலாளி மகனை வரவேற்க வேண்டாமா?— "ஆண்டே, கும்பிடுறேனுங்க," என்றாள். குரலிலே மரியாதை மட்டுமல்ல, அச்சமும் இழையோடி யது. பல் போய்விட்டால், சொல்லுமா 'தேசாந்தரம்' போய்விடும் ?

'ஊம்' கொட்டினான் இளவட்டம். அவனுடைய கள்ள விழிப்பார்வை அப்போது கன்னிப்பூவைச் சுற்றி அலைந்து கொண்டிருந்தது. ஓடு கம்மாயிலிருந்து லாந்திப் பிடிக்கப்பட்ட விறால் மீன் கரையில் நழுவி வீழ்ந்த சடுதியில் அழகு காட்டித் துள்ளுமே, அப்படிப்பட்ட பாவனையில், வீரயணியின் பாவனை முழுமையும் ஒரே துள்ளல் வடிவில் விளங்கியது. சிரிப்புத் துள்ளியது ; பார்வையும் கூடத்தான் ! 'செல்லிக்குட்டி !'—உயிரும் உயிர்ப்புமாகி, கண்ணா மூச்சி விளையாடுகிறாள் !

''செல்லிக்கு நாணம் பிடிபடவில்லை ; கண்களைத் தாழ்த்திக் கொண்டாள் ; மாரகச்சுங்கடி சீரானது;

கருமணி மாலை செம்மை கண்டது. கங்காணி அக்கரைச் சீமையிலே 'கொண்டுவித்த' அந்தக் காலத்தில், இங்கே கங்காணியின் செல்லப்பிள்ளைக்கு விளையாட்டுத் தோழி அமைந்த அந்த இனிய நன்னாட்கள் அப்போது அவளுக்குக் கண்ணாமூச்சி ஆடிக்காட்டினவோ?.... மணல் வீடு கட்டிப் 'புருசன் — பெண்டாட்டி, விளையாட்டு விளையாடிய நேரத்தில், அந்த விளையாட்டுக்கு யதார்த்த மானதோர் அங்கீகாரம் அளித்து, அந்த அங்கீகாரத்தைப் பிரகடனப்படுத்தும் முறையில் தன் கழுத்தில் மஞ்சள் முடிந்த சணல் கயிறு ஒன்றைத் தாலியாகக் கட்டித் தன்னை மனைவியாக ஆக்கிப் பெருமைப்பட்ட அந்தக் கனவுலக நற்பொழுது அவள் இதயத்தின் இதயத்தில் அப்போது உப்புக்கோடு மறித்து விளையாடியிருக்குமோ ?— விளையாட்டுக் காட்டியிருக்கலாமோ ? சாரைப்பாம்பென நீண்ட பெரு மூச்சு வெளிப்பாயத் தொடங்கியது. 'சின்ன எசமானரே!' அவள் மெய்ம்மறந்தாள் !

"ஏலே, செல்லி !" என்று அலட்டினாள் மங்காத்தா; அதட்டுதலும் தொனித்தது. பயந்து விட்டாள் மங்காத்தா. ஈரல்குலை நடுங்கியது ; பத்து நாழிகை வெயிலில் வளர்ந்திருந்த வீரமணியன் காலடி நிழலைக் கூட அவள் பார்க்கப் பயப்பட்டாள். ஓடிக்கொண்டிருந்த பாம்பைப் பந்தயம் கட்டித் தாண்டிக் காட்டிக் கெலித்தவள்தான் அவளும் ! செல்லிக்குட்டி திடுக்கிட்டுக் கண் திறக்கிறாள் ! ...

# 3

ஒரு நடப்பு பூவத்தக்குடி வியாழச் சந்தைக்கெடுவில் சுளையாகப் பன்னிரண்டு பணம் கொடுத்து வாங்கிய பூப்போட்ட தாவணியை அருமை மகளுக்கு ஆசையாகக் கட்டிவிட்டு அழகு பார்த்த கையோடு, அவளைக் கைப் பிடியாக அழைத்துக் கொண்டு சங்கரன் குடியிருப்புச் சேரியிலிருந்து புறப்பட்டு, ஆவணத்தான் கோட்டைக் காளியம்மன் தேரோட்டத்தை எட்டத்தில் நின்று கண்டு களித்தபின், சாம்பான்சாமிக்கு ஒரு கும்பிடு போட்டுக் கொண்டிருந்தாள் மங்கத்தா. அச்சமயம், அங்கு தோன்றிய வீரமணி பாசத்துடன் செல்லியை நெருங்கி அன்புடன் சேஷமலாபம் விசாரித்த நேரத்தில், சுரடியாகத் தோன்றி விட்டார் கங்காணி. அக்கரைச்சீமை 'சல்லி'யின் 'மவுசு' எட்டுக்கண் விட்டெறிந்த நேரமாயிற்றே? — "நகரம் இளைய ஜமீன் கணக்கிலே இருக்கிற நீ, இருந்திருந்து கேவலம் ஒரு பறக் குட்டிகிட்டவா உன்னோட அருமை பெருமையான அன்பைக் காட்டவேணும்? சரி, சரி. நீ போய் உண்டியல் போடு!" என்று அருமைத் திருக் குமரனுக்கு 'உபதேசம்' செய்து விட்டுப் பக்கவாட்டில் திரும்பி, "ஏலே மங்கத்தாக் கழுதை! ஒங்குட்டி குதிரைக் குட்டி இல்லேயாக்கும்; நினைப்பு வச்சுக்கிடு. ஊம், இந்தக் கடுத்தம் 'மாப்பு' விட்டுப் போட்டேன்!... இன்னொருவாட்டி என்னோட இளையராஜாகிட்டக்கப் பேச்சுக் கொடுக்கிறதைக் கண்டேன்னா; அப்பவே ஒங்குச்சு பிடிசாம்பலாகிப் போயிடும்!" என்று சிவப்பு விளக்கைத் தூண்டிக் காண்பித்து விட்டு, அசல் ராஜநடை நடந்து சென்றார் கங்காணி.

செல்லிக்குட்டி மனம் குமைந்து சிலையானாள்!

# 4

கிழவி தனக்குள் தானாகச் சிலிர்ப்படைந்தாள்.

"ஆத்தா, நான் பறிஞ்சு உலை வைக்கிறேன்." என்று அவள் சேதி தெரிவித்தாள் செல்லி. அரிசி முடிச்சு இப்போது அவள் கட்கத்தில் கொலு இருந்தது. அள்ளிச் செருகிய கொண்டையை விட்டுப் பிரிந்து, ஒரேயொரு சுருட்டை முடி மாத்திரம் வீம்பு பாராட்டிப் பறந்து கொண்டிருக்கிறது.

கிழவிக்குக் கனவு ஒரு கேடா, என்ன? ஆனாலும் கனவு விழிப்பவளாகவே தடுமாறினாள்; தட்டித் தடுமாறினாள். "ஊம்!" என்று அனுமதி கொடுத்தாள். வெறும் அனுமதியல்ல ! — ஆணை !

மகுடிக்கு நாகம் மட்டும் கட்டுப்படுவது கிடையாது!

செல்லிக்கன்னி நகர்ந்தாள்.

வீரமணி பரிவுடன், "போறீயா செல்லி?" என்று வினவினான்.

"ஆமாமுங்க, ஆண்டே!"

இடுக்கு விழுந்து, பீளைசார்ந்து, கலங்கிக் கிடந்த கண்களைச் சேலைக்கந்தலின் முகதலைவைக் கொய்து ஒற்றிக் கொண்ட மங்கத்தா, "சின்ன எசமான்!" என்று கூவினாள்.

வேர்க்க விறுவிறுக்கத் திசை திரும்பினான் வீரமணி. நரிப்பல் பதக்கம் ஊசலாடி நின்றது. விழி முனைகளிலே ஈரம் கசிந்தது.

"ஐயாவே! ஓங்க அன்பு பெரிசு; ரொம்பப் பெரி சுங்க!— ஆனா, அந்த அன்பை நன்றியோடே எட்டிக் கூடப் பார்க்க முடியாதபடிக்கு, எங்களை ஆண்டவன் ஈனப் பொறப்பாய்ப் படைச்சுப்பூட்டானுங்களே? அத்தி பூத்ததாட்டம் அருப்புருவமா ஓங்க நல்ல காத்து இங்கணே அடிச்சிருக்குதுங்களே, என்னாங்க விசேசம்?.. கங்காணிச் சாமி இங்கிட்டு நாடிக் குதிச்சுப் போட்டார்னா அப்பாலே எம்பூட்டுக் குடிசை சாம்பலாகிப் பூடுமுங்க! வெரசாச் சொல்லுங்க வந்த தாக்கலை!" அடிமடியில் 'கமுக்கமாக' ஒளிந்திருந்த புகையிலைக் காம்பை ஒரு கிள்ளுக்கிள்ளி வாய்க்கொடும்பில் அடக்கிக் கொண்டதும் தான், அவனுக்கு மண்டை உடை சற்றே விட்டமாதிரி இருந்தது.

வீரமணியின் நெற்றி நரம்புகள் புடைத்திருந்தன. சிந்தனைப் பிடியினின்றும் சித்தம் விடுதலை பெற் றிருக்கலாம். அழகான உதடுகளை அழகாக விலக்கினான்; ஆனால், துடிப்பு விலகினால்தானே? ஆனாலும், சமாளித்துக் கொண்டான். இவனும் கண்டிச் சீமைக்கு 'ஒரு கணக்கு' போய்த் திரும்பி விட்டவன் இல்லையா? "மங்கத்தா, எங்களோட பாப்பான் புஞ்சைக் கடலைக் கொல்லைத் தாக்கிலே நாளை விடிஞ்சதிலிருந்து கடலை அரிக்கப் போறோம். முந்தா நாள் பேஞ்ச உழவு மழையிலே, கொல்லை குடிக்காடு ஒட்டுக்கும் ஈரம் பாய்ஞ்சிடுச்சு; அதுக்காகத் தான் உங்க சேரிச்சனங் களைக் கண்டு தண்டி, கூலிக்கு வந்து வேலை செய்யச் சொல்லி அச்சாரப் பணமும் கொடுக்க இந்தத் தரம் நானே வந்தேன். எங்க காரியஸ்தருக்கு வக்கனை பத்தாது. உங்க சேரி ஆளுங்க ஆம்பளைபொம்பளை அடங்கலுமே முச்சரிக்கை எழுதின மாதிரி எங்கிட்டேத் தான் கூலி வேலை செய்கிறது வளமை ஆகிப்போச்சு. பிடுங்கின கடலைக் கொடியை எங்க மாடி வீட்டு

முகப்பிலே போர் மேயிறவரைக்கும் தினமும் கஞ்சிப் பொழுதுக்குச் சுடுகஞ்சி காய்ச்சி ஊத்துறத்துக்கும் அப்பாரு பெரிய மனசு பண்ணிச் சம்மதம் கொடுத்திட்டாங்க! வேணும்னா, உன்னை மாதிரி நன்னி கொண்ட நாலு பத்துப் பேருங்களுக்கு வெத்திலை பாக்கு எஞ்சல்லியிசிலருந்து வாங்கித் தரவும் ரோசிச்சிருக்கேன்! சரி, சரி; அப்பாரு தேடி வந்தாலும் வந்திடுவாங்க நான் புறப்பட்டாகணும்!'' என்று விளக்கமாகவே பொழிப்புரை சொன்னான் இளங்காளை. 'கமுசின்' சேப்பிலிருந்து ஒரு சலவைப் பத்து ரூபாய்த் தாளை எடுத்து மங்கத்தாளிடம் நீட்ட நெருங்கினான்.'' போன வருஷம் வந்தாப்பிலேயே ஆத்தாளும் மகளும் வேலைக்குக் கோழிகூப்பிட வ ந் தி ட ணு ம் என்று சொல்லி ரூபாயை நீட்டினான்.

மங்கத்தாவின் கைகள் ஏன் அவ்வாறு நடுங்கித் தீர்க்கின்றன? —'' கோழி கூப்பிடுங்களாங்காட்டி?'' என்று வினாவினாள் கிழவி.

சிரித்து விட்டான் வீரமணி. ''பல்லுப் போனாலும் சொல்லுப் போகாதவளாச்சே நீ, மங்கத்தா? மம்மலிலே கோழி கூவினடியும் புறப்பட்டுப்பிட வேணும். அவ்வளவுதான். இந்தா, பிடிபணத்தை!'' என்று மேலும் ஒட்டி நடந்து பணத்தை நீட்டினான்.

''சாமியோ, அஞ்சு ரூபாய்க்காசு குடுங்க போதும்!''

''ஆத்தாளும் மகளும் நீங்க ரெண்டு பேராச்சுதே? ஆளுக்கு அஞ்சு ரூ பா ய் அச்சாரம்தானே மாமூல் வாடிக்கை?''

''அது சுத்தம் தா ங் க; ஆனா கூலிக்கு வரப் போறவ நானு ஒருத்தி மட்டுந்தானுங்களே, ஆண்டே?''

ஏன், ஒம் மக செல்வி வராதா?''

“வராதுங்க ”

“ஏனாம் ?”

“அது சமைஞ்ச பொண்ணாச்சுங்களே ’ சின்ன எசமானரே ?”

“ஒங்க சேரியிலேருந்து கைவீச்சுக் குறையாம, ஆளான குட்டிங்க வருசா வருசம் வந்துக்கிட்டுத் தானே இருக்காங்க !

“எம்மவ வரவாய்க்காதுங்க, சாமி. அந்தப்பேச்சை அந்தமட்டோட நிப்பாட்டிக்கங்க; உங்க வூட்டு உப்பைத் தின்னு வளர்ந்தது எங்க குடும்பம். அந்த நன்னியைத் திரிகரணசுத்தியோடே கும்பிட்டுக்கிட்டு இருப்பேன். ஒரு அஞ்சு ரூவாய்க் காசைத் தூக்கி வீசிப்போடுங்க ; பொறுக்கிக்கிடுவேனுங்க, சின்னமுதலாளி !”

வீரமணியின் அந்தம் நிறைந்த முகம் முகில்வானமாகக் கறுத்தது. கிழவியின் பேச்சில் மூழங்கிய கண்டிப்பு அவன் வாயை ‘லேஞ்சினால் கட்டிப்போட்டது. ஆகவே, ஓர் ஐந்து ரூபாய் நோட்டை, வரவழைத்துக் கொண்டு புன்னகையுடன் கிழவியிடம் கைநீட்டிக் கொடுத்து விட்டான். பயணம் சொல்லிக் கிளம்பியவன், நின்றான்.

“ஏனுங்க சாமி, நின்னிட்டிங்க ?”

“ஒரு சேதி காதிலே விளுந்திச்சே, மெய்தானா ?”

“சொன்னாத்தானே புட்டுப்பார்த்தும் புட்டுவச்சும் செப்ப ஏலுமுங்க ?”

“செல்விக்கு தை பிறந்ததும் கண்ணாலமாமே ?”

“ஆமாங்க !”

''அப்படீன்னா, குளமங்கலத்துக் குப்பன் கொடுத்து வச்ச இளசுதான் !''

''மானாபிமானம் கொண்ட நீங்க, அப்பிடி அடாவடியாய்த் தூக்கிப் போட்டுப் பேசுறதானது நாயம் இல்லீங்களே ?''

"மங்கத்தா, நீ என்ன சொல்றே?"

''இனிமேத்தானுங்க சொல்லப் போறேன், வசமாய்க் கேட்டுக்கிடுங்க : இந்தச் சம்பந்தம் சாடிக்கையிலே, கொடுத்து வச்சது எங்க செல்விக் குட்டிதானுங்க. மஞ்சிவிரட்டு கழிஞ்சு, பரிசம் போட்டு, ஊர் வெத்திலைப் பாக்குவச்சு, கெட்டி மோளம் கொட்ட வேண்டியது தாங்க பாக்கி ! — மாப்பிள்ளைக்காரவுக எங்க குடிக்கு மேலே ரொம்ப வீச்சுங்க ! என்னமோ ஆயி அங்காளம்மை தான் இந்தக் கொடுப்பினைக்குத் தடம்காட்டியிருக்கா!..''

வீரமணி இன்னமும் சிலையாகவே மலைத்து நிற்கின்றான் !

''சின்ன முதலாளி, புறப்படுங்க !''

''ஊம் !''

புறப்படப் பாதங்களை நகர்த்தியவன், என்னவோ சொல்ல, அல்லது என்னவோ கேட்க நினைத்துச் சிறுபொழுதிற்கு மௌனம் பேணி நின்றான். அவன், வீரமணி.

கிழவி தலையை ஒரு முறை சிலுப்பிக் கொண்டாள். ஈறும் பேனும் அவளைச் சும்மா விடுமா ? ஆனாலும், அவளுக்கு விதரணை கூடுதல். ''சாமியோ !'' என்று விளித்திட்டாள். ''ஒங்களுக்கும் தைக் கெடுவிலே கண்ணாலம் கூடப் போவுதாமுங்களே ? பொண்ணு

அயித்தைவூடா ? இல்லை, அம்மான் வீடுதானுங்களா ?'' கேள்விக்கணை கிழவிக்குச் சொந்தம். அந்தச் சொந்தத்திலே, பார்த்திபனின் குறி இலக்கு பந்தம் தொண்டாடத் தவறவில்லையே !

''ஏதோ ஒரு வீட்டுக்கு என்னை மாப்பிள்ளை ஆக்கிப் பிடவேணும் என்கிறது என் அப்பாவோட ஆசையான ஆசை !''

''அது தரும நாயம், தானுங்களே ?''

அந்தத் தருமநாயம், என்னோட நெஞ்சான நெஞ்சுக்கு தருமமாக உறைக்க வேணுமில்லே ?''

''சத்தியமுங்க !''

''சரி வரட்டுமா, மங்கத்தா ?''

''அப்படிச் சொல்லப்ப'டாதுங்க. ஒரு காலத்திலே, ஒரோரு சமயத்திலே நானும் ஒங்களைத் தோள்மேலே போட்டு 'ஆராரோ' பாடி ஒங்களைத் தூக்கப்படுத்தி யிருக்கேனுங்க ! போயிட்டு வரரேன்னு சொல்லுங்க. வாய்ப்பேச்சுக்கு வரணுமுங்க; ஆமா, அப்படீன்னா, உங்க கண்ணாலத்திலே உங்க முடிவுதான் என்னாங்க, சின்ன ஐயா ?''

''மங்கத்தா, வினாத் தெரிஞ்ச காலந்தொட்டு, என்னோட நெஞ்சைத் தொட்டு, என் நெஞ்சிலே தெய்வத்துக்குச் சமதையாய் கொலு இருக்கிறவ ஒரே ஒருத்தியேதான் ! அவளே தான் என்னோட பெண்டாட்டி !''

அப்பன்னா, அந்தப் புண்ணியவதி கொடுத்து வச்சவதானுங்க !''

''என் கனவு பலிச்சிடுச்சின்னா, நான்தான் கொடுத்து சவன் ஆவேனாக்கும் !''

"அம்மாங்கொத்த ஒசந்த இடத்துத் தேவதையுங் களா அந்தப் பொண்ணு ?"

"பின்னே ? ..."

"ஆத்தாடியோ !"

"அவள் வெறுந் தேவதையோ, இல்லாட்டி, வெறுந் தெய்வமோ மட்டுமில்லே ! ... என் நெஞ்சிலேயும் நினைவிலேயும் அல்லும் பகலும் விளையாடிக்கிட்டு இருக்கிற அவள், என்னோட கைப்பிடிக்கு எட்டாத தொலைவிலே இருந்துக்கிட்டிருக்களாக்கும் ! அவள் கொம்புத்தேன் ! ... ஆமா, அவள் கொம்புத்தேனேதான் ! ஆனா ஒண்ணு ; நான் முடவன் இல்லை !"

"அம்மாடியோ !"

மங்கத்தா சிரித்தாள்.

வீரமணியின் உள்மனம், அழுகிறது.

"நான் சொன்னாத் தட்டமாட்டீங்க ! — அந்தப் பொண்ணான பொண்ணுயாருங்க ? சொன்னீங்கண்ணா, நான் அந்தப் புண்ணியவதியோட பேரை என் மககிட்டே சொல்லுவேன். பேரைக் கேட்டுக்கிட்டு, கும்மாளம்போட ஆரம்பிச்சிடுமுங்க எம் மகள் செல்லிக்குட்டி ! சொல்லுங்க சாமி, சொல்லுங்க !"

"மங்கத்தா, அந்தப் புனிதமான பேரை — அந்தப் புண்ணியமான பேரை நானே வலியவந்து உங்கிட்டே சொல்லாமல் தப்பவும் முடியாது ! ... போயிட்டு வாரேன் ! ..."

"ஐயாவே !"

"என்ன, மங்கத்தா ?"

"அழுறீங்களா ?"

"இல்லையே ? — சிரிக்கிறேனே !"

நிழல் மறைகிறது !

ஒன்று ! ...

இரண்டு ! ...

மூன்று ! ...

சொட்டுக்கள் சொட்டின !

# 5

“ஆத்தா!”

“என்னாடி, மகளே?”

“இம்மாம் பொழுதுக்கு என்னா செஞ்சிக்கிணு இருந்தியாம்?”

“நான் என்னத்தைச் செய்வேனாம்?”

“பின்னே?”

“பின்னே என்ன பின்னே?... ஒரு காலத்திலே ஒன்னோடே ஒண்ணடி மண்ணடியாய் இருந்து மண்ணு வீடு கட்டி விளையாடிக்கிட்டு இருந்தாரே உன்னோட சின்ன எசமான் அவருதான் இம்புட்டு நேரமா தன்னோட கதை காரணத்தையெல்லாம் மனம் விட்டுச் சொல்லிக்கிணு இருந்தாராக்கும்!”

“அப்பிடியா ஆத்தா? என்ன கதையாம் அது!”

“சின்ன முதலாளியோட கண்ணாலக் கதையாக்கும்!”

“அப்படின்னா, நம்ம சின்ன ஐயாவுக்குக் கண்ணாலம் திகைஞ்சிடுச்சாமா?”

“என்னடி பொண்ணே அப்பிடிக் கேட்கிறே?”

“ஆத்தா, ஆத்தா! நம்ப சின்னக் கங்காணியோட தங்கமான மனசைக் கொள்ளை கொண்டிருக்கிற அந்தப் பாக்கியவதி யாராம் ஆத்தா? அந்தப் புண்ணியவதியோட பேரு என்னவாம்? சொல்லு ஆத்தா, சொல்லேன்!”

“அந்தப் பேரை அவரு சொல்லியிருந்தால், நான் இந்நேரத்துக்கு அதை உங்காதிலே ஓதி விழுக்காட்டாமல் இருந்திருப்பேனா, என்ன ?”

“அம்புட்டுத்தானா ?”

“ஆமா அம்புட்டேதான் !...ம்... யாரோ ஒரு தேவதையோ, இல்லே ஒரு தெய்வப் பொண்ணோ உன் சின்ன முதலாளியோட பொன்னான மனசிலே பூவாக் குடிகொண்டிருக்களாம்! ஆனா, அவ எட்டாக்கைக் கொம்புத்தேனாக்கும் ?....

“நம்ம சின்ன எசமானரு மனசு வச்சாக்கக் கைக்குக் கிட்டாத கொம்புத்தேன் ஒண்ணு இந்தச் சுற்று வட்டைப் பதினாறு நாடுநகரத்திலே இருக்க வாய்க்குமோ ஆத்தா ? சங்கதி ஒரே மூடு மந்திரமாயில்ல இருக்குது, ஆத்தாளே?”

“அந்த மூடுமந்திரம் என்னிக்காச்சும் ஒரு நாளைக்குச் சிதம்பர ரகசியமாக ஆகாமலா போயிடப் போகுது ? ஆனா, ஒரேயொரு சங்கதியை மட்டும் கோடி காட்டினாக நம்ப சின்னவரு ?”

“சொல்லு, ஆத்தா !”

“ஏண்டி மகளே இப்படிப் பறக்கிறே! தன்னோட மனசைக் கொள்ளைக் கொண்டிருக்கிற அந்தத் தங்கப் பெண்ணோட பேரை ஒரு நாளைக்கு அவராகவே எங்கிட்டே வந்து சொல்லிப்பிடுறதாகவும் வாக்குச் சொல்லியிருக்காராக்கும் !”

‘ஓகோ, என்னோட சின்ன எசமான் அப்படியொரு திருப்பத்திலேயா கதையை மடக்கி நிறுத்திப்புட்டாரு?’— வெடிக்கத் துடித்துக் கொண்டிருந்த அழகுக்குட்டி செல்லியின் கன்னிநெஞ்சினின்றும் விம்மல் பொடித்தது.

வெள்ளிச் சூடுகாட்டம் மட்டுப்படவில்லையே!

# 6

அப்படியா, ஆத்தா ?"

செல்வியின் கன்னி நெஞ்சினின்றும், கன்னிகழியாப் பெருமூச்சொன்று எட்டுக் குடிசைகளுக்குக் கேட்கிற பாவனையில் விம்மிப் புடைத்து வெடிக்கத் தொடங்கு கிறது !

தாய்க்கிழவி அடிநெஞ்சிலே தீத்துண்டம் பட்ட பாங்கிலே, ஓர் இமைப்பொழுது துடியாய்த் துடித்துப் போனாள். அடியே ! ஒன்னைத்தாண்டி ! நீ எதுக்குடி இப்படிக் கொம்பேறி மூக்கனாட்டம் பெருமூச்சை முட்டிப் புடிச்சுத் தள்ளுறே ? என்னவோ புறம்போக்குச் சென்ம மாய்ப் பொறந்திட்ட பறைச்சியான ஒன்னைத்தேடி ஓடியாந்து, வெத்திலை பாக்கு வச்சு அழைச்சு, ஒங்கழுத் திலே ஊருக்கு ஒசந்த அந்தப் புள்ளை தங்கத் தாலியைக் கட்டிப்புடுவார்னு கோட்டை கட்டிக்கிட்டு இருக்கிற வளாட்டமில்லே தோணுது ஒம்பெருமூச்சைக் கேட்டாக்க ?... போடிபோ, போக்கணங்கெட்டவளே !'• —வீர்யமான ஆத்திரம் முழங்கிட ஏங்கினாள் மங்கத்தா.

சேரிச் சொறிநாய் ஊளையிடுகிறது.

"ஆத்தாளே !

மகள் செல்லி வீரிட்டுக் கூவினாள் ; "ஊர் நாட்டுக்கு ஒசந்த என்னோட சின்னக்கங்காணி நாளைக்கே எங்கழுத் திலே தாலியைப் பூட்டி மூணுமுடிச்சுப் போட்டு டுவார்னு நான்மனக்கோட்டை கட்டிக்கிணு இன்னிக்குக் குந்திக் கிடக்கிறதாய் எம்மேலே நீ தப்புப்படிச்சு, என்னை நீ "நைச்சியம்' பேசி நையாண்டி பண்ணுற இரக்கமத்த

ஒம்புட்டு வாய்ப்பேச்சையும் ஏச்சையும் இப்பதைக்கு இம்மட்டோட நிப்பாட்டிக்கிடு, ஆத்தா!... ஆனா ஒருகாலத்திலே, சின்ன எசமான் எங்கழுத்திலே விளையாட்டுத்தாலி கட்டி மனசு பூரிச்சுப்போன ஒசத்தியான அந்தப் புண்ணியத்தை மட்டுக்கும் நீ மறுந்துப் பூடாதே!— ஆமா, செப்பிப்பூட்டேன்!'' ஓலமிட்டாள் கன்னி. இளமான்.

ஊளைச் சத்தம் இன்னமும் ஓய்ந்த பாடில்லை.

மங்கத்தா மதிகலங்கிக் கதிகலங்கினாள் தொண்டை அடைத்தது. பெண்ணை நேருத்திரமாய்ப் பார்வையிடலானாள். காய்ந்த உதடுகள் விலகின. ''குப்பை மேடு எப்பவுமே கோபுரமாக உருமாறவவிக்காதாக்கும் என்கிற அதிசயச் சுத்தமான அந்த வேடிக்கை விதியை நீ மறந்துப்புடாம, முடிபோட்டு வச்சிக்கிடு! ஆமா, சொல்லிப்புட்டேன்!'' என்று வீறு கொண்டு முழக்கமிடலானாள் கிழவி.

''குப்பைமேடு கோபுரமாக ஆக வாய்க்குமோ, வாய்க்காதோ எனக்குத் தெரியாது!— நான் சின்னஞ் சிறிசு! ஆனா, நான் நினைச்சா— நான் வைராக்கியமாய் மனசு வச்சா, என்னை நானே கோபுரமாக ஆக்கிக்கிட முடியுமாக்கும்!'' சவால் விட்டாள் செல்லி.

''அப்பிடிக் கோபுரமாக ஆக உன்னாலே இந்தச் சென்மத்திலே ஏலுமாடி பொண்ணே?''

''ஏன் முடியாது? நல்லாய் முடியும்! மேளத்தாளத்தோட முடியும்! கொட்டு முழக்கோட முடியும்!... ஆமா!''

''அடிபாவி!'' என்று வீரிட்டு அலறிவிட்டாள் மங்கத்தா.

''நான் இதுமட்டுக்கும் பாவியிலேயும் கேடு கெட்ட பாவியாய் இருந்ததென்னமோ பொய்யே இல்லேதான்!— ஆனா, இது முதற்கொண்டு நான்தான் புண்ணியவதி!... எம்புட்டு நெஞ்சிலேயும் நினைப்பிலேயும் சதா விளையாடிக்கிட்டிருக்கிற என்னோட சின்ன முதலாளியே தான் இனி எனக்குப் புருசன்! முத்தானை போடுற பொசிப்பு எனக்கு விதிச்சிருந்திச்சின்னா, அவருக்கேதான் இந்தப் பிறப்பிலே முந்தானை விரிப்பேன்! ஆத்தா அங்காளம்மை பேரிலே ஆணை இது!''

மங்கத்தா அடிவயிற்றில் அடித்துக் கொண்டு கதறினாள்'' இந்தப் பாளத்த, பாவமான பேராசை எந்தத் தெய்வம் திருவுளத்துக்குமே அடுக்காதடி, பொண்ணே!''

''ஆத்தாளே!'' என்று வீரிட்டாள்.

''ஆமாடியோ! மறுதக்கமும் செப்பிப்பிடுறேன்! — உன்னோட இந்த அநியாயமான — மோசமான — பாவமான பேராசை எந்தத் தெய்வந் திருவுளத்துக்குமே அடுக்காது; அடுக்கவே அடுக்காதடி, ஆத்தா!''

மஞ்சள் பூசிய முகத்திடை ரத்தம் கன்றிச்சிவந்திட, அள்ளிச் செருகப்பட்ட கொண்டையைவிட்டு மருக் கொழுந்து ஒன்று சிதறி வீழ்ந்திட, செல்லிக்கன்னி விண் முட்டி மண் முட்டச் சிரித்தாள்; மண் முட்டி, விண் முட்டிடவும் சிரித்தாள்! ''எதுபாவம்? பேராசை எது? பேராசை எது? நம்ம குலச்சாமியான நந்தனுக்கு வழி மறிச்சிக் கிடந்த நந்தி வழி விட்டுச்சுதாமே அது பாவமா?... இல்லே, வழி கொடுத்த தெய்வத்தை அந்த நந்தன் வழிபட்டுக்கும்பிட்டது பேராசையா? ஊம், பதில் சொல்லிப் பேசு, ஆத்தாளே!'' என்று கேள்விக் கணையைத் தொடுத்துக் கொண்டே சிரிப்பைத் தொடர்ந்தாள், 'ஆளான' பூஞ்சிட்டு.

குளமங்கலத்து மாப்பிள்ளையிடமிருந்து கைமாற்றாக வாங்கி வந்த அரிசி முடிச்சு முடிச்சவிழ்ந்து அலங்கோலமாகவும் பரிதாபமாகவும் கிடக்கிறது !

கனவு காணாமலே விழிப்புப் பெற்றவள் போன்று, கண்களை மூடிமூடித் திறந்தாள் மங்கத்தா ; காலாடியில் கிடந்த அரிசி முடிச்சில் சருவச் சட்டியில் கொட்டி வைக்கப்பட்டிருந்த அரிசியையும் கொட்டி முடி போட்டாள். "மகளே ! இடம் தப்பிப் பொறந்திட்ட அதிசயப் பொண்ணு போலே நீ !—ஆனதினாலே, இனி நீ ஒன்னோட மனசுப்படிக்கு நடந்துக்கிடு ! ... ஆனா, நான்; ஒன்னைச் சுமந்து பெத்த ஆத்தா என்கிற சொந்தத்தை மட்டிலும் துண்டு முறிச்சுப் போட்டுப்புடாதேடி, ஆத்தாளே !" என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

# 7

“இந்தா, இன்னொரு அஞ்சு ரூவா; பொறுக்கிக்க இது ஒன் சமைஞ்ச பொண்ணுக்கு அச்சாரம்! நாளைக்கு விடிவெள்ளி கிளம்பறத்துக்கு முந்தியே நீ உன் அருமை மகளைக் கூட்டிக்கிட்டு நிலக்கடலை பிடுங்கிப்போட எங்க கொல்லைக் குடிக்காட்டுக்குக் கட்டாயம் வந்தாக வேணும்!” என்ற ஆணையைப் பிறப்பித்தார் கங்காணி. கங்காணியா, இல்லை, கொக்கா?

மங்கத்தா, பற்கள் ‘தேசாந்தரம்’ போய்விட்டதால், ஈறுகளை வெஞ்சினம் தாளாமல் கடித்துக் கொண்டிருக்கிறாள்.

கவரிமானாகப் பாய்ந்து வந்தாள் செல்லி. “ஆண்டே கும்பிட்றேனுங்க!” என்று சொல்லிக் கும்பிடு கொடுத்தாள். நயமான—விநயமான பாவனைதான்!

கங்காணிக்குப் பெருமை தாங்கவில்லை. முன்வரிசைத் தங்கப்பல்லில் அட்டகாசமான சிரிப்பு ஆடம்பரமாக விளையாடியது. “செல்லிக்குட்டி, அந்தாலே கிடக்குதே சல்லி அதைப் பொறுக்கிக்கிட்டு, விடிகாலம்பறவே எங் கடலைக் கொல்லைக் கூலி வேலைக்கு வந்திப்பிடு. உன் ஆத்தாக்காரிக்கு உண்டான அச்சாரத்தை நேத்திக்கே எம் மகன் கொடுத்திட்டான்! கண்டிப்பாய் வந்திடணும்; புரிஞ்சிருச்சா, புள்ளே?” என்று கேட்டார். வெள்ளிப் பூணிகழி சுழல்கிறது.

செல்லி நையாண்டிச் சிரிப்பை வெடித்தாள். “ஐயா, பெரிய எசமானரே! ... வேலைக்கு வராட்டி என்னா

செய்வீங்களாம் ?'' என்று நிதானமாக்குக விசாரித்தாள் அவள்.

கங்காணியின் நரைதிரண்ட முறுக்கு மீசை, முறுக்க விழாமலேயே துடிக்கத் தொடங்கியது. ''என்ன செய்வேனா ?'' என்று கொக்கரித்த வண்ணம் பாய்ந்து வந்த அவர் செல்லியின் கைகளை எட்டிப் பற்ற முனைந்தார்.

செல்லி பிடி கொடுப்பாளா ?—''ஐயா, பெரியவுகளே மருவாதை குடுத்து மருவாதையை வாங்கவேணும் !... கும்பிடு குடுத்துக் கும்பிடு வாங்க வேணுமென்கிறதுதான் மரியாதைக்கும் ! காந்திச்சாமி செத்துச் சிவலோகப் பறிஞ்சிட்டதாலே, ஒங்களை மாதிரியான பெரிய மனுஷங் களுக்கெல்லாம் நாங்க இளக்காரமாகப் போயிட்டோ மாக்கும் ?...ரோசத்தோடவும் மானத்தோடவும் நான் செப்பிறத்தைக் காது குடுத்துக் கேட்டுக்கிடுங்க ; நீங்க எனக்கு மாமனார் முறை ஆனதாலேதான், இந்த மட்டுக்கும் மரியாதை கொடுக்கிறேனாக்கும் !...இந்தாங்க, எங்க ஆத்தாளுக்கு எங்க சின்ன எசமானர் தந்த அச்சாரம் ரூவா அஞ்சு ! பொறுக்கிக்கிடுங்க ; எனக்காக வீசின பணத்தையும் மேனியை விளச்சுப் பொறுக்கிக் கிணு, வந்த வழியே திரும்பிப் பார்க்காமல் நடையைக் கட்டுங்க !...'' என்று எச்சரித்தாள் அவள்.

அவள் செல்லி.

''என்னாடி சொன்னே தேவடியாச்சிறுக்கி ?... நானாவது உன் மாமனாவது ? என்னா ஒனக்கு ?''

கங்காணிக்குக் கோபம் வந்தால், காடு கொள்ளாது தான்!- அக்கரைச் சீமைக் கோடுகளில் வளர்க்கப்பட்ட கோபம் அல்லவா ? மீசை துடிக்க, பதினாறு வயசு காளை

பாய்ந்து, செல்லியின் கைகளைப் பற்றிய மறு இமைப் பில், ''ஆ !'; என்று வீரிட்டு அலறினார் கங்காணி.

ருத்ரகாளியாகச் சிரிக்கிறாள் செல்லி !...

விடுதலைப் பறவையாகச் சிரிக்கிறாள் செல்லி !

கங்காணியின் கன்னங்கறுத்த முகத்தில் எச்சில் துளிகள் சொல்லிச் சொல்லி வழிந்து கொண்டேயிருந்தன பாவம் !...

செல்லி சுய உணர்வை மீட்டுக் கொண்டாள். கண்கள் வழிந்தன. "என்னைச் சபிச்சுப்பிடுங்க!'' என்று கைகூப்பிக் கெஞ்சினாள் கன்னி. இப்பொழுது அவள் ருத்ரகாளி அல்லவே !'' நான் ஒங்க அருமை மகனுக்கு வாக்கப்படப் போற சொக்கப்பச்சைங்க ! மறந்துப் புடாதீக !''

கங்காணி பாவம், குனிந்த தலையை நிமிர்த்தவே இல்லை ! — மானம் தூக்குக் கயிற்றிலே குற்றுயிரும் குலைஉயிருமாக ஊசலாடிக் கொண்டிருந்தது.

பொடியன் மூக்கனுக்குத் தப்புத்தாளத்தோடு பாடக் கூடத் தெரியும்; நாங்க புதுசாக் கட்டிக்கிட்ட சோடி தானுங்க ! ''...

# 8

அப்போது :

ஐயா ! கங்காணி ஐயாவே !''

துவாலையை ஓர் அருவருப்புடன் தோளில் மிடுக் கோடு போட்டுக் கொண்டவராக, கம்பீரம் ரவைகூட கெடாமலேயே தலையை ஆணவச் செருக்குடன் நிமிர்த் தினார் கங்காணியார். ஓ! அந்த எச்சில் துளிகள் மாயமாய் மறைந்தனவோ ? — ''நீயா ?'' என்றார் அவர்.

''பின்னேயாராம் ? — ஆமா, நானேதான் !... சேரிச் செல்லிக்குட்டியைக் கூலி வேலைக்கு வரப்பண்ணிப்பிடு றதாய் நீங்க எங்கிட்டே பந்தயம் கட்டிக்கிட்டு வீராப் போடே ஓட்டமும் நடையுமாய்ப் பறிஞ்சு வந்தீங்களே? —என்னா ஆச்சு ?— நீங்க எங்கிட்டே மட்டும் தோத்துப் போயிடலே ! என்னோட அன்பான செல்லிப்பொண்ணு கிட்டவும் நீங்க மண்ணைக் கவ்விப்புட்டீங்களாக்கும்!''

''மகனே !''

''உங்க மகன் செத்துப்போய் நாழி ரெண்டுக்கு மேலே ஓடிப்புடுச்சுங்க, கங்காணியாரே !''

''ஐயையோ, மகனே ! உன் வாயாலே இனியொரு கடுத்தம் அப்படிச் சொல்லிப்பிடாதேடா, என் ராசாவே! நீ இல்லாட்டி, அப்பாலே, எனக்கு ஊர் ஏது ! ஒலகம் ஏது ?''

கங்காணி சின்னக் குழந்தையைப் போலே வாய் விட்டு அழுதார் !

இப்போது ;

வீரமணி பெரிய விதியைப் போலே சிரித்தான் !

# 9

மறுகணம் :

''மாவாவே !''

ஈரல்குலை நடுநடுங்க, கண்ணீரும் கம்பலையுமாக ஏறிட்டு விழித்தார் கங்காணி.

அங்கே—

மிகவும் நூதனமானதோர் ஆறுதலுடன், வைராக்கியச் சிலையாகக் குறுக்கு மறித்து வந்து நின்றாள் செல்லிக்குட்டி. ''மாமாவே ? உண்மையான— மெய்யான — பரிசுத்தமான அன்புக்குக் கொடுக்கத்தான் தெரியும் ! ஆனதாலே இப்ப நான் என்னையே உங்க மகனுக்கு உங்க தங்க ராசாவுக்கு கொடுத்திடப் போறேனுங்க!'' என்று உணர்ச்சி வசப்பட்டு விம்மிய வளாக, அடிமடியிலிருந்து மஞ்சள் முடிபோட்டிருந்த பழைய சணல் கயிறு ஒன்றை எடுத்துப் பிரித்தாள். ''மாமா ! இது என்னான்னு தெரியுமுங்களா ? என்னோட சின்ன எசமானரு அந்த நாளையிலே எனக்குக் கட்டின விளையாட்டுத் தாலியாக்கும் !.... இதே விளையாட்டுத் தாலியை உங்க அருமை மகன் இப்ப என்னோட கழுத்திலே நிசத்தாலியாகவே கட்டப் போறாங் களாக்கும்!... ஒங்க அருமை மகன்காரர் ஒங்களுக்கு வேணும்னா, எங்க ரெண்டு பேரையும் நல்ல மனசோட நீங்க மனப்பூர்வமாய் ஆசீர்வாதம் செஞ்சாக வேணு மாக்கும் ! ம்... என்னா சொல்லுறீங்களாம் ?'' முழங் கினாள் செல்லி. செல்லிதானா அவள் ?

வீரமணி இப்போதும் விதியெனவே சிரிப்பைத் தொடர்கிறான்; தாலிக்கு மூன்று முடிச்சுக்கள் இடுகிறான்!

கங்காணியின் தலை உயர்ந்தது. வீரமணி பிள்ளைக் கனியாக பெற்ற நெஞ்சிலே விளையாடிக் கொண்டிருக்கிறான்!

"ஆத்தா மகமாயி புண்ணியத்தாலே நீங்க ரெண்டு பேரும் புருஷன் பெண்சாதியாய் சகல சௌபாக்யத்தோட தீர்க்காயுசாய் வாழவேணும்!" கண்கள் பொழிந்தன. மேனி நடுக்கம் ஓயவில்லை.

"கங்காணி அய்யா இப்பதான் மெய்யாவே பெரிய மனுசரு!" வாண்டு மூக்கன் 'ஜே!' போட்டான்!

# 10

**பே**ரதிசயத்தின் பேரானந்தக் காட்சியல்லவா அது ?...

வீரமணியும் செல்லியும் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றனர்.

அவன் அவளை நோக்கினான் !

அவள் நாணிக் கண் புதைக்கிறாள்!—அதே கணத்தில், அவள் வாய் மிக லாகவமாக அசைபோடத் தொடங்குகிறது, மறுகணம், ஆனந்த வெறியுடன் பற்கள் இயங்குகின்றன !

# 11

மறு இமைப்பிலே

அதோ !...

சிதறி ஓடிய ஒன்றிரண்டு குன்றிமணிகளின் கழலடியிலே, அடிசாய்ந்த மரமாக மண்ணில் சாய்ந்துவிட்டாள் செல்லி நுங்கும் நுரையுமாக வாய் பொங்கியது. பீறிட்டுத் தெறித்த ரத்தத்துளி ஒன்று அந்தத் தாலி மஞ்சளுக்குப் பொட்டு இட்டது போலும் ?

''ஐயோ, செல்லிக்குட்டி !''...

வீரமணி அலறிக் கதறினான் !

கோலமலர் விழிகள் இரண்டையும் அகலமாகத் திறந்தாள் வீரமணியின் செல்லி. விம்மல் வெடித்தது' ''சின்ன எசமான்! நீங்க எப்பவுமே பெரியமனசு கொண்ட புள்ளிதான் ! அதே பெரிய மனசோடவே, ஒங்களை ஏய்க்கப்போற ஒங்க செல்லிக்குட்டியைச் சமிச்சு மாப்புக் கொடுத்துப்பூடுங்க !— சின்ன எசமானரே ! நீங்க அடிக்கொருவாட்டி புகழ்ந்துக்கிட்டிருந்த அந்தப்புண்ணியவான் காந்தி இம்மாம் நேரத்துக்கு உசிரோடவே இருந்திருந்தாக்க, ஒருவேளை, நான் ஒங்களை 'மச்சானே !' அப்படின்னு வாய் திறந்து, வாய்குளிரச் சொந்தம் கொண்டாடி விளிச்சு, உங்க மடியிலே தலைசாய்க்க எனக்கு லவிதம்' கைகூடியிருக்குமோ, என்னமோ ? ஐயோ ! .. அந்தக் காந்தி செத்துச் சிவலோகம் பறிஞ்

சிட்டாங்களே?...ம்.... அறியாப் பருவத்திலே, நீங்க எனக்கு நெசமாவே தாலி பூட்டிட்டீங்க! — மெய்யாலுமே இந்தச் செல்லிக்குட்டி புண்ணியம் செஞ்சகுட்டியேதான்! ஆ ம்... சின்ன எசமானரே !... எஞ்சாமியே !...ம்... ம் மச்!" அழகான விழிகள் அழகாகவே நிலைகுத்திவிட்டன.

கங்காணி விம்முகிறார் !

தாய் ஓலமிட்டாள். "வாழ்ந்து காட்டிப்புட்ட நீ கடைசியிலே, செத்தும் காட்டிப்புட்டியேடி, மகளே !...'

# புயலோடு புயலான ஓர் அகல் விளக்கு !...

## 1

அந்தப் பயங்கரச் சேதி, பயங்கரமான காட்டுத் தீயாகத் திக்கெட்டிலும் பரவி விட்டது ! ...

வடக்கே, அரசாங்கத் தொடக்கப் பள்ளிக் கூடம் தொடங்கி, தெற்கே நொண்டிப் பிள்ளையார் 'சிவனே' யென்று அரசாட்சி நடத்திக் கொண்டிருந்த அங்காளம்மன் கம்மாய்க்கரை அரசமரத்தடி முடியவும், மேற்கில் ஊராட்சியைச் சார்ந்த காந்தி திடலிலிருந்து, கிழக்கே கிராமக் கைத்தொழில் வாரியத்தோடு தொடர்பு கொண்ட கயிறு திரிக்கும் தொழிற்கூடம் வரையிலும் விரிந்து பரந்திருந்த குளமங்கலம் குடியிருப்புப் பூராவுமே திமிலோகப் படுகிறது ! ...

வீரமணியைக் காணவில்லை !

வீரமணி, சுந்தரியின் வீரமணி எங்கே போய் விட்டான் ? ...

சலனம் அடைந்து, களைதப்பிப் பரிதாபமாய்க் கிடந்த மச்சு வீட்டின் திட்டி வாசலில் ஆண் பிள்ளைகள், பெண்டு கள் மற்றும் நண்டு சுண்டுகள் அடங்கலான ஊர்ச்சனங் களின் மனிதத்தனம் ஓங்கிய நெரிசல் இப்போது மிஞ்சத் தலைப்படுகிறது.

ஒழுங்கைக்கரைப் புளியந்தூரடித் தொழுவத்திலே அவிழ்த்து விடப்பட்டிருந்த வெள்ளைக் கிடாரி, பசுத் தாயின் 'பால்' மடியை முட்டி முட்டிப் பாலமுதம் பருகிக் கொண்டிருந்தது.

ஊமை வெயிலுக்குச் சூடு, சுரணை பிறந்திருக்கலாம்.

திடீரென்று—

கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

சுந்தரி, வீரமணியின் சுந்தரி கழுத்துத்தாலி ஏங்கித் தவித்து ஊசலாட, மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கிக் கொண்டே விம்மி வெடித்தவளாகத் தலைவிரி கோல மாக வந்து நின்றாள்!—'' ஐயையோ! என்னோட ஆசை மச்சானைக் கண்ணுப்புறத்திலே காணவே இல்லைங்களே? மச்சான்காரவுக என்ன ஆனாங் கண்ணும் என் புத்திக்கு மட்டுப்பட வாய்க்கலீங்களே?''— தேம்பாமல் கண்கள் அழ, தேம்பித் தேம்பி வாய் அழுதது. கண்ணீரும் வேர்வையும்தான் வாழ்க்கைச் சோதனைக் கான சவால்களா? கசங்கி வாடிய மகிழம்பூச் சரத்தி லிருந்து நாலைந்து பூக்கள் கொசுறு காட்டிக் கொட்டின. நெற்றிக் குங்குமத்தைச் சுட்டித்தனமான கெட்டியோடு பாதுகாத்துக் கொண்டு முத்துக்களை மாலை தொடுக் கிறாள் அவள்.

அவள்; சுந்தரி!—வீரமணியின் சுந்தரி அல்லவா?

சின்னாயி மகள் சின்னம்மா திரும்பி வந்து கைகளை விரித்தாள்.

சேரிச்சோம்பான் கைத்தடியை ஈசான்ய முடுக்கில் ஆத்திரம் தூள் பறக்க வீசி விட்டுச் செருமலானான்.

பனங்குளம் அப்பத்தாக்காரி 'வீடு போ, போ' என்றதை லட்சியம் செய்து, 'காடு வா, வா' என்றதை மட்டும் இலட்சியம் செய்யாமல் வந்து நின்றதும்தான் மூக்கைச் சிந்தி எறிந்தாள்; எம் பேராண்டி வீரமணி இளசு அக்கம் பக்கம் பதினாறு ஊர் நாட்டிலேயும் அசல் சொக்கப் பச்சைத் தங்கம்னு பேரெடுத்ததாச்சே!—ஆத்தாடி சுந்தரியோ!.. உம் மச்சானுக்குள்ளே நீயும் உனக்குள்ளே உன் மச்சானுமாய்க் கூடுவிட்டுக் கூடு பாய்ஞ்சுக்கிட்டு, திருட்டி பரிகாரத்துக்குச் சில்லறைப் பொணக்குகூட இல்லாமல், கூத்துக்கும் மாளமுமாய் வாழ்ந்துக்கிட்டு இருக்கிற அருப்புருபமான சோடிங்க ஒங்க மேலே ஊரோட திருட்டிதான் பட்டுக்க வேணும்!'' நாவு தழதழக்கத் தாழ்குரலெடுத்துப் பேசினாள்; ''ஒரு சமயம், அந்நியம் அசலான் எவனாவது திடுதிப்னுவந்து புருசன்—பெஞ்சாதி உங்க பேரிலே பொச்சரிப்புப்பட்டு உட் மச்சானை மாயமந்தரம் பண்ணி மசக்கி, உம் மச்சானோட நல்ல புத்தியைக் கெடுத்துக் குழப்பிக் காடுமாத்தியிருப்பானோ, என்னமோ?''—குடுகுடு கிழவி கிடுகிடு வென்று தடபுடலாகப் பேசினாள்.

''ஆத்தாளே!... ஆத்தாளே! மகமாயி!

சூன்யத்திலே நின்றால் என்னவாம்? கூப்பிட்ட குரலுக்கு மகமாயி வரமாட்டாளா?—வரவேண்டாமா?

பூங்கரங்குவித்துப் பூவின் புனிதத் தோடு தொழுதபடி, தங்கக்கழுத்தில் ஊஞ்சலாடிய தங்கத் தாலியைப் பூவிரல்கள் நடுங்கப் பதட்டத்துடன் பற்றுதலோடு பற்றி எடுத்துக் கண்களிலும் கண்களின் கண்ணீரிலும் ஒற்றிக் கொண்டாள் சுந்தரி. மறு இமைப்பிலே, 'விசுக்' கென்று உள்ளே விரைந்தாள்; மிஞ்சியும் மெட்டியும் ஒலிக்கவும் தங்கமான வளையல்கள் எதிரொலிக்கவும் விரைந்தாள்.

நடையில் —

இருட்டைத் தேடியது மின்னொளி.

ஆசைக்கணவனைத்தேடினாள் அருமை மனையாட்டி!

'ஆசை மச்சானே! நேசமச்சானே! உங்களுக்கு என்ன ஆச்சு? நீங்க என்ன ஆனீங்க? முக்கால் நாழிப் பொழுதுக்குமுந்தி, நீங்க இந்தப்பட்டு மெத்தையிலே புரண்டுக் கிட்டு இருந்தீங்களே? எங்க பனங்குளம் நாட்டு வைத்தியர் ஐயா சொன்னமாதிரி, ஒங்களுக்கு மல்லிக் காப்பித் தண்ணி வைக்கிறதுக்காகப் பாலைக் கறந்து சூட்டடுப்பிலே வச்சுமூடிப்புட்டு, சீனிவாங்கச் சாலை முக்கத்துக்கு ஓட்டமாய் ஓடித் திரும்பியாந்து பார்கை யிலே, உங்களைக் காணலீங்களே? என்னைப் பிரிஞ்சு ஒருநாழிகை கூட இருக்க ஒப்பாதவங்களாச்சே நீங்க? நீங்க இல்லாகாட்டி, இம்மண்ணிலே நான் எப்படிங்க உயிர் தறிப்பேன்?... ஐயையோ?

ஆடிப்புனலென ஓடியது விழிநீர். திரும்பினாள். சுவரில் பெரிதாகத் தொங்கிய திருமணப் படத்தை வைத்த கண் வாங்காமல் அரைக்கணம் பார்த்தாள் திரும்பியவள் மடங்கிய தருணத்தில், கால் இடறவே, நின்றாள். நின்றவள், அப்படியே சிலையாய்ச் சமைந்தாள் மறு கணத்தில் சிலைக்கு ஜீவன்மீண்டதுபோலும்!— 'மாமன் மகனே! ஒங்க அன்புபெரிசு; ரொம்பவும் பெரிசு; நீங்க எனக்கின்னு எப்பவோ வாங்கிவச்ச இந்தப்பட்டுப் புடவையையும் ரவிக்கையையும் இப்பவாச்சம் நான் உப யோகப் படுத்த வேளை வருமா? இல்லே...?'— பளபளப் புக்காட்டி, விதியாகச் சிரித்தவாறு கிடந்த துணிமணிகளை நெஞ்சருகே மீண்டும் பார்வையிட்டாள். கண்களும் உருகியிருக்கலாம்; ஏங்கித் தவித்தாள் சுந்தரி.

முகட்டில், புறாஜோடி காதல் லீலைகளில் லயித்திருந்தது.

கணங்கள், பேய்க் கணங்களாக ஊர்ந்தன.

அப்பத்தாக்கிழவி என்னவோ சொன்னாளே ? — '... அந்நியம் அசலான் எவனாவது திடுதிப்னு வந்து, புருசன் பொஞ்சாதி ஒங்க பேரிலே பொச்சரிப்புப்பட்டு, உம் மச்சானை மாயமந்திரம் பண்ணி மசக்கி, உம் மச்சானோட நல்ல புத்தியைக் கெடுத்துக் குழப்பிக் காடுமாத்தியிருப்பானோ, என்னமோ?' — சோதனைதான் வாழ்க்கையா ?

நெருப்புப் பொறி மார்பிலேபட்ட மாதிரி துடித்தாள் சுந்தரி ! — 'அந்த நாளையிலே நானும் என் மாமன் மகன் முத்தையனும் பரிசம் போட்டுக் கண்ணாலம் செஞ்சிக் கிடவேணும்னு முடிவு செஞ்சிருந்ததை அறிஞ்ச கிழவி, ஒரு வேளை, என் மாமன் மகன் செத்துப் பிழைச்சு இங்கிட்டு வந்த துப்பைக் கேள்விப் பட்டிருப்பாளோ ? ... பொய்யாகிப் போக எங்க பழங்கதையை மனசிலே மறக்காமல் நினைப்பு வச்சிட்டுத்தான், இந்தக் கிழவி மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுறதாட்டம். ஏடாகூடமாய் அப்படிப் பேசியிருப்பாளோ ? எம்புட்டு மாமன் மகன் தங்கக்கம்பின்னா தங்கக் கம்பி ஆச்சுதே ! உலை வாயைத்தானே என்னாலே மூட ஏறும் ? ... ம் மனசுக்கு மனசுதான் சாட்சி ; மற்றதுக்குத் தெய்வம் சாட்சி இருக்குதே !' — நெஞ்சின் அலைகள் கரை சேராதா, என்ன ? — நிலைப்படியை இலக்காக்கி நடந்தாள் சுந்தரி.

பழுப்பேறிய பழைய பத்திரிகை ஒன்று உச்சிப் பரணிவிருந்து காற்றடித்தது வீழ்ந்தது.

வெறி பிடித்த சிங்களச் சிப்பாய்களைத் தமிழின உணர்வு மேலிட வீரத்தோடும் தீரத்தோடும் எதிர்த்துப் போரிட்ட விடுதலைப் புலிகளின் படம் வெட்ட வெளிச்சமாகப் பளிச்சிட்டது !

அந்தப் படத்தை உன்னிப்பாகப் பார்த்தாள் சுந்தரி!— போர்க்கோலம் தாங்கிய விடுதலைப் புலிகளின் மத்தியில் தன் மாமன் மகன் முத்தையனைத் தரிசித்ததும், அவள் அப்படியே மெய் மறந்தாள். 'எம் மாமன் மகன் ரொம்ப ரொம்ப பெரிய ஆள் தான் !' — மாமன் மகனை இனம் காண்பதற்குக் கட்டப் பொம்மன் மீசையை விடவும் வேறு ஓர் அடையாளம் வேண்டியதில்லைதான்!— முத்தையனுக்கு வணக்கம் தெரிவித்தாள்.

கன்றின் குரல் சுதந்திரமாகக் கனிந்து வந்தது.

சுந்தரி சுய உணர்வுகளை மீட்டுக் கொண்டாள். நெஞ்சில் என்னவோ உறுத்தவே திடுக்கிட்டுக் குனிந்து பார்த்தாள். பொன்னாக மின்னிய இரட்டைவடச் சங்கிலியுடன் இசகு பிசகாகப் பின்னிக்கிடந்த தாலியைச் சீராக்கிக் கொண்டாள். உந்திக்கமலத்தில் ஆசைமச்சான் வீரமணியின் அழகான, அன்பான, பாசமான, நேசமான சிரிப்பு எதிரொலிக்கக் கேட்டதுதான் தாமதம் ! — "ஐயையோ, மச்சானே !'' என்று கூவிய வண்ணம், நடையைத் தாண்டிப் புயலென வெளியே பாய்ந்தாள் சுந்தரி !

புயலில் சிக்கிக் கொண்ட தீபம் ஏந்திய அந்த அகல் விளக்கே அப்போது புயலாகிவிட்டதோ ?....

வீரமணிக்கு குடிக்காணியாட்சிப் பாத்தியதை கொண்ட மச்சுவீட்டின் திட்டிவாசலில் இப்போது நெரிசல் மேலும் கூடியது.

காலமும் புள்ளிமானும் ஓர் இனம்.

திடீரென்று —

பழைய பரபரப்பு மீண்டும் திரும்புகிறது.

"நம்ம வீரமணி அண்ணாச்சி அந்தாவே வந்தாச்சு!"

சுந்தரி விக்கலுக்கும் விம்மலுக்கும் ஊடாக ஊசலாடியவளாகத் தன்னுடைய நேசமச்சான் வீரமணியைக் கைத் தாங்கலாகப் பற்றி அணைத்த வண்ணம் வந்து நின்றாள்!— சுற்றிச்சூழ நோக்கிக் கை குவித்தாள்!

இணையும் பிணையுமான இளம் பூஞ்சிட்டுக்கள் நீர்த்தொட்டி விளிம்பில் அமர்ந்து நீராடிக் கொண்டிருந்தன.

"நல்லகாலம்! எம்பேராண்டியை எந்தப் பட்டுக் கெடப்பானும் சொக்குப்பொடி போட்டு மசக்கிக் காடு மாத்திப்பூடலேதான்!" — அப்பத்தாக்காரியும் நீதிபதி ஆகிறாள்,

புயலோடு புயலாகச் சாடிப் பாய்ந்த அகல்விளக்கு இப்போது தீ அலுங்காமல், தீபம் நலுங்காமல் அலாதியான ஒப்பனையில் சிரிக்கிறது.

சுந்தரி, வீரமணிக்கு உடைமை பூண்ட சுந்தரி, "மச்சான் காரவுகளே!" என்று விளித்த வண்ணம், முருங்கைப் போத்தில் சார்த்தி வைக்கப்பட்டிருந்த கற்றாழை நார்க்கட்டிலை வலது முன்னங்கால் பெரு விரலால் குறி தப்பாமல் தரையிலே தள்ளிவிட்டாள். சுகமான — கதகதப்பான தன்னுடைய இன்ப அணைப்பிலே கிடாப்புச் சேவலாக முடங்கிக் கிடந்த வீரமணியை இனிய ஸ்பரிசத்தால் உசுப்பிவிட்டாள். கொடுவாள் மீசையைத் தடவி விட்டாள்.

"மச்சானே ! நல்ல நினைப்போட ரவைநேரம் கட்டிலிலே குந்திக்கிடுங்க. சீனி வாங்கியாந்திட்டேன். காய்ச்சல் வாய்க்கு உணக்கையாய் மல்லிக்காப்பி வச்சுக்கொண்டாந் திட்றேன்," என்று நயந்து கெஞ்சி, வீரமணியைக் குந்த வைத்தாள்.

"தங்கச்சி ! சந்தைப் பேட்டையிலே யாரோ காதைக் கடிச்சாங்க ; ஓடியாரேன் ! உம் மச்சானுக்குப் பின் சாமத்திலவே அனல் காய்ச்சல் படிமானத்துக்கு வந்திருக்க வேணுமே ?" என்று விசாரித்தார் நாட்டு வைத்தியர் சன்னாசி அம்பலம்.

"ஆமாமுங்க, ஐயா ; மச்சானோட காச்சல் படிஞ்சு, மம்மலிலே அசந்து தூங்கினாங்க ; நானு பாலைக் கறந்து கலவடையிலே வச்சு மூடிப்புட்டு, சாலைக்குச் சீனி வாங்கியாரப் பறிஞ்சேனுங்க. சீனியை வாங்கிக் கிட்டுக் குறுக்கு மறிச்சுப் பாய்ஞ்சு வீட்டுக்கு ஓடியாந்து பார்க்கையிலே மச்சானைக் காணல்லேங்க ! முதல் கடுத்தம் ஊரெங்கும் சல்லடை போட்டுப் பார்த்திட்டேன். மறு கடுத்தம் வயித்திலே நெருப்பைக் கட்டிக்கினு சங்காணி மாந்தோப்பிலே மடங்கினப்ப, எம்புட்டு ஆசைமச்சான் பாதாளக் கேணித் திட்டுமேலே ஏறி நின்னுக்கிட்டிருந்தது தெரிஞ்சது. ஈரல்குலை நடுங்கப் பின்வசமா ஓடினேன். பாதாளக் கேணியிலே குதிக்கப் போன என் நேசமச்சானை அப்படியே முதுகைப் புடிச்சிப் பின்னுக்கு இழுத்து என்னோட நெஞ்சோட நெஞ்சாய் அணைச்சுக்கிட்டேனுங்க ! ஆயி மகமாயி புண்ணியத்தாலே என்னோட தாலிபாக்கியம் நிலைச்சிருச் சுங்க ! மச்சான்காரங்க ராத்தூக்கத்திலே இன்னம் மிச்சம் சொச்சம் வச்சிருக்காங்க போலே. நீங்களும் ஒரு மிடறு மல்லித் தண்ணியை ஊத்திக்கிறது. பொறகாலே மச்சா னுக்கு மருந்து கிருந்து கொடுக்கலாமுங்க, ஐயா !"

சுந்தரியின் வேண்டுதலைக்குச் சம்மதம் தெரிவித்தார் அம்பலம்.

அருகுதிண்ணையில் இருந்த வெற்றிலைத் தாம்பாளத்தில் சாஸ்திரத்திற்கென்று ஒரேயொரு வெற்றிலை மட்டுமே மிஞ்சிக்கிடந்தது !

கூட்டம் கலைந்தது.

ஆனால், ஊர்ச்சனங்களின் நல்வாழ்த்துக்கள் கலையவில்லை.

அண்டை அயலில் அடுத்தடுத்திருந்த வீரமணியின் சொந்த ஊரான குளமங்கலத்திலும் சரி; சுந்தரியின் பிறந்த மண்ணான பனங்குடத்திலும் சரி, வீரமணி—சுந்தரி தம்பதி இருவரும் வெகுஜன மரியாதையோடு வெகுவாகவே மதிக்கப்பட்டனர் ! சத்தியம் ! மகமாயிக்குப் பொதுவான சத்தியம் ! ...

'ஆத்தா மகமாயிக்கு நம்ம சுந்தரிப் பொண்ணு எடுத்துப் போட்ட மஞ்சள் நந்தியா வட்டைப் பூவோட மகிமையாலே, அவளுக்கு மஞ்சள் தாலிக்குப் பதிலாய் தங்கத்தாலயே லவிச்சிது. எட்டடிக் குச்சிலே பிறந்த அழகுப் பொண்ணாம் சுந்தரிக்கு மாடிவீட்டு இளவட்டங்கள் போட்டி போட்டாங்க ஆனாலும், தன்னோட மாமன்மகன் அக்காளுக்குப் பறிஞ்சப்ப கொடுத்த வாக்கை நம்பித்தான் ரொம்பக் காலம் கன்னி கழியாப் பொண்ணாகவே காத்திருந்தாள். இடைநடுவிலே, சாவோடே மல்லுக்கு நின்னுக்கிட்டிருந்த ஆத்தாக்காரி திடுதிப்னு வச்ச ஒரு அக்கினிப் பரிட்சைக்குச் சவாப்புச் சொல்ல வேண்டிய இக்கட்டு சுந்தரிக்கு வந்திடுச்சு. விதி யாரை விட்டது? நிதர்சனமான ஏழைப்பங்காளனாக நேருத்திரமாகக் கண்டுகொண்ட நல்ல பிள்ளை வீரமணியைத் தெய்வமாய் நம்பி அவன்கிட்டே மனசைத் திறந்து

காட்டிப் பேசிச்சு சுந்தரிப் பொண்ணு ! மாமன் மகன் முத்தையன் ஸ்தானத்திலே நின்னு சுந்தரிக்குத் திருப் பூட்டிச்சு நம்ம வீரமணித் தங்கம் !... மகமாயி நல்ல வளாக்கும் ! நல்லவங்களான வீரமணி சுந்தரி புருஷன் பொஞ்சாதி ரெண்டுபேரையும் நல்லதனமாவே காப் பாத்திப்புட்டா மகமாயி மகராசி ! ...'

கடந்த பதினெட்டு, பத்தொன்பது மாதங்களாக ஊர் வாய் இப்படிப் பெருமையாகப் பேசித்தான் பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறது !

கொத்தமல்லிக் காப்பியில் ஆவி பறக்கிறது !

ஆசையான, பாசமான, நேசமான அன்பு மச்சானை மனம் கலங்கவும் கண் கலங்கவும் பார்த்தாள் சுந்தரி.

அவள் : வீரமணியின் சுந்தரி !

கோழிகள் குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தன.

வீரமணி வெய்யல் படராத நிழலில் மல்லாந்து படுத்துக் கால்களை வசமாக நீட்டிக் கொண்டபடி, "அண்ணாச்சி !... இந்தப் பாவியை பெரிய மனசு வச்சுச் சமிச்சுப்பூட மாட்டீங்களா ?'' என்று விம்மி வெடிக்கத் தலைபட்டான் !

"ஆத்தாளே !....

கவண் வீசியெறிந்த கல் நெஞ்சுத் துடிப்பில் திரும்ப வும் பட்டுவிட்ட மாதிரி, துடித்தாள் சுந்தரி. ஒற்றைக் கால் வெள்ளை மூக்குத்தி தடுமாற மூக்கை உறிஞ்சினாள் இமைகளின் கரையில் சுடுநீர் கரை சேர்ந்தது. ஏங்கி னாள் ; தவித்தாள் ; மச்சானே ! '' தொட்டுணர்வு சிலிர்த்திடத் தொட்டு எழுப்பினாள்.

சொப்பனம் கண்டு விழித்த மாதிரி வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தான் வீரமணி. பொன்வேலி கண்ட நரிப்பல் பதக்கம் ஆடியது.

"வாயைக் கொப்புளிச்சிட்டுக் காப்பித் தண்ணி குடியுங்க, மச்சான் !"

சுந்தரி கெஞ்சினாள்!—கொஞ்சினால் தாலிப் பொசிப்பையும் தாம்பத்தியக் கொடுப்பினையையும் ஆத்தா மகமாயி புண்ணியத்தினால் மங்கலப் பாக்கியங்களாகப் பெற்றிருந்த மகராசி அவள் !...

அவன் கொத்தமல்லிக் காப்பியை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தான். ஏலம் சுக்கின் சுவையையும் உணர்ந்திருப்பான் அவன் !— அவன் ; வீரமணி ! பட்டிக்காட்டு மண் படித்துக் கொடுத்த பரிசுத்தமான—வெள்ளைத்தனமான மனித நேயமும் பாசமான அன்புமும் சொத்தாகக் கிடைத்திருக்கையில், அவனுக்கு என்ன குறைச்சலாம் ? அரசந்தூரடிப் பிள்ளையார் பொட்டலில் உருவாகிக் கிடந்த செங்கல் காளவாய், நாளும் பொழுதும் நெற்றி வேர்வை மண்ணில் கசிய அவனுக்கு உழைக்கக் கற்றுத் தந்துவிட்ட பிறகு அவனுடைய உடல் வல்லமைக்கு என்ன குறைச்சலாம் ?— சுகமானதொரு விடியல் வேளையிலே அவன் தூங்கியெழுந்து, பூலோக ரம்பையாகப் பேரெடுத்த செந்தாமரைப் பாவை சுந்தரியின் முகத்திலே கண் விழித்த அந்தக் கண் சிமிட்டும் நேரம் மெய்யாகவே மகத்துவம் நிரம்பின நேரமாகவே அமைந்தது !—சுந்தரி அவனுக்கு வாழ்க்கைப்படவும் சம்மதச் சொல் கொடுத்தாளே :—ஆளாகிச் சமைந்த கன்னி இளமான் சுந்தரி பயங்கரமானதோர் இடுசாமச் சோதிப்பு ஆளான நேரத்திலே, ஆண்டவனுக்கு நேராக ஆபத்சகாயன் ஆகி நல்வாக்கு வழங்கிய வீரமணியை ஏழேழு ஜன்மத்திற்கும் அவளால் எங்ஙனம் மறக்கக் கூடும் ?

கேள்விக்குறியில் கொக்கி போட்டுக் கொண்ட ஆச்சரியக் குறியாகவே, புதுச் சோடியான வீரமணி — சுந்தரியின் திருமணம் விமர்சனம் செய்யப்பட்டது.

சுந்தரி எதை நினைப்பாள்?

எதை மறப்பாளாம் சுந்தரி?

கசையடி பட்ட மாதிரி, செங்கதிர்கள் 'சுரீர்' என்று உறைத்தன.

வீரமணிக்கு அப்படி என்னதான் மாய உறக்கமோ? சாபத்துக்கு உறக்கமும் உடன்பாடுதான் போலும்!

''லோட்டாவைக் கட்டாந்தரையில் வைத்தார் வைத்தியர். ''தங்கச்சி! உம் மச்சான் சத்த முந்தி 'முத்தையா அண்ணாச்சி' அப்படின்னு விளிச்சுத் தன்னைச் சமிக்கும்படி என்னமோ பினாத்திச்சே, ஏனாம்? இம்மாங்காலம் கழிச்சுச் செத்துப் பிழைச்சு அக்கரைச் சீமையிலேருந்து விதியோடு விளையாடுறாப் பிலே இங்கிட்டு முந்தாநாள் திரும்பின உன் மாமன் மகன் முத்தையன் நம்ம வீரமணியைச் சமிக்கோணு மாமே?... உம் மச்சான் நிரபராதி ஆச்சே, தங்கச்சி? சே!'' அம்பலத்துக்கு இருப்புக் கொள்ளவில்லை.

''எனக்கு ஒரு மாயமும் விளங்கல்லீங்க, பெரியவுகளே!'' கற்பூரம் ஆகிறாள் தாலிச் செல்வி.

'நாடி நல்ல சொல் சொன்னது.

வீரமணிக்கு உயிரும் உயிர்ப்புமானவளுக்குப் போன உயிர் திரும்புகிறது!

காய்ச்சலின் உறுதியான உபாதைகளைக் கண்டிக்கக் கூடிய 'அசகாய செந்தூரத்தில் நான்கு வேளைக்குப் பொட்டணங்களை மடித்துக் கொடுத்தார் அம்பலம். "வீரமணி, மருந்தைவாயிலே கொட்டிக்கிணு இங்கேயே சுடுதண்ணி வாங்கிக்குடிச்சுக்கிடணும். கேணித் தண்ணி வசப்படாதாக்கும்!" என்று எச்சரிக்கை செய்தார்.

வீரமணி ஆத்திரம் தூள் பறக்க வைத்தியரை முறைத்துப் பார்த்தான்.

மச்சானின் முன்கோபம் சுந்தரிக்கு அத்துபடி. வைத்தியரை அண்டித் தனது பண்ண வீட்டுக்கு அனுப்ப எத்தனம் செய்தாள். அவள் கெட்டி குடியிருப்பில் வேறு ஒருத்திக்கு வருமா ?— ஊகூம்!

கருப்பி சோளக்கொட்டைகளை உரலில் இட்டு 'விசுக்' விசுக்'கென்று உலக்கையை லாவகமாய்க் கைக்குக் கை மாறியவாறு 'ஊஸ்...ஊஸ்' என்று மூச்சுக்காட்டிக் குத்திக் கொண்டிருந்த சத்தம், இப்போதுதான் 'சத்தம் கேட்கா மல் கேட்கிறது!

# 2

ஸ்ரீகப்பு மண்டபத்தின் தலை நிலைப்படியில் நிழல் வீழ்ந்தது.

அடுப்படியிலிருந்து திரும்பினாள் சுந்தரி. நிழலைப் பார்த்தவள், காலத்தைப் பார்த்தாள். மணி பதினொன்று பத்து! நாணயமான பெண்மைப் பண்பு சிலிர்த்திட, "மச்சானே!" என்று குரல் கொடுத்தாள்.

மூச்!

சீரங்கத்துப்பெருமாளுக்குப் போட்டியாக, இங்கே வீரமணியும் பள்ளி கொண்டிருந்தான்!

உவமை சேர்த்துப் பார்த்தவளுக்கு, ஒப்புவமை இல்லாமல் புதுச்சிரிப்புக் கீறியது. கஞ்சிப் பொழுதுக்கு ஒழுங்கைப் பனை உச்சிக்கு வெயில் தாவினாடியும், பத்தியக்கஞ்சிகாய்ச்சி மச்சானுக்குக் கொடுத்துப்புடணும்! மறு வினாடியில், வீரமணி சற்று முன்னர் புலம்பின புலம்பல் நெஞ்சடி வாரத்தில் எரிமலையாக வெடிக்கவே, அவள் மறுபடி நிலை குலைந்தாள்!— 'என்னோட நேச மச்சான், 'முத்தையா அண்ணாச்சி!'ன்னு விளிச்சு என் மாமன் மகன்கிட்டே ஏதுக்கு மன்னிப்பு — மாப்புக் கேட்டாகளாம்? திருகுவலிச் சோதனையாட்டம் புதுசாய்ப் பிரச்னை முளைச்சிடுச்சே?... என்னைச் சுமங்கலி ஆக்கிட்ட என்னோட புண்யவான் மச்சான், என் மாமன்மகன் முத்தையாவுக்கு மனசறிஞ்சு ஒருவஞ்சினையும் செய்யலையே? மறுகா, ஏதுக்கு அவுககிட்டே எம்மச்சான் மாப்புக் கேட்கணுமாம்?' தரைக் கெண்டை கணக்கில் அவள் தத்தளித்தாள். பூசுமஞ்சள்தூள் பூசிய வதனம் கசிந்தது.

"கோடியில் அஞ்சலை தங்கச்சியின் கைகுழந்தை தாலாட்டுக் கேட்டது.

"சுந்தரிக்கு ஆத்திரமும் அழுகையும் முட்டிமோதின! 'எங்களுக்கும் இனி நல்ல காலம் வந்துப்புடும்னு நம்பிப் பத்து மாசம் ஆசை ஆசையாய்ச் சுமந்து பெற்ற ஆண் குஞ்சுகூட நிலைக்காமல் கண்ணை மூடிக்கிடுச்சே ?... 'எனக்கு ஏடாகூடமாய் ஏதுனாச்சும் தீவின ஏற்பட்டு நான் மண்டையைப் போட்டாக்கூட, உன்னோட வயித்திலே வளர்ற குஞ்சாச்சும் ஒனக்குக் காவல் இருக்கும்னு கோட்டைக்கட்டியிருந்தேனே, புள்ளே?—'மச்சான் மாஞ்சு மாஞ்சு அழுதுபுலம்பின சங்கதியை நான் இந்தச் சென்மத்திலே மறக்க ஏலுமா ?'—நினைவுகள் பல்லாங்குழி ஆடின.

"கறுவேப்பிலைக் கொழுந்துகள் மணத்தன. அடுப்பில் கஞ்சி கொதித்துக் கொண்டிருக்கிறது.

"ஏ...புள்ளே !"

உள்ளே பாய்ந்தாள் சுந்திரி.

அங்கே—

மாரகச்சுங்கடி சரிந்து நழுவிய துப்புக்கூடப் புரியாமல் அப்போதுதான் மச்சானைப் புதிதாகப் பார்க்கிற பாவனையில் பார்க்கிறாள் சுந்தரி.

அவளைப்போலவே, அவனும் வீரமணியும் அவளை— அருமைப் பொண்டாட்டி சுந்தரியை அப்படியே விழுங்கி ஏப்பம் விட்டுதுடித்தவனாக அப்படிப் பார்த்தான் !—

"ஒன்னைத்தானே புள்ளே !

' மச்சானே !"

"என்னா புள்ளே அழுவுறே ?"

''நீங்க அழுவுறீங்களே, மச்சானே ?''

''ஊஹூம்; நான் அழுகல்லையே !''

''பொய் சொல்லுறீங்க !''

''அடி ஆத்தே ! — நான்பொய் சொல்லுறேனாங் காட்டி ? ஒன்னைக் கண்ணாலம் கட்டிக்கிட்ட இந்தப் பதினெட்டு, பத்தொம்பது மாசக் கெடுவிலே சாத்திரக் காச்சும் ஒரு பொய் மனசறிஞ்சு சொன்னது உண்டா, புள்ளே ?''

''அது நூத்திலே ஒரு சேதிதான் ... அட்டியில்லேங்க... ஆனா, இப்பைக்கு ஒங்க கண்ணிலே தண்ணி துளும்பு துங்களே ? இந்தாலே, பார்த்துக்கிடுங்கங்கிறேன் !''

ஈரம் கைம்மாறியது. ''ஆமா, புள்ளே ; இது சந்தோசத்திலே, பூத்த கண்ணீராக்கும் ! ஒன்னை மாதிரி ஒசந்த புத்தி சத்தியும் வக்கணையான அழகும் படைச்ச ஒருத்தி இப்பிறப்பிலே அருப்புருவமாய் எனக்குப் பொஞ்சாதியாக வாய்க்கிறத்துச்குப் பூர்வ செம்மத்திலே நான் உண்டனவே புண்ணியம் செஞ்சிருக்கத்தான் வேணும்னு களிச்சுப்போன நேரத்திலே எனக்குக் கண்ணு ரெண்டும் கலங்கியிருக் கோணும் ! புண்ணியவதியான ஒன்னோட தாலி பாக்கியப் பலத்தினாலேதான் ஆத்தா எந்தலையிலே தீர்க்காயுசுக்கு எழுதிப்போட்டு, எம்பூட்டுக் கொடுப்பனைப் பாக்கியத்துக்கு ஒரு அருத்தமும் ஏற்பட்டாக வேணும் ; ஆமா, புள்ளே !'' தாபமும் தாகமும் சுழித்திட்ட மன உணர்வுகளுக்கு மத்தியில் வீரமணி பச்சைப் பாலகன் மாதிரி தேம்பித் தேம்பி அழுதான். கை ஈரத்தைச் சோதித்தான் ; ஈரம் எங்கே தேசாந்தரம்' பறிந்தது ?

சுந்தரி உள்ளார்ந்த தேறுதலுடன் பொன்சிரிப்புச் சிரித்தாள் !— காலையில் கங்காணித் தோட்டக் கேணி யடியில் காணாமல் போயிருந்த அவள் உயிர் இப்போதுதான் அவளிடம் திரும்பி விட்டிருக்க வேண்டும் ! — " மச்சானே மச்சானே ! இம்மாந் தொலைக்கு எம்பேரிலே ஒரு மயமான மசக்கமும் அதை ஒட்டி ஒங்க உசிருமேலே ஒரு நாயமான நம்புதலும் கொண்டிருக்கிற நீங்க காலம்பற ஏனாம் அந்தப் பாதாளக்கேணிலலே குதிச்சுச் செத்துப் போயிட முனைஞ்சீகளாம் ?... விதிவசத்திலே நான் மட்டுக்கும் பின்னாலே கூடி வந்து ஒங்களைக் கமுக்கமாய்க் காப்பாத்தலேன்னா, இந்நேரம் நான் செத்த இடமும் கூட புல் மண்டிப் போயிருக்குமுங்களே ? அப்பாலே, என்மட்டுக்கும் பொய்யாவும் கதையாவும் ஆகிப்பூட்ட என்னோட மாமன்மகன் முத்தையாவோட பேரை விளிச்சுப் புத்தி பேதலிச்சதாட்டம் நம்ம வாசலிலே கட்டிலிலே ஆடிக்கிட்டு ஒங்களைச் சமிச்சுப்புட வேணும்'னு அந்த ஆள்கிட்டே மாப்புகேட்டு எதுக்குப் புலம்புனீங்களாம் ? நீங்கதன்னடைச்ச மூப்பிலே அழுது புலம்பின அவலக்கூத்தை என்னோட நின்னுக்கிட்டிருந்த நம்ம தெருப் பொண்டுகளும் எங்க ஊர் வைத்தியரும் கேட்டுத் தெரிவிச்சிட்டாங்களே ? நாம நல்ல இருக் கிறதைக் காணச் சகிக்காமல் பொச்சரிப்புப் பட்டுகிட்டு இருக்கிற நாலுமூணு சனியன்களுக்கு மெல்லுறத்துக்கு அவல் கிடைச்சிருச்சுங்களே மச்சானே ?" — நடந்த கதை நடத்திக் காட்டமாட்டாளா சுந்தரி ? "ஊம் வாயைத் திறந்து பேசுங்க, மச்சான் !" — இடிமின்னல் ஆகிறாள் அவள்.

ஆனால் —

வீரமணி கோடைமழை ஆனான் ! —" ஏபுள்ளே ஒணக்குத் தலைசுத்திக் கிறுகிறுப்பு வந்தாச்சு. நான் கண்ணை மூடுறேன், புள்ளே.

'ஐயையோ ! கண்ணை மூடிக்கிடப் போறீங்களா, மச்சானே ?''

''ஆத்தாடி ! எதுக்கு இப்படிப் பதறுறீயாம் ? நான் தூங்கப் போறேனாக்கும் ! தூங்கி எழுந்தானதும், என் மனசான மனசைத் திறந்து உன்கிட்டே காட்டிப் பூடுவேன்'' நெஞ்சை ஒளிச்சு ஒரு வஞ்சனை இருக்குமா புள்ளே ?''

நடை வந்தது.

வீரமணிக்குத் தூக்கம் வந்து விட்டது, தூக்கம் !

கதிர்க்கோமான் ஏறுமுகம் காட்டினான்.

மோகினிச் சிலை ஆகிறாள் சுந்தரி !— வீரமணியின் சுந்தரி !

செப்பிடு வித்தையில் ஈடு எடுப்பு இல்லாததாக விமர்சிக்கப்படுகிற காலம், இடைவேளைக் காட்சி ஒன்றை மேடையிலே ஏற்றிச் சின்னக் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடுகிறது !

பனங்குளத்திலிருந்து அக்கரைச் சீமை இலங்கைக்கு வயிற்றுப் பிழைப்பின் நிமித்தம் கள்ளத்தோணி ஏறிச் சென்ற மாமன் மகனான முத்தையன் தன் அத்தை மகளான சுந்தரியிடம் மனப்பூர்வமாகக் கையடித்துச் சத்தியம் செய்து கொடுத்தபடி, முதல் கணக்கு முடிந்த கையோடு பிறந்த மண்ணை மிதிக்காததோடு, கழிந்த ஒரு மகாமகக்காலமாகவே அவனைப் பற்றிய கதை காரணம் எதுவுமே காதுக்கு எட்டாமல் போகவே, அதுவரையிலும் தர்ம நியாயமாகவே முத்தையனுக்காகக் காத்திருந்த சுந்தரியைச் சோதிக்கலானாள் அவளுடைய ஆத்தாக்காரி !

"மகளே, நடை உடை ஓஞ்சு, பாயும் படுக்கையுமாக ஆகிச் சிவலோகம் பறிஞ்சுப்புட அல்லாடிக்கிட்டு இருக்கிற உன் ஆத்தாளோட கடைசி கடைசியான ஒரு நப்பாசையைப் புட்டு வைக்காமல் இனியும் என்னாலே இருக்க வாய்க்கல்லே!... வினாத் தெரிஞ்ச காலந்தொட்டே நீயும் உன் மச்சானும், அதுதான் உன் மாமன் மகன் முத்தையன் மச்சானும் உசிருக்கு உசிராகப் பாசத் தோடவும் நேசத்தோடவும் பழகினீங்க. முதல் கணக்கு முடிஞ்சி காசு பணத்தோட அக்கரைச் சீமையிலேருந்து திரும்பினடியும், ஒங்க ரெண்டு பேர் கண்ணாலத்தையும் நடத்திப்புட நாம பேசி முடிச்சிருந்தோம்! ஆனா உன் மச்சான்... அதான், என்னோட அண்ணாச்சி மகன் முத்தையன் நாலுகணக்குத் தாண்டியும் இன்னமும் அக்கரையிலிருந்து இங்கிட்டு ஓடியாந்து குதிக்கக் காணோம்?...அது வார்த்தை தவறிடுச்சின்னு நாக்கிலே நரம்பில்லாமல் அவதூறு பேசி நான் பாவி ஆகிப்பூட மாட்டேன்! நம்ம எழுத்தோட சேர்த்து நாலு கோணல் எழுத்தையும் படிச்சு விதரணை புரிஞ்சிக்கிட்ட புத்தி சத்தியான என் மாப்பிள்ளை முத்தையன், தெருக்கூத்துக் கதை ஆகிப்பூட்ட ராவணனுக்குப் பேரெடுத்துக் கொடுக்கப் பேயாட்டம் போட்டுக்கிட்டிருக்கிற சிங்களப் பாவிங்களுக்குப் பலி ஆகாமல் இருந்திருந்தா, உன்னைக் கண்டு தண்டிக்கிடுறதுக்காக ஒசந்த கோட்டை கொத் தளத்தையும் உடைச் செறிஞ்சிப்பூட்டு எப்பவோ இங்கிட்டு வந்து குதிச்சிருக்க மாட்டாகளாங்காட்டி? ஆத்தா சுந்தரி! ஒன்னைச் சடுதியிலே கண்ணாலப் பொண்ணாக் கண்டால் தான், உன்னைப் பெற்ற வளோட ஆவி, இனிமே வேகுமாக்கும்!...

உணர்ச்சிகளின் சுழிப்பில் மூச்சிறைக்கப் பேசிய ஆத்தாக்காரிக்கு நெஞ்சடைத்தது!

"ஆத்தாளே!" என்று வீரிட்டாள் மகள்.

வைத்தியர் சன்னாசி அம்பலம் மூச்சிறைக்க ஓடோடி வந்தார். நாடியைச் சோதித்தவர், அப்போது சுந்தரியை யும் சோதித்தவராக, உதட்டைப் பிதுக்கினார்.

நிற்கவோ, நிலைக்கவோ இனி நேரம் ஏது ?

தலைமயிரை அள்ளிச் செருகிக் கொண்டாள் சுந்தரி. அத்தாச்சி அஞ்சலையைத் தாய்க்குக் காவல் வைத்துவிட்டு, மயங்கிய அந்தி சந்தியில் மயங்காமல் ஓட்டம் பிடித்தாள்.

செங்கல் காளவாய் வந்தது.

இளவரசுப்பட்டம் தரித்தவனைப் போன்று கம்பீர மாகத் தலையையும் நெஞ்சையும் நிமிர்த்தி நின்ற வீரமணி 'கார்பார்' பண்ணிக் கொண்டிருந்தான் ! முதலாளி என்றால் பின்னே சும்மாவா இருப்பாள் ?

சுந்தரிக்கு மேனி நடுங்கத் தலைப்பட்டது. இடுப்புக் கொசுவத்தைச் சீராக்கிக் கொண்டாள் ; கொட்டடிச் சேலையின் முந்தானையைக் கொய்தாள் ; நெற்றிக்குக் காப்பு எழுதிப் பளிச்சிட்ட மகமாயி குங்குமத்தை காபந்து செய்து கொண்டே, வேர்வையைக் கொய்தாள். 'ஆத்தா மூத்தவளே ! என் ஆத்தா உசிரை ராத்திரிப் பாட்டுக் காச்சும் கட்டிக் காப்பாத்திப்புடுவீயா?' — பூவரச நிழலை உதறினாள். உதிரிச் செவ்வந்திப் பூவாக நடந்தாள்.

வீரமணி கம்பீரமிடுக்குடன் எதிர்த்து வந்தான் ! முண்டாசு துவாலை கழுத்திலே உருமாலையாக வீழ்ந்தது! 'மைனர் சங்கிலி' மைனர் வீரமணிக்கு உகந்தபான்மை யோடு அழகு காட்டியது; அழகு கூட்டியது. "ஓ...சுந்தரி யாக்கும்... வா...ங்க... வாங்க," என்று வரவேற்பு வழங்கி னான் இளவட்டம். பார்த்த கண்களில் இனம் விளங்காத தொரு பரவசம் ; கூச்சத்தோடு பார்வையைத் தாழ்த்தி னான். பட்டிக்காட்டுப் பூவையின் அழகான பாதங்களின் பெருவிரல்கள் கால் மிஞ்சிகளோடு 'சடுகுடு' ஆடிக்

கொண்டிருந்ததை அவனுடைய இளரத்தம் ரசித்திருக் கலாம்! — அறந்தாங்கிச் செவ்வாய்ச் சந்தைக் கெடுவிலே நீங்க இங்கிட்டு நாடி வந்தப்ப ஆரம்பமான செங்கல் சூளைக் கட்டுமானம் நம்ம பக்கத்து வியாழச் சந்தைக் கெடுவான இண்ணைக்குக் விடிகாலம்பறத்தான் முடிஞ்சு நெருப்பைக் கொளுத்திப் போட்டோம்! ஈசான்ய முடிக்கிலே நின்று சூளையை ஒருகடுத்தம் பாருங்களேன்!... நெருப்பு எரிகிறதுகூட எம்மாம் அந்தமாய் இருக்குது, கண்டீங்களா, சுந்தரி?'' என்று கேட்டான். அன்பிலே பண்பு பண்பாடியதோ?

நெருப்பு என்றதும், அவளுக்குச் சாவோடு போராடும் அன்னையின் ஞாபகம் தான் பீறிட்டது; சுடுநீர் பீறிட, ஆ...மாமுங்க!'' என்று தட்டித் தடுமாறினாள்.

சுந்தரியின் தடுமாற்றத்தை உணர்ந்ததுதான் தாமதம், வீரமணி அம்மன் தீச்சட்டியைத் தொட்டுவிட்டவன் மாதிரி 'சுரீர்' என்று பதறிக் கைகளை உதறினான். 'மேலுக்கு முடியலீங்களா?'' என்றான்.

''எனக்கு ஒண்ணும் இல்லீங்க!''

அப்படீன்னா, உங்க தாயாருக்கு இப்ப ரொம்பவும் முடியலையா?'‘

வீரமணியின் மனிதாபிமானப் பதட்டம் சுந்தரிக்கு இன்ப அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும்! ''என்னோட ஆத்தா நலிஞ்சு கிடக்கிற தாக்கல் உங்க ளுக்கும் தெரிஞ்சிருக்குதே? ஆமாமுங்க!'' என்று விடை சொன்னாள்.

சோகத்தில் வீரமணிக்குப் பொய்யான சிரிப்பு ஏதும் வரவில்லைதான்! — ''ஒங்க பனங்குளத்துக்கும் எங்க குளமங்கலத்துக்கும் கூப்பிடு தொலைவுதானே?

என்னோட செங்கல் யாவாரத்துக் கோசரம் நித்தம் ஆயிரந் தடவை உங்க குடியிருப்பு வழியிலே தானே நான் போய் வந்துக்கிட்டிருக்கேன்.

இனம்புரியாத நம்பிக்கையின் ஆதரவிலும் ஆதாரத்திலும் நல்ல மூச்சைப் பிரித்தாள். கன்னிப்பூ! — "தலைக்குமேலே வெள்ளம் போயிட்ட இக்கட்டான ஆபத்திலே ஆப்புட்டுக்கிட்டுத் தவிச்சுக்கிட்டு இருந்தப்ப ஒங்களோட யாபகம் வரவே, தேடி வந்தேனுங்க!" — ஆறாத்துயரத்தை ஊடுருவிச் சுந்தரமாக முறுவலைச் சேர்த்தாள் சுந்தரி.

"உங்களைக் கண்டதும், தெய்வமே தேடி வந்தாப் பிலேதான், எம்மனசுக்குப் பட்டுச்சுங்க!"

"மெய்யாலுங்களா ?"

"மெய்தானுங்க; காலங்கெட்ட கலிகாலத்திலே, பொய் பேசுறத்துக்குப் பழகாத — பழக ஒப்பாதவனாக்கும் நான்!"

"அந்த நல்ல துப்பு எனக்கு நல்லாவே தெரியுமுங்க. உங்க ஊர் நாட்டிலே வாழ்க்கைப்பட்டிருக்கிற என் கூட்டுக்காரி செம்பகம் உங்களைப் பத்தி ரொம்ப ரொம்ப ஓசத்தியாவும் பெருமையாவும் நொடிக்கு நூறு வாட்டி சொல்லக் கேட்டு மனசு குளிர்ந்திருக்கேனுங்க!"

அப்படீங்களா ? அதுவும் என் பாக்கியம்தான், சுந்தரி!"

கைந்நொடிப் பொழுதுக்கு நாணிக் கண் புதைக்கிறாள் கன்னி கழியாப் பூஞ்சிட்டு. சுயப்பிரச்சனையை மீட்டுக் கொண்டதும், கண்ணாடி வளையல்களோடு அவளுடைய பூவிரல்கள் சல்லாபம் செய்தன. தலையை

உயர்த்துகிறாள். அவளுடைய 'நேர்கொண்ட பார்வை' இனிய நற்கனவிலே மெய்ம்மறந்திருந்த அவனுடைய பாசமானதும் நேசமானதுமான பார்வையை ஊடுருவுகிறது!— அண்ணலும் நோக்க அவளும் நோக்கினாள்!— மதிலைச் செல்வியாகவே ஆகிவிட்டிருப்பாளோ ?—'"

"நிற்கவோ, நிதானிக்கவோ நேரம் கிடையாதுங்க. அவசரத்திலே இங்கே நான் ஓட்டமாய் ஓடியாந்ததே, உங்கக்கிட்டக்க ஒரு சங்கதியைக் கேட்கவும் சொல்லத் தானுங்க'', என்று தயங்கினாள் சுந்தரி.

"மேளதாளத்தோட கேளுங்க ; சொல்லுங்க !''

"மேளதாளத்தோடே கேட்கட்டுங்களா ?''

"ஓ !''

"மேளதாளத்தோடவே சொல்லிப்புடட்டுங்களா ?''

"ஊம் !''

சுந்தரி சொல்லத் தொடங்கினாள் ;

"ஒங்களோட மனசான மனசைத் தொட்டு ஒங்களுக்கு முந்தானை விரிக்கக் கூடிய நல்ல எழுத்து எழுதிப் போட்டிருக்கிற நல்ல பொண்ணுக்காக நீங்க இன்னமும் காத்துக்கிட்டு இருக்கிறதாகச் சுற்று வட்டத்திலே பேசிக்கிடுறது எனக்கும் தெரியுமுங்க. அம்மாங்கொத்த வைராக்கியமான மனசு கொண்ட ஒங்ககிட்டே விதி கணக்கிலே ஒரு கேள்வியைக் கேட்டுப்புடத்தான் நான் இப்ப வந்திருக்கேன் !—என் நிலைமை என்னைச் சோதிச்சிடுச்சு ! இப்ப நான் ஒங்களைச் சோதிக்கிறேன் !— ஒங்களைச் சோதிக்கக் கூடிய அளவுக்கு எனக்கு எப்படித் துணிச்சல் வந்திருச்சின்னு நீங்க ரோசிக்கலாம் !—ஒரு தக்கம் நீங்க உருமப் பொழுதிலே மரத்தடியிலே குந்தி

சோறு உண்ணுக்கிட்டு இருக்கையிலே பிச்சை கேட்டு வந்த நடுத்தெரு நாராயணனையும் ஆமாங்க. நம்ம பாரதக் குடிமகனையும் உங்ககூட சமட்டியாக் குந்தவச்சு உங்க சாப்பாட்டிலே பங்கு வச்சு அந்த ஏழையோட பாவப்பட் பசியை ஆத்துனீங்க! இப்படிப்பட்ட நல்ல மனசுகொண்ட நீங்க பாவபுண்ணியத்திலேயும் நம்பிக்கை உள்ளவங்க ளாகத் தான் இருக்கோணும்'ம். பாவப்பட்ட என்னைக் கண்ணாலப் பொண்ணாய்ப் பார்க்க வேணுமிங்கிற கடைசி ஆசையோடே அங்கே என்னைப் பெற்ற ஆத்தா சாகக் கிடக்குதுங்க ; இப்படிப்பட்ட இடுசாமத் திலே, நான் மாப்பிள்ளைக்கு எங்கே போவேன் ? ஏங்க! ஒங்களோட நல்ல மனசை என்னாலே தொட முடிஞ்சதுங் களா ? ஆயிரம் பாவத்துக்கு நடுவிலே ஒரு புண்ணிய மாய் அமைஞ்சு, என்னோட ஆத்தா கண்பார்க்க நீங்க என்னைக் கண்ணாலப் பொண்ணாக ஆக்க ஒப்புவீங் களா ? சொல்லுங்க, தர்மராசாவே, சொல்லுங்க!''

விம்மி வெடித்தவளாகக் கைகூப்பிக் கும்பிட்டாள் சுந்தரி. மறுஇமைப்பில், தன் கைகளிலே நூதனமான ஈரத்தின் இனிய தீண்டுதலை உணர்ந்ததும், திடுக்கிட்டு உயிர்த்துடிப்புடன் துடிதுடித்தவளாக ஏறிட்டு விழித் தாள். அருமைபெருமையான வீரமணியின் அன்புப் பிடியில்தான் கட்டுண்டுக் கிடந்த சிதம்பர ரகசியத்தைப் புரிந்து கொண்டதும், ''மச்சானே!'' என்று வீரிட்டாள். ''எனக்கிண்ணு ஒரு தெய்வத்தை நான் கண்டுக்கிட் டேனுங்க ! இனிமே நான் மட்டுமில்லே, என்னோட ஆத்தாக்காரியுங்கூடக் கொடுத்துவச்சவதானுங்க!''

பாடுபட்டுச் செருமலை அடக்கிக் கொண்டான் வீரமணி. — ''ஏ, புள்ளே ! உன்னைப் பத்தி உன்னை விடவும் நான்தான் ரொம்ப ரொம்பத் தெரவிசாப் புரிஞ்சு வச்சிருக்கேனாக்கும் ! எம்புட்டு மனசான மனசுக்குத் தேடிவந்த ஒன்னை நானே தேடி வரத்தான்

நல்லபொழுதுக்காகத் தவம் கிடந்தேன், ஆனா, தெய்வமே ஒரு மனுசனைச் தேடி வந்தாப்பிலே, நீயே என்னைத் தேடி வந்திட்டே !... ஊம், கிளம்பு, உன் வீட்டுக்கு !'' உணர்ச்சி வசப்பட்டு விம்மினான் வீரமணி.

"மச்சான்காரவுகளே ! இன்னொரு முக்கியமான சங்கதியையும் இந்த நல்லவேளையிலே உங்ககிட்டே நெஞ்சுக்கு வஞ்சனை பண்ணாம உடைச்சுச் செப்பிப்புட்டா, எம் மனசு லேசாகிப்பூடுங்க !'' நா தழதழக்கத் தவித்தாள் சுந்தரி.

# 3

வீரமணியின் வலது கண்ணும் வலது தோளும் துடிக்கின்றன. ''சுந்தரிப் பொண்ணே! நீ இப்பைக்கு என்ன சொல்லப்போறேன்னு எனக்குத் தெரியும்! உசிருக்கு உசிரான உன்னோட மாமன் மகன் முத்தை யனுக்காக பார்வதி தேவி கணக்கிலே நீ இம்மாங்காலமும் ஒத்தைக் காலிலே தவசு பண்ணிக்கிட்டிருந்த மகராசி நீ என்கிற சத்தியத் தருமத்தை நம்ம அக்கம் பக்கத்து ஊர்க்காரங்க சகலத்தனை பேருமே அறிவாங்களே?' என்றான். கொடுவாள் மீசை மாவீரன் வேலுத்தம்பிக்குத் தானே அடையாளம்?—அது ஆண்மையோடு சிரித்தது.

இடைமறித்தாள் சுந்தரி!— ''வார விதி ராத்தங்காது அப்படின்னு பேசிக்கிடுறது நம்ம ஊர் நாட்டிலே வளமை! — என் ஆத்தாக்காரி என்னை வினையாய்ச் சோதிக்கத் துணிஞ்ச நேரம் வரையிலேயும் என்னோட மாமன்மகன் முத்தையன் என் நெஞ்சிலே உயிரும் உடம்புமாய்க் கோயில் கொண்டிருந்தாங்க. ஆனா, இப்ப... இப்ப என்னோட ஆசைமச்சான்—நேசமச்சான் முத்தையன் கதையாகிப் பூட்டாங்க!...'' இளைய மார்பகத்தைச் சன்னமாக அந்தரங்கமாகவும் தடவிக் கொடுத்தபின், தொண்டையைக் கனைத்துக் கொண்டே, ஒரு புனிதமான, புத்தம்புதிதான வாழ்க்கைவேள்வியை மகாநோன்பின் பயபக்தியோடு பிள்ளையார் சுழியிட்டுத் தொடங்குவதற்கான நம்பிக்கையோடும் உறுதியோடும் பேச்சைத் தொடர்ந்தாள்; தொடர்சேர்த்தாள்.

ம்...ம்... ஒங்களைத்தானுங்க!... ஆயிமகமாயி எனக் கின்னு எந்தலையிலே எழுதி வச்சிட்ட ஒரு ஆம்பளையைத் தெய்வமாகக் கண்டுக்கிட்ட கொண்டாட்டத்தைத்

தாங்கிக்கிட ஏலாத இந்த நல்ல நேரத்திலே மேற்கொண்டு என்னாலே ஏதும் பேச முடியல்லீங்க ஆனாலும், முதலும் முடிவுமாகத் திரிகரண சுத்தியோட இப்பச் சொல்றது தான் எனக்கு மட்டுமில்லே, ஒங்களுக்கும் விதியாக ஆகிப் புடட்டும், ஆகிப்புடவும்வேணும் !— என்னைத் தொட்ட முதல் ஆம்பளையான நீங்க எம்மனசையும் தொட்டுப் புட்டீங்க ! நீங்க எனக்குத் தரப்போற தாலிபாக்கியம் ஒங்களுக்குத் தீர்க்காயுசைக் கொடுக்குமுங்க ! அந்தக் கொடுப்பினையோட மகத்துவத்தினாலேதான் நான் தீர்க்க சுமங்கலியாக ஆகவும் வேணுமுங்க !''

எல்லாவற்றையும் பையப்பையச் சொல்லிமுடித்த சுந்திரியின் விழிநீரை உரிமையோட துடைத்தான் வீரமணி

ஆளப்பிறந்த தெய்வமாகி நின்ற வீரமணியின் கண்ணீரை உறவோடு விலக்கினவள் சுந்தரி.

பதைபதைப்புடன் இருவரும் ஜோடியாகப் பாதங் களைப் பிரித்தனர்.

அந்நேரத்தில் ;

அன்னக்கிளி தலைதெறிக்க ஓடிவந்தாள்.

''ஆத்தாளுக்கு ஒண்ணும் ஆயிடல்லையே, ஆச்சி மகளே ?'' சஞ்சலத்தின் உச்சத்தொனியில் பதட்டத்துடன் விசாரித்தாள் சுந்தரி.

''அப்பத்தாளுக்கு நிலமை எசகுபிசகாத்தான் இருக்கு; ராத்திரி தாங்குறதுகூட ஈரெட்டுத்தானாம் ! வைத்தியர் சொல்லிட்டார். கண்ணு ரெண்டையும் உருட்டி உருட்டி முழிச்சு உங்களைத்தான் தேடிக்கிட்டிருக்கோணும் !.... சீனித்தண்ணியைக்கூட முழுங்கக்காணோம் !... ஓடியாங்க' அக்காளே !

அழுகை பீறிட வீரமணியைத் திரும்பிப் பார்த்தாள் சுந்தரி. "மச்... ஏங்க, எங்கூட வருவீங்களா ?" — கேட்டாள் !

"புள்... சுந்தரிப் பொண்ணே ! நான் வரமாட்டேனா ?" — கொடுத்தான் !

"வராமல் இருப்பீங்களா, மச்சானே ?"

"காலை எட்டிப்போட்டு நட, புள்ளே !"

ஓடிவந்த எடுபிடியிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து நகர்ந்தான் வீரமணி.

வளர்பிறை.

எட்டடிக்குச்சு.

மனிதத் தன்மையின் பதட்ட நிலைமை.

"ஆத்தா ! ... ஆத்தா !"

சீனிக் கரைசலில் பாலாடையைத் தோய்த்தெடுத்துக் கடைவாயில் பதனமாகப் புகட்டுகிறாள் மகள்.

சிம்மினி வெளிச்சத்தில் விழிகளை உருட்டியபடி நப்புக் கொட்டுகிறாள் பெற்றவள்." ரா...ரா...ரா... ராசாத்தி... வந்திட்டியா ?" உச்சாடனம் வந்தவளைப் போலப் பேசினாள்.

"ஆமா ; வந்திட்டேன் !"

சுந்தரிக்குப்பின் வசத்தில் நின்ற வீரமணியை இப்போது தான் ஓர் உந்துதலோடு பார்த்தாள் கிழவி.

சுந்தரிக்கு மனம் அடித்துச் கொண்டது. 'மகமாயி! கூத்து இப்பத்தான் தொடங்கியிருக்குது; அதை நல்ல தனமாய் நடத்தி முடிச்சு வச்சுப்புடுடி, மகமாயி!' இமைகள் நனைந்தன.

சொக்காயிக் கிழவி தொடுத்த கண்களை எடுக்காமல் இன்னமும் வீரமணியைத் தான் பார்த்துக் கொண்டே இருக்கிறாள். கண்ணீர் முத்தங்களிலே மாயமந்திரம் மாதிரி புன்சிரிப்பு மலர்கிறது! — "ஆத்தாடி! அது ... அது ஒன்னோட மாமன் மகன் தானே?" புதிய உத்வேகம் விசாரணை செய்தது.

சுந்தரி உயிர்க்கழுவில் ஊசலாடியவளாகப் பதை பதைக்க வீரமணியை நோக்கினாள். மறுகிய பார்வையில், வைத்தியர் சன்னாசி அம்பலத்தின் கைஜாடை சிக்கியது. சிக்கெனப் பிடித்துக் கொண்டாள். "ஆமா, ஆத்தா ஆமா!" என்றாள்.

கிழவி நடுங்கும் கைகளை நடுங்காமல் குவித்தாள். எச்சில் துப்பிக் காயும் நேரத்தில் மறுபேச்சாடாமல், நிம்மதியாகக் கண்களை மூடிக் கொண்டு தூங்க ஆரம்பித்து விட்டாள்! — அது உடலின் துயில்! — உயிரின் துயில் அல்லதான்!

மகமாயிக்கு விளையாடவும், விளையாட்டுக் காட்டவும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.

விசுக்கென்று விரைந்து கிழவியை, நலியாமல் சோதித்து ஆறுதலாகப் பொக்கைவாய்ச் சிரிப்பைக் காட்டிக் கை காட்டி அழைத்ததன் பேரில் சுந்தரியும் வீரமணியும் நாட்டுவைத்தியரை அண்டினார்கள்.

அம்பலம் சொன்னார்:

"மகமாயி மகாஒசத்தியான விளையாட்டுக் காரின்னு உலகம் பேசுறது பொய்க்குமா ? என் கைவாகணத்திலே பாடஞ் செஞ்சு கிழவிக்குக் கொடுத்த புதுச் சூரணம் வேலை செஞ்சிருக்கு; அதனாலே, அவகளோட நாடி இப்ப கொஞ்சத்துக்குக் கொஞ்சம் அமைதியாய்ப் பேசுது. இதெல்லாம்கூட நம்ம குலதெய்வத்தோட விளையாட்டுத் தான் ! இல்லாங்காட்டி, அக்கரைச் சீமைக்குப் பறிஞ்ச; நம்ம ஊர்த்தம்பி முத்தையா இம்புட்டுக் காலத்தைத் தாண்டியும் இங்கிட்டு வராததாலே, அது கதையாக ஆகிப்பூட்ட வேளை கெட்ட வேளையிலே ஊரெல்லாம் தங்கக் கம்பின்னு பேரெடுத்த நம்ம குளமங்கலம் வீரமணித் தம்பியை முத்தையன்னு கிழவியாலே மனசாலே நினைச்சிருக்க வாய்க்குமா ? இல்லே, நினைச்சதை மனசொப்பி நம்பியிருக்கத் தான் ஏலுமா?... கிழவீ உசிருக்கு நாளை வெள்ளிக் கிழமை பகல் பொழுது மட்டுக்கும் முக்காலறுப்பு எந்த ஆபத்தும் வந்துப்புடாது! — அதுக்குள்ளாற, ஆத்தாக்காரியை நிம்மதிப்படுத்த வேண்டிய காரியங்களை சட்டுப்புட்டுன்னு சுந்தரிப் பொண்ணு செஞ்சு முடிச்சுப் புடுறது நல்லதாக்கும் ! தவிரவும் நம்பி குளமங்கலம் வீரமணி நாளைக்கு முச்சூடும் பனங்குளம் முத்தையனாக கவே இருந்தாக வேண்டியதும் அவசியமாக்கும்!"

"சரிங்க, ஐயாவே!"

ஒரே குரலில் சுந்தரியும் வீரமணியும் சம்மதம் வழங்கினார்கள்.

"பெரியவுகளே ! நாளை நிலம் தெளிஞ்சதும் எனக்குக் கண்ணாலமுங்க ; ஆத்தாக்காரி என்னைக் கண்ணாலப் பொண்ணாக் காணவேணும்னு கடைசி நேரத்திலே ஆசைப்பட்டதை நான் ஆசைதீர நிறை வேத்தி வைக்கப் போறேன் ! இந்தப் பாவியை ஒரு புண்ணியவதியாக ஆக்கி என்னை ஆட் கொண்ட சாமீ...

கண்கண்ட என்னோட சாமி...சாமி... இந்த மச்சான் காரவுகதானுங்க !''

— சுந்தரி ஆனந்தமாக விம்மிச் சிரித்தாள்.

''நான் நினைச்சது சரிதான் ! தங்கச்சி, நீ ரொம்ப ரொம்பக் கொடுத்து வச்ச பொண்ணுதான் !''

— வைத்தியர் மனம் விட்டுச் சிரித்தார்.

''நானும் கொடுத்து வச்சவன் ; அதாலதான், நான் சுந்தரித் தங்கத்தை எடுத்துக்கிடப் போறேனுங்க !''

வீரமணி ஆனந்தமாகச் சிரித்து விம்மினான்.

வெள்ளிக்கிழமை.

நிலம் தெளிகிறது.

பனங்குளத்துக்கும் குளமங்கலத்துக்கும் எல்லை சொல்லிப் பொதுக் காவல் தெய்வமாக விளங்கிய திரிபுரசுந்தரியாம் மகமாயித்தாயின் திருச்சந்நிதானம்.

தூப தீபாராதனை நடந்தது.

கெட்டிமேளம் முழங்குகிறது.

ஆணழகன் வீரமணி, பெண்ணழகி சுந்தரியின் தங்கக் கழுத்திலே தங்கத் தாலி கட்டி, மூன்று முடிச்சுக்கள் இட்டான். திருமண மலர்மாலைகள் மணம் சூழ்ந்து எக்காளமிட்டுக் குலுங்கிட, வீரமணி — சுந்தரி ஜோடி தம்பதி சமேதராக ஆயி மகமாயியை மகிழ்ச்சிக் கண்ணீர் பொங்கி வழிந்திடக் கைகூப்பிச் சேவித்தனர்.

பின்னர், ஆலமரத்தடியில் வீரமணியின் அழகான பெட்டி வண்டியில் திண்டுகளிலே சாய்ந்திருந்த மூதாட்டி சொக்கியின் சந்நிதியில் இருவரும் சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட்டனர்.

உணர்ச்சிப் பெருக்கி திக்குமுக்காடி விம்மினாள் சொக்கி! — "ஆத்தாளே சுந்தரி! நீயும் உன் மாமன் மகனும் லோகத்திலே இருக்கிற பதினாறு சுகமும்பெத்து நீங்க ரெண்டு பேரும் நகமும் சதையுமா மகராசி தயவிலே ரொம்ப ரொம்பக் காலத்துக்கு அமோகமா வாழவேணும்! ஆயி மகமாயி என் நெஞ்சிலேயும் பால் வார்த்துபுட்டா! இனி நான் பிழைச்சுக்கிடுவேனாக்கும்!" — கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் செய்தாள்

புதுமணத்தம்பதி இருவரும் ஏன் அப்படிச் சிலையாகி விட்டனர்?

'இனி நான் பிளைச்சுக்கிடுவேனாக்கும்னு கிழவி சவால் விடுதே? நடந்த பொய்க் கூத்து சொக்கிக்குப் புரிஞ்சிடாதா? வீரமணிதான் முத்தையன் அப்படின்னு சாதிக்கும்படி ராத்திரி சுந்தரிக்குச் சாடைகாட்டிய நான் பாவி ஆகிடமாட்டேனா? — வைத்தியர் சன்னாசி கைகளைப் பிசைந்தார். ஆனா ஒண்ணு! வீரமணியைப் பார்த்து முத்தையன்னு நம்பினதாலே தான் கிழவி இந்த மட்டுக்காச்சும் உயிர் பிழைச்சுதாக்கும்!?— மனத்திற்குச் சமாதானம் செய்துகொண்டார். ஆபத்திற்குப் பாவம் இல்லைதானோ?

சுந்தரி அர்த்தமுள்ள பார்வையால் தன் புருஷனை அளந்தாள். சிந்தனை வசப்பட்டிருந்த வீரமணியின் நிழலில் ஒண்டினாள். ஏங்கறேன்; நீங்க எதுக்கும் மனசைப் போட்டு உளப்பிக்கிடாதீங்க. என்னோட ஆத்தாக்காரி நல்லாப் பொழைச்சிக்கிட்டடியும், நானே

நடப்பைப்புட்டு வச்சு அதுக்கிட்டே மாப்புக் கேட்டுக் கிடுவேனுங்க !'' என்றாள். அதுபோலவே, வைத்தியரிடமும் பேசினாள்.

வீரமணியின் மச்சுவீடு பாளயக்காரர் வீடு மாதிரி அமர்க்களப்பட்டது.

ஆறு தலைக் கட்டுக்காரர்களும் பம்பரமாகச் சுழன்றார்கள்.

ஊர் விருந்து ராஜமரியாதையோடும் ராஜோபசாரத்தோடும் நடந்தது.

சுந்தரியைப் பெற்றவள் ஒரு லோட்டா சேமியாப் பாயசத்தை ஒரே மடக்கில் குடித்தாள் !

இரவு சாந்தி முகூர்த்தம் நடந்தது !

மறுநாள் விடிந்ததோ இல்லையோ?— கிழவி சொக்கியின் உயிர் வடிந்தது ! ஜீவன் பிரிந்தது !

கோடை இடியின் முழக்கமாக இருமல் சத்தம் ஒலிக்கவும் எதிரொலிக்கவும் கேட்ட சுந்தரி உயிர்க் கழுவிலே துடியாய்த் துடித்தவளாகத் திடுக்கிட்டு ஏறிட்டு வீழ்ந்தாள். மீண்ட சுயப் பிரக்ஞையிலே, மேடையேறிய இடைவேளைக் கண்ணாமூச்சி நாடகம் பாதியில் நின்றுவிட்ட துப்பு அவளுக்குப் பிடிபடாமல் இருக்குமா ? ''மச்சானே ! ஏந்திருச்சி மூஞ்சி கழுவி விபூதி இட்டுக்கிட்டு வந்து குந்துங்கங்கிறேன்!— பத்தியக் கஞ்சி குடிச்சுப் பூடலாம்!'' என்றாள்.

மூச்!— வீரமணி திரும்பவும் தூக்கம் என்கிற சொர்க்கத்திற்குத் திரும்புகிறான் !— ஒருவேளை, ஸ்ரீமான் கும்பகர்ணனிடம் வரம்பெற்றிருப்பானோ ?

தொட்ட குறைக்குப் பரிகாரமாக, அல்லது, பரிவர்த்தனையாக, விட்ட குறையைத் தொட்டாள் சுந்தரி!—அதிசயமான நேசமும் அபூர்வமான பாசமும் இரண்டடிக் கலந்து உயிரும் உயிர்ப்புமாகியிருந்த அவளது பெண் உள்ளத்திலே திரும்பத் திரும்ப அந்தக் கேள்விக்குறிதான் விதியாகச் சிரித்து அவளைச் சித்திரவதை செய்து கொண்டிருத்தது.

எனக்கே சொந்த பந்தம் கொண்டிருக்கிற என் புருஷன்காரவுகளுக்கு நித்த நித்தம் முந்தானை விரிச்சுக் கிட்டு இருக்கிற எனக்குக்கூடத் தெரியாமல் பாதாளக் கேணியிலே விழுந்து சாக ஏனாம் எத்தனம் செஞ்சாகளாம்? என் சொந்த மச்சான்காரர், என் வரைக்கும் அந்நியமான ஒரு கதை ஆகிப்பிட்ட என்னோட மாமன் மகன் முத்தையன் பேரை அவர் கிட்டே மாப்பு கேட்டாகளே, அதுக்கு உண்டான காரண காரியந்தான் என்னவாம்?... ஆத்தாளே! மகமாயி!.... மான ரோசத்துக்கு உசிரைப் பயணம் வச்சிட்டே என்னோட மானம் மரியாதையைக் கட்டிக் காவந்து பண்ணிக்கிட்டு வர்ற எந்தெய்வமே எனக்குச் சதம்னு நம்பியும் மதிச்சும் உயிர் வாழ்ந்துக்கிட்டு இருக்கிற உன் குஞ்சோட மஞ்சள் குங்குமத்தை நீதாண்டி தாயே, எப்பவுமே கட்டிக் காக்கவேணும்!...'

தன்னை மறந்தவளாக, மெய்ம்மறந்த நிலவரத்தில் செருமினாள் சுந்தரி!

இடைவேளைக் கூத்து தொடர்ந்தது!—தொடர் சேர்த்தது!

வரும் விதி இரவு தாங்காதாமே?

உண்மைதானோ?

உண்மையாகவே இருக்க வேண்டும் !...

அப்படியென்றால், விதியும் உண்மைதானா ?

முந்தா நாள் ஊர்ப் பஞ்சாயத்துக் கூடத்துக்குப் பின்புறம் இருந்த பொட்டல் வெளியில் அடுத்த செங்கல் சூளையை அமைக்கத் திட்டமிட்டு, அதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்து முடித்துவிட்டு, அறந்தாங்கிச் செவ்வாய்ச் சந்தைக்கு ரேக்ளா வண்டியில் புறப்பட்டான் வீரமணி. காலையில் பத்து நாழிகைக்குக் கிளம்பினவன் வீட்டை மிதித்தபோது, அந்தி ஒளி கண் சிமிட்டிச் சிரித்தது.

சுந்தரி கோணிச் சாக்கைப் பிரித்ததும், முந்திரிக் கொட்டையெனத் தலை நீட்டிய ஒட்டு மாங்காயை விசுக்கென்று கடித்தாள். முதுகுப் பக்கத்தில் கள்ள விழிப் பார்வையைச் சொடுக்கின்ற நேச மச்சானைக் கவனித்தவுடன், நாணினாள். இப்போது வயிற்றுக்கு மட்டில் சற்றே அடங்கியதும் மெய்தான் !

சுறாக்கருவாடு, தக்காளி, முட்டைகோஸ், பச்சைச் சொத்தமல்லி, கறிவேப்பிலை, மிளகாய், கனகாம்பரப்பூ லாலாகடை அல்வா, சாத்துக்குடி — இப்படிச் சாமான் சட்டுகள் அணிவகுத்தன. விளை மீனும் நண்டும் அணிபிரிந்தன.

இலங்கைத் தமிழர் பிரச்சனையில் சுமுகமான தீர்வு கண்டு நல்லமைதியை நில நாட்டப் போவதாக அதிகார தோரணையில் சொல்லிக் கொண்டு அங்கே 'டேரா' போட்டிருக்கும் இந்திய அமைதிப் பாதுகாப்புப் படையினருக்கான நிகழ்ச்சிகள் ரேடியோவில் ஒலிபரப் பாகிக் கொண்டிருக்கின்றன.

''மின்ஒளி கண்ணடிக்கத் தொடங்கியது !

''மீன்கறிச் சாப்பாடு முடிந்தது.

வீரமணியும் சுந்திரியும் தம்பதிக் கோலத்தில் இரண்டாங்கட்டில் குந்திக் கோலாகலமாக வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தனர்.

அந்நேரத்திலே —

''அயித்தை மகளே ! சுந்திரிப் பொண்ணே !''

கூப்பிட்ட குரலை இனம் புரிந்த சுந்தரி, இனம் புரியாத அதிர்ச்சியோடும் கலக்கத் தோடும் நெஞ்சம் பதை பதைக்கப் பாய்ந்து வந்து திட்டி வாசலில் நின்றாள் !

தருமத்தைச் சூது கவ்விக் கொண்ட மாதிரி மேகத்தில் மூக்கிக் கொண்ட தேய்பிறையின் மங்கல் வெளிச்சத்தில் கூட, அந்த உருவம் சத்தியத்தைப் போலவே பளிச்சென்று காட்சியளிக்கிறது !

வைத்த விழிவாங்காமல் அவ்வுருவத்தையே சுந்தரி பார்த்தாள்; பார்த்தாள்; பார்த்துக் கொண்டே இருந்தாள். ''ஆ நீங்களா ? நீங்களே தானா ! மெய்யாலுமே என்மாமன் தானா ? ... சத்தியமாவே நீங்க நீங்க... என்னோட மாமன்மகன் முத்தையாதானா ?'' விம்மி வெடித்திட விதியாகக் கேட்டாள்.

''அயித்தை மகளே !... நான், நான் உண்மையாகவே உன் மாமன் மகன்தான் ! ... சத்தியமாகவே, நான்... உன்னோட மாமன் மகன் முத்தையனேதான் ! உன் மாமன் மகன் இன்னம் செத்துப் போயிடல்லே, அயித்தை மகளே !''

சாட்சாத் முத்தையனேதான் பேசினான். புன்னகை செய்தவனாகவே பேசினான்; உந்திக்கமலத்தினின்றும் ஈரக் கசிவோடு கனிந்த புன்சிரிப்பு அல்லவா அது ? —

ஆனாலும், அவனையும் மீறிய சோகம் அவன் பேச்சில் அடிநாதமிடத் தவறிவிடவில்லைதான்! கட்டபொம்மன் மீசை மிடுக்கோடு துடுக்காகத் துடித்தது!

'ஆத்தாளே'! — வீரிட்டாள் சுந்தரி தங்கத்தாலி ஊஞ்சலாடியது! அவள் மறுபடி தன் மாமன் மகனை ஏற இறங்கப் பார்த்தாள்; பார்வையிட்டாள்!

ஐயையோ!...

முத்தையனின் வலது கையும் இடது காலும் எங்கே?

சுந்தரிக்குத் தலை ஆலவட்டம் சுற்றியிருக்க வேண்டும் தரையிலே சாயப்போனவளைப் பதட்டத்தோடு பாய்ந்து வந்து சாமர்த்தியமாக ஏந்தித் தாங்கிக் கொண்டான் வீரமணி. பிறகு அவளைத் தோள்களில் சாத்திப் பதனமாகத் தூக்கிக் கொண்டுபோய் வெளி வாசல் திண்ணையில் கிடத்தினான். மறுநொடியிலே வாசலுக்கு வந்து நின்றான்; பாதாதி கேசமாக முத்தையனைப் பார்த்ததுதான் தாமதம்; அவனது கண்களில் ஆடிப்புனலாகக் கண்ணீர் ஓடியாடி வழியத் தலைப்பட்டது. பாசமும் பச்சாத்தாபமும் பீறிட, "முத்தையா அண்ணாச்சி!" என்று விளித்து, ஊன்று கோலின் உறுதுணையோடு தடுமாறிக் கொண்டிருந்த முத்தையனை அப்படியே நெஞ்சோடு நெஞ்சாக அணைத்துக் கொண்டான் வீரமணி கயிற்றுக் கட்டிலை நகர்த்திப் போட்டு, "இங்கிட்டுக் குந்துங்க" என்று உபசாரம் செய்தான். முத்தையனுக்கு அனுசரணையாகத் துணை இருந்து, அவன் கட்டிலில் வசதியாக உட்காரவும் உதவினான். கைப்பிடிக்கழியையும் அழகான, பெரிய பிரயாணத் தோல் பையையும் அவன் காலடியிலேயே வைத்தான் வீரமணி.

பிறை நிலவும், வீசு தென்றலும் அப்போது அங்கே விதியோடு கண்ணாமூச்சி ஆடிக்கொண்டிருந்தனவோ

என்னவோ? ஒரு வேளை, அங்கே அப்போது உருவாகியிருந்த திடீர்த் திருப்பக் காட்சியைப் 'பார்வையிடத் தான் விதி விஜயம் செய்திருக்கலாமோ?

உயிருக்குத் துணை ஆனவளை அண்டினான் வீரமணி.

முத்தையன் வேகமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறான்.

சலனம் கண்ட வனாகத் திரும்பினான் வீரமணி. "முத்தையா அண்ணாச்சி!" என்று என்னவோ சொல்ல வாயெடுந்தான்.

அதற்குள் 'குறுக்குச் கால்' ஒட்டினான் முத்தையன். "என் பேர் கூட உங்களுக்குத் தெரிஞ்சிருக்குதுங்களே?" என்று என்னவோ ஒரு நப்பாசை துள்ளக் கேட்டான்.

"உங்க பேர் — அன்பான உங்க பேர், உங்க முகம் அறியாமலே, எனக்குப் பதினெட்டு, பத்தொன்பது மாசத்துக்கு முன்னாடியே தெரிஞ்சுபோச்சுது; முகம் அறிஞ்சதுக்கு அப்புறம், மறந்துபோயிருந்த உங்க பேர் இப்ப என் நினைப்புக்கு வந்திருச்சு; என்னைக் கட்டிக்கிட்ட சுந்தரி, அதாங்க, உங்க அயித்தை மகள் சுந்தரி உங்களை எதிர் பார்க்காமல் கண்படியும் பேயைக் கண்ட மாதிரி கதிகலங்கி "நீங்க மெய்யாலுமே என் மாமன் மகன் முத்தையனே தானா?' அப்படின்னு கேள்வியும் எதிர்க் கேள்வியும் கொஞ்சம் முந்தி கேட்டதையும் நான் கேட்டுக்கிணுதான் நின்னேன்? ..."

மகிழம் பூக்களின் வாசம் திடீரென்று காற்றில் அலைகிறது.

"ஓ அப்படியா? சரிங்க!" — குரல் தடம் மாறியிருக்கலாம்; மரத்துப்போய் விட்டிருந்த வலது காலுக்கு உணர்வூட்டத் தடவிக் கொடுத்தாள். அங்கிருந்து

விடைபெற்றுப் புறப்படத் தவித்துக் கொண்டிருந்தான் முத்தையன்.

வீரமணி சாமான்யப்பட்ட புள்ளி அல்லதான்! அவனுக்கு ஊகம் தெரியும். "அண்ணாச்சி, அந்தாலே உங்க அயித்தை பொண்ணு மசக்கம் தீர்ந்து ஏந்திருச்சிருச்சு; கைகழுவத் தண்ணி கொண்டாரேன். சுந்தரி கெண்டை மீன் குழம்பு வக்கணையாய் ஆக்கியிருக்குது; சோறு உண்ணுப்புட்டு அப்பாலே, சுமையும் சோதனையும் தீரப் பேசலாமுங்க!" என்றான். எவ்வளவு நல்லவனாக இருக்கிறான் இந்த நல்ல மனிதன்!

முத்தையனுக்குச் சிரிப்பு வரமறுத்திருக்க வேண்டும். "எனக்குப் பசிக்கல்லீங்க, வீரமணி," என்றான்,

வீரமணிக்குச் சுருக்கென்றது. நெருஞ்சிமுள் தைத்திருக்கக் கூடும். நெஞ்சைத்தடவிவிட்டான். "உங்களுக்குப் பசிக்கல்லே என்கிறது நாயம்தான்; பசிக்கவும் பசிக்காதுதான். ஆனாலும், விருந்தாளியான உங்களைக் கை நனைக்காமல் விட்டுப்புடமாட்டேனுங்க! இந்த வீரமணி சொன்னால் சொன்னதுதானாக்கும்! பேசினான் இளஞ்சிங்கம்; கொடுவாள் மீசையை நீவிவிட்டான்.

முத்தையனின் நெஞ்சம் புலம்பியது: துடித்தது; தவித்தது. "நம்ம தமிழ்மண்ணை என்னோட ஒற்றைக் கால் மிதிச்சதும், நான் முகம் கொடுத்துப் பேசின முதல் ஆசாமி எங்க ஊர் வைத்தியர் சன்னாசி அம்பலம் தான்; அவர் உங்களைப் பத்தி ரொம்பவும் பெருமையாய்ச் சொன்னாருங்க; அப்பாலே...!" அவன் பேச்சை நிறுத்தவில்லை,

"மச்சானே!"

கெட்ட சொப்பனம் கண்டவளாகப் பதறி எழுந்து வந்த சுந்தரி, இடது கை அக்குளுக்குள் அணைகொடுத்துத் துணைநின்ற ஊன்று தடியைத் தாங்கிப் பற்றிக் கொண்டே எழுந்து நின்ற முத்தையனைப் பார்த்ததும், மறுபடியும் ஓலமிட்டாள்; "மச்சானே! அது... அது... அவுக நெசம்மாவே என்னோட மாமன் மகன் முத்தையா தானுங்களா ?"

உருக்குலைந்து உருகினான் வீரமணி "ஆமா, புள்ளே, ஆமா! — இவுக உன் மாமன் மகன் முத்தையனேதான் !" என்று அழுத்தம் திருத்தமாகச் செப்பினான். கண்ணீருக்குக் கரை உண்டுதான் !— கறையும் உண்டுதானோ ?

விழிகளே வெள்ளம் பாய்ந்திட ஏறிட்டு விழித்தான் முத்தையன் !— "அயித்தை மகளே ! நான் ஜனிமேலே செத்தால்தான் உண்டு !"—அவன் சத்தியம் பறைந்தான்!

உணர்ச்சிகளின் சுழிப்பில் சிக்கித் தவித்துத் தடுமாறித் தத்தளித்த அபலை சுந்தரி மனமும் மனச்சாட்சியும் பதைபதைக்க, "ஐயையோ என்னைச் சோதிச்சுப் பூட்டியே, ஆத்தாளே ?... ஐயையோ, மகமாயி ! என்னைப் பாவி பழிகாரி ஆக்கிப்புட்டியே ?" என்று அலறினாள்.

உயிர் துடிக்கவும் கண்கள் உருகவும் தவித்த வீரமணி சட்டென்று பாய்ந்து தன் அருமைப் பெண்டாட்டியைத் தாங்கிக் கொண்டு, அவளுடைய கண்ணீரைத் துடைத்தான். அவனுடைய கண்ணீரை யார் துடைப்பதாம்? — 'அட, பாழும் விதியே ! ஈவிரக்கம் இல்லாத ஒன்னோட விளையாட்டுக்கு இருந்திருந்து நாங்கதானா-நாங்க மூணு பேரு தானா ஆப்புட்டோம் ?'

முத்தையன் செருமினான் !— "வார்த்தை தவறிட்ட நான்தான் பாவியாகிப் புட்டேன்! பாளத்த விதி என்னையேதான் சோதிச்சுப்புடுச்சு !... ஆமா, சுந்திரிப் பொண்ணே, ஆமா !"— தீயை மிதித்துவிட்ட கணக்கில், பழங்கணக்கைப் பார்க்க நாட்டமில்லாமல், பசியை மண்டையில் அடித்துவிட்டுப் புறப்படும் வேளைக்காகத் தவித்துக் கொண்டிருந்தான் !

பூங்கரங்களை நடுநடுங்கக்குடுத்தவாறு மாமன் மகனை அண்டுகிறாள் அத்தைமகள்; குலுங்கக் குலுங்கச் செருமுகிறாள்; விம்முகிறாள்; கதறுகிறாள்;

முத்தையனையும் சுந்திரியையும் மாறிமாறி — மாற்றி மாற்றிப் பார்த்தான் வீரமணி. வாய்விட்டுத் தேம்பினான். நெஞ்சுக் கூட்டை நிர்த்தாட்சன்யமாகத் தேய்த்துக் கொண்டான். மனச்சாட்சியின் வலியைத் தாளமாட்டாதவனாக மனம் விட்டு அழுதான்.

முத்தையன் வாய்திறந்தான்.

"புருஷனும் பெண்சாதியும் இனிமேலும் அழுதால், அப்பாலே நான் நெஞ்சு வெடிச்சுச் செத்துப் போயிடுவேன் ! வர்ற விதி ராத்தங்குமோ, தாங்காதோ எனக்குத் தெரியாது; அதைப்பத்தி எனக்கு அக்கறையும் கிடையாது !ஆனாலும், ஒரு உண்மை மாத்திரம் எனக்குப் புரிஞ்சிடுச்சு ! — ஆமா, எனக்கு நானேதான் விதி ! ... நான் ராத்திரியோடவே போயிடுவேன்: அதுக்குள்ளாற உங்க இரண்டு பேரோடவும் ஆறுதலாய்ப் பேசியாக வேணும் ! —அந்நாளையிலே நான் அக்கரைச் சீமைக்குப் புறப்பட்ட சமயத்திலே' ஒரு கணக்கு முடிஞ்சு திரும்பினடியும் என் அயித்தை மகளைக் கண்ணாலம் கட்டிக்கிடுறதாக அதுகிட்டே நான் கொடுத்த வாக்கை நம்பியும், நான் சொன்ன சொல்லை மதிச்சும், காலம் கடந்தும்கூட, எனக்காகக் காத்துக்கிட்டு இருந்திச்சு சுந்தரி !

அப்போ, சாகப் பிழைக்கக்கிடந்த அதோட ஆத்தாக்காரி அதைக் கண்ணாலப் பொண்ணாய்க் காண ஆசைப் பட்டுச்சு; என் கதையே முடிஞ்சி போச்சு அப்படீன்னு ஊரும் நாடும் முடிவு செஞ்சிருந்த அந்நேரத்திலே, தன்னோட ஆத்தாக்காரியோட சோதனைக்கு ஈடு கொடுக்க வீரமணியைச் சோதிச்சுது சுந்தரி! அப்புறந்தான் விதி விளையாடவும் விளையாட்டுக் காட்டவும் ஆரம் பிச்சுதாம்! வீரமணியைக் கண்ட சுந்தரியோட ஆத்தாக்காரி வீரமணியை முத்தையன்னு நம்பிப் பூரிச்சுப்போச்சாம்! நீங்க இரண்டு பேரும் உங்க பூர்வ ஜன்மப்பலத்தினாலே இப்பிறப்பிலே புருசனும் பெண் டாட்டியும் ஆனீங்க! இப்படிப்பட்ட சகலத்தனை சங்கதிங்களையும் எங்க நாட்டு வைத்தியர் சன்னாசி அம்பலம் விளம்பரமாகவே விளம்பிட்டாராக்கும்! ஆமாங்க, வீரமணி! ஆமா, அயித்தை மகளே சுந்தரி!"

முத்தையன் நெடுமூச்செறிந்தார்!

மௌனம் சிரிக்கிறது!

விதிக்குச் சிரிக்கத்தான் தெரியாது?

முத்தையனுக்கு நேருக்கு நேராக வந்து நின்றாள் சுந்தரி. துண்டிக்கப்பட்ட முத்தையனின் வலது கையை யும் இடது காலையும் தொட்டுக் கண்களிலே ஒற்றிக் கொண்டாள். சரிந்த மாராப்புச் சேலையைச் சரி செய்து கொள்ளவும் அவள் மறந்தாள்!

அங்கே, அப்போது கண்ணீரும், கண்ணீரும் சங்கமம் ஆயின போலும்!

# 4

சீர் கொடுத்த புண்ணிய சீலனே சீர் ஆகி நிற்கையில், சீர் ஆன இல்லத்தரசி சீர்பெற்று நிமிர்ந்து நிற்க மாட்டாளா ? — கொண்டவன் கொய்துபோட்ட சேலை முந்தானை கொண்டு, சுடுநீரைக் கொய்தாள் ! — "விதி உங்க மேனியோடவும் விளயாடிச் சுங்களாங்காட்டி !" என்று புலம்பினாள் சுந்தரி.

"சிங்களப் படுபாவிங்கதான் நம்ம முத்தையனோட விளையாடியிருக்கோனும் !"—தமிழின உணர்வுகள் சுடர் தெறிக்க, ஆத்திர ஆவேசத்துடன் பேசிய வீரமணி கோபம் தூள்பறக்கப் பற்களைக் கடித்துக் கொண்டான்.

வீரமணியின் இனப்பற்று முத்தையனை உணர்ச்சி வசப்படச் செய்திருக்க வேண்டும். அரைக்கணம் மெய் மறந்து கண்க்ளை மூடிக்கொண்டான். திறந்த கண்களில் கண்ணீர் மடை திறந்தது. "சபாஷ், வீரமணி !" — வீரமணிக்கு முத்தம் கொடுத்தான்.

"நான் மட்டும் என் மாமன் மகனோட அங்கே இருந்திருந்தா, என் மாமன் மகனை இம்மாங்கொத்த அவல நிலைக்கு ஆளாக்கின சிங்களப்பேய்களை அங்கேயே கடிச்சுக் குதறி அவங்களோட ரத்தத்தைக் குடிச்சிருக்க மாட்டேனா !

ஆஹா !

வீரத் தமிழச்சிதான் சுந்தரி !

சுந்தரியின் திசைநோக்கிச் சிரம் தாழ்த்துகிறான் முத்தையன் !

''சிங்கள வெறிப் பயல்கள் ரொம்பக் காலமாகவே என் உயிரைப் பறிச்சுப்பிடக் குறி வச்சிருந்தாங்க இலங்கையிலே அமைதி காப்பதாகச் சொல்லி நம்ம இந்தியப் படைங்க அங்கே வந்து சேர்ந்ததிலேருந்து சிங்களச் சிப்பாய்களோட அநியாய அட்டூழியங்கள் அத்து மீறிப் போச்சு. போன ஜூன் கெடுவிலே திரிகோண மலை அடிவாரத்திலே எங்களைச் சிங்களவெறியர்கள் மடக்கிக் கிட்டாங்க. எங்க விடுதலைப்புலிப் பட்டாளத்துக்கிட்டே அவங்க ஜம்பம் சாயுமா ! சகட்டு மேனிக்குச் சிங்களச் சிப்பாய்களைத் தீர்த்துக் கட்டிட் டாங்க ! அந்நேரத்திலே என்னைக் குறிவச்சு மூணு சிங்கள வெறியர்கள் மூணுவாட்டி சுட்டாங்க. அவங் களாலே என் வலது கையையும் இடது காலையும் மட்டுந்தான் பறிக்க முடிச்சுதுங்க !... அங்கே நித்தியக் கண்டம் பூர்ண ஆயுசு கணக்கிலே நித்தம் நித்தம் செத்துப் பிழைச்சுக்கிட்டு இருக்கக் கூடிய நம்ம தமிழ் மக்களுக்கு உலகறியப் பரிபூரண மான் உறவுரிமைகள் கிடைக்கிற பரியந்தம், எங்களோட தன்மானப் படைங்களுக்கு ஊண் ஏது, உறக்கம் ஏதுங்க?— எங்களோட லட்சியம் உலகறிய வெற்றிபெறப் போகிற இன்ப விடுதலை நாள் இனியும் வெகு தூரத்திலே இல்லேங்க ! ஆனால் அந்தக் கடமையிலே பங்குபற்றிப் பாக்கியம் பெறக்கூடிய நல்ல சந்தர்ப்பத்தைக்கூட ஆண்ட வன் தட்டிப்பறிச்சுக்கிட்டு என்னை நொண்டி ஆக்கிப் புட்டானே ?... இந்நேரத்திலே நன்னி மறக்காமல் ஒரு உண்மை நடப்பைச் சொல்லிப்புட வேணும் ! — என் அன் பான தலைவர்களோட புண்ணியத்தாலேதான் நான் மூணு தக்கம் காவிலேருந்து தப்பி எப்படியோ மறுபிறப்பு எடுத்தேன் !. சிகிச்சை முடிஞ்சு இருபது நாளைக்கு முந்தி நான் என்னோட பாதாளக் கூடத்துக்குத் திரும்பினதிலே

யிருந்து, என் மனசே என்னைக் கொல்லாமல் கொன்னுக்கிட்டிருந்த நரகவேதனையை என்னாலே தாளவே முடியாமல் போச்சு; கருவண்டாட்டம் என்னை அல்லும் பகலும் துளைச்செடுத்த நெஞ்சு உறுத்தல் என்னைக் கட்டாயமாய் எந்த நிமிஷத்திலேயும் சாகடிச்சிப்பிடும் என்கிறதுப்பும் எனக்கு வள்ளிசாய்ப் புரிஞ்சிபோச்சு! ஆகச்சே, எனக்குள்ளே ஊடாடிக் கூட்டுப் புழுவாய் என்னை அரிச்சுத்தின்ன ஒரு நப்பாசையை — நயமான ஒரு நப்பாசையை எங்க தலைவர் பாருங்க காதிலே ஒரு புலரியிலே ஓதினேன் .... !''

ஒரே மூச்சிப் பேசிய முத்தையாவுக்கு இருமல் வெடித்தது !— மூச்சையல்ல — பேச்சை நிறுத்தினான் அவன் !

வீரமணியை முந்திக் கொண்டு அடுப்படிக்குப் போய்த் திரும்பிய பெருமைக்கு உடையவள் சுந்தரியாகவே இருப்பாள் ! — மாமன் மகனின் உதடுகளில் லோட்டோவைப் பொருத்தி மிக விழிப்போடு அருகிலே, நின்றவளும் சாட்சாத் சுந்தரியாவே இருக்க வேண்டும்!— அவளுக்கு அதிசியமாகப் பசித்தது ! மறு நொடிப்பில் உயிர் போய் விட்ட பாவனையில் பதறினாள் ; மாமன் மகனே ! கோபப்படமாட்டீகளே ? சத்தமுந்தி திடுதிப்னு பயங்கரமாய் அடிச்ச சூறையிலே. என்னோட மூளையே குழம்பிப்பூடுச்சுங்க ! செத்துப் போயிட்டுப் பிழைச்சு வந்து சேர்ந்திருக்கிற விருந்தாளி ஒங்களுக்கு முதல் காரிபாய்ச் சோறு படைக்கோணுமே என்கிற சகசமான புத்திகூட இந்நேரமாத் தடுமாறிப் புடிச்சுக்கிடுங்க. நடைக்குப் பறிவோம் ; அங்கே வெளிச்சத்திலே சோறு உண்ணலாமுங்க,'' என்று கூறியவாறு, மாமன் மகனின் இடது கையை ஊன்று கோலோடு பற்றினாள்.

அந்தப் புதிய ஸ்பரிசம் முத்தையனைச் சுட்டதோ ? அதனாலேதான், நெருப்புப்பட்ட மாதிரி அதிர்ந்

தானா ?—'' எனக்குப் பசிக்கல்லே !'' சிணுங்கலாச் சொன்னான்.

''ஓங்களுக்குப் பசிக்காது தாங்க, மாமன் மகனே!— உண்மைச் சங்கதி ஓங்க அயித்தை மகள் எனக்கு மட்டுப்படாதுங்களா ? நம்ம சாதி சமுதாயத் தருமப் பிரகாரம் விருந்தாளி ஒருவாய்ச் சோத்தையாச்சும் வாயிலே அள்ளிப் போட்டுக்கிடவேணுமே ?''

முத்தையன் குறுக்கிட்டான் ''சுந்தரி!'' என்று மறுபடி விம்மியபடி, முடமான தன்னுடைய சோற்றுக்கையின் அடிப்பகுதியைக் கண்களிலே ஒற்றிக் கொண்டான்.

சுந்தரி உருகினாள். மாமன் மகனின் இடதுகையைத் தன் இடதுகையில் பின்னிக் கொண்டே, ''நான் இருக் கையிலே நீங்க கவலைப் படலாமுங்களா ? நான் என்னோட சோத்துக் கையினாலே உங்களுக்குச் சோறு ஊட்டிவிட மாட்டேனுங்களா, மாமன் மகனே ?'' என்று உத்தாரணம் கொடுத்தாள். ''நீங்க இனி அழப்படாதுங்க; அப்புறம் என்னாலே தாளவே ஏலாதுங்க, ''என்று கெஞ்சினாள். நடந்தாள்.

முத்தையனின் அழகான பயணப்பை இப்போது வீரமணியை நிழலாகத் தொடர்ந்தது.

மின்ஒளியின் வெட்டவெளிச்சம் நடையைப் பட்டப் பகலாக்கியது.

முகட்டுக் கூட்டிலிருந்து ஜோடு சேர்ந்து எட்டிப் பார்த்த சிட்டுக் குருவிகள் அதுவரையிலும் பழக்கம் இல்லாத அந்நியன் ஒருவனைச் சந்தித்ததாலோ என்னவோ, வித்தியாசமான குரலெடுத்துக் கிறீச்சிடு கின்றன.

சுவரிலும் காலம் ஓடும். அத்தாட்சி; ஒன்பதுமுறை, முறை தப்பாமல் ஒலித்த — எதிரொலித்த மணிச்சத்தம்.

ஊட்டினாள் அத்தைமகள்.

உண்டான் மாமன்மகன்.

வறுத்த விளைமீன் துண்டத் தினின்றும் முள்ளைப் பிரித்து நீட்டிய நிம்மதி வீரமணிக்குக் கிட்டுகிறது.

''இன்னம் ஒருவாய்... ''என்று கெஞ்சினாள் சுந்தரி.

''போதும், போதும். வயிறு நிறைஞ்சிடுச்சு !'' என்றான் முத்தையன். இருந்த இடத்திலேயே வாயைக் கொப்பளித்து எச்சிலைக் சுகச்சிதமாக முற்றத்திலே துப்பினான். அவன் படுகெட்டி; — இம்மிகூட அழவில்லை!—அவன் முத்தையனா, இல்லை, கொக்கா ?....

தாம்பூலத் தட்டு வருகிறது.

ஏலக்காயை எடுத்துமென்றான் முத்தையன் ! — ''முடியாத என் கதையோட விட்ட குறையை நொடியிலே தொட்டு முடிச்சுப்பிடுவேன் ! — அயித்தை மகளே ! .... நான் உயிரும் உடம்புமாக இருக்கிறப்பவே, உன்னோட அன்பான முகத்தையும் மனசையும் ஒருதரம், ஒரேயொரு தரமாச்சும் கண்ணாறக் கண்டுப்புட வேணும் என்கிற தர்ம நாயமான என் வைராக்கியம் அங்கீகாரம் பெற்றிடுச்சு ; தகுந்த காபந்தோட நான் கடல் கடந்தேன் ! — சத்தியமாய்ச் சொல்லுறேன் வழியெல் லாம் உன் நினைப்பே தான், அயித்தை மகளே ! உனக்கு நான் அடிநாளிலே தந்த வாக்குறுதியோட நினைப்பையும் ஆசையையும் மீறி, அங்கே என்னோட தமிழினப்பற்றுத் தான் உச்சத்திலே நின்னு என்னை ஆட்டிப்படைச்ச அந்தரங்கத்தை என் மனசுதான் அறியும் ! ஒரு வேளை,

என் வாக்கை வேதவாக்காக மதிச்சும் நம்பியும் நீ இன்னமும் கூட எனக்காகக் காத்திருக்கும் பட்சத்திலே, உன்னை உனக்கு இஷ்டமான, உண்மையுள்ள ஒரு நல்ல மாப்பிள்ளைக்குக் கண்ணாலம் கட்டி வச்சுப்புட வேணும்னு முடிவு கட்டியிருந்தேன். எனக்கு உண்டான துல்லியமான கடமையை என் ஸ்தானத்திலே நின்று உன் ஆசைமச்சான் வீரமணி நிறைவேற்றி முடிச்சிட்ட நல்ல தாக்கலை இங்கிட்டுக் கேள்விப்பட்டதும், என் மனசு அடைஞ்ச சமாதானத்தை மகமாயிதான் அறிவாளாக்கும்! "அன்பிற்கு இளையவள் பேரில் நிலைத்திருந்த அன்பான பாசம் பார்வையைத் திசை மாற்றிய பின், பிரயாணப்பையை நகர்த்திப் பிரித்துப் பளபளப்பான உறை ஒன்றை எடுத்தான் முத்தையன்.

தாலிக்கு உறவும் உரிமையும் பூண்டவர்களுக்குக் கொட்டாவி வருகிறது.

வீரமணி, நீங்க இப்ப எனக்கு ஒரு உத்தரவு தருவீங்களா?''

"சொல்லுங்க, முத்தையா அன்னாச்சி!''

"என் அயித்தை மகளுக்குக் கண்ணாலத்துக்காக அக்கரைச் சீமையை மிதிச்சதுமே, ஒசத்தியான காஞ்சிக் கண்டாங்கிரியும் அபூர்வமான ரவிக்கைத் துணியும் ஏராளம் 'சல்லி' கொடுத்து வாங்கி வச்சேன். அதுகளை ஒங்க அன்பான சம்சாரத்துக்கு நான் கொடுக்கிறத்துக்கு இப்பத்தான் காலநேரம் ஒத்து வந்திருக்குதுங்க; கடைசி கடைசியான என்னோட தருமமான ஆசையை நிறைவேற்றிக்கிட நீங்க பெரிய மனசு பண்ணி அனுமதி தந்தீங்கன்னா, என்னோட மனசும் மனச்சாட்சியும் நிம்மதிப்பட்டு, பாவியான நான் கடுகத்தனை புண்ணியத்தையாச்சும் சம்பாதிச்சுக்கிட வாய்க்குமுங்க!''— அட, பாவமே! முத்தையன் பச்சைப் பாலகனாக ஆகி விட்டானே?...

ஏக்கம் மேலிடவும் ஆர்வம் மேலோங்கவும் சுந்தரி தன் புருஷனை ஊடுருவிப் பார்வையிட்டாள்.

வீரமணியின் திருஷ்டி இப்போது விருந்தாளி பேரில் நிலைக்கிறது. உணர்வுகளின் புயல் வீச்சுக்குக் கண்கள் அடிபணிகின்றன. "உங்க மேலான அன்புக்கு உரித்தான உங்களோட அத்தை மகளுக்கு மாமன் மகன் நீங்க இஷ்டப்பட்ட பரிசுகளைத் தாராளமாய்க் கொடுத்திடுங்க, அண்ணாச்சியோ!" என்றான். புனித விடியலாய் மனித நேசம் கொடிகட்டிப் பறந்தது

வீரமணியின் மகத்தான கருணைக்கு 'நன்னி சொல்லும் பாங்கில் சிரம் தாழ்த்தினான் முத்தையன். எடுத்துக்கிடு, அயித்தை மகளே!"—நிதானமாகவே இருந்தான்!—ஆகவே, நிதானமாகப் பேசவும் அவனால் முடிந்திருக்கக் கூடும்.

கையெடுத்துக் கும்பிட்ட சுந்தரி கைகள் நடுங்கிட அந்தத் துணிமணி உறையை ஏந்தியவாறு உள்ளே போனாள். ஏந்திழையாள் உள்ளே போனவள், சடுதியிலேயே வெளியே வந்தாள். "மாமன் மகன் காரவுகளே! எனக்காக நீங்க தந்த துணிப் பொட்டணத்துக்கு நடுவிலே இதுவும் இருக்குதுங்களே?" என்று கலவரம் சூழ்ந்திடத் தெரிவித்தாள், உள்ளங்கை மூடிக்கிடந்தது.

"என்னா புள்ளே அது?"—வீரமணி.

"இந்தாலே பாருங்க, மச்சானே!"

உள்ளங்கை நெல்லிக்கனியென, சுந்தரியின் உள்ளங் கையில் விதியாகச் சிரிக்கிறது அந்தத் தாலி—தங்கத் தாலி.

தூக்கு மேடைக் குற்றவாளிக்குச் சமமாக உயிர் துடிக்க, உள்ளம் துடிக்கப் பதறினான் முத்தையன்!"

அயித்தை மகளே! அந்தத் தாலியை அந்தியிலே வைத்தியர் ஐயாவைக் கண்டுக்கிட்டதுமே நானே எடுத்துக்கிடத்தான் நினைச்சேன். மனக்குழப்பத்திலே மறந்துப்புட்டேன்! அந்தத்தாலியை எங்கிட்டே வீசிப் பிடு. என்பாவம், புண்ணியவதி உன்னையும் சுத்திக் கிடப் போகுது ஊம்;, என்கிட்டே, என்தாலியைப் வீசிப்புடு, சுந்தரிப் பெண்ணே!'' அலறினான். காலடி யில் சரணடைந்த அந்தத்தாலி முடமான அவன் வலது கையில் ஊசலாடியது; ''புராணப் பாவியான இளங்கேஸ்வரனுக்கு ஜீவன் அவன் இடது தொடையிலே இருந்திச்சாம்! ஆனா, என் ஜீவன் இந்தத் தாலியிலே தான் இருக்குதாக்கும்!'' சுடுநீர் சுட்டுப் பொசுக்கி யிருக்க வேண்டும்!— '' இந்தப் பாவியினாலே புருஷன் பெண்சாதி உங்க ரெண்டு பேர் தூக்கமும் கெட்டுப் போச்சு. அக்கரைச் சீமைக்குத் தடையையும் விதியை யும் மீறித் திரும்பினால்தான், எனக்கு நிம்மதி திரும்பும். உங்க ரெண்டு பேர் கிட்டவும் பயணம் சொல்லி விடை வாங்காமல் நான் இந்த மண்ணைத் துறக்கவே மாட்டேன். கடைசி கடைசியாக ஒரு வரம் தரவேணும். இந்தப் பாவியை இப்பவே மறந்துப்புடுங்க! — புறப் படுறேன். அத்தை மகளே! கிளம்புறேனுங்க, வீரமணித் தம்பி!''

வாசலிலே, ஈரம் புள்ளிக்கோலம் இருக்கிறது!

மகிழம்பூக்கள் கூட மணக்க மறக்கின்றன!

அதோ... அதோ... முத்தையன். முத்தையன் மறை கிறான்! — நிலவிலே, நிலவோடு நிலவாக மறைகிறான்!

கஞ்சிப் பொழுது.

ஆதித்த பகவான் தீமிதித் திருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கலாம்.

அரை நாழிப் பொழுதுக்கு முன்னே வெடித்த முதல் இருமலைப்போலவே, இப்போது முழங்கிய இரண்டாம் இருமலும் கரணகொடூரமாகவே அமைந்தது.

மறுபடியும் விம்மிப்புடைத்துச் சுய உணர்வுகளை மீட்டுக் கொண்டு காட்டாற்று வெள்ளம் பாய்ந்த விழி களைத் திறந்தாள் சுந்தரி — வீரமணியின் சுந்தரி மாமன் மகனே, ஒங்க கதை அவலமாகி அலங்கோலம் ஆயிடுச்சே ? அவுகளை எக்குத்தப்பாய்ச் சோதிச்சுப் பூட்டியேடி, மகமாயி ? — மூக்கை உறிஞ்சிக்கொண்டாள். வெள்ளைக்கல் மூக்குத்தி வெள்ளைத்தனமாக அழகு காட்டியது ; அழகைக் கூட்டியது.

அடித்துப் போட்டமாதிரி மீண்டும் தூங்க ஆரம்பித்து விட்டான் வீரமணி.

"மச்சானே ! ஆசைமச்சானே !"

தொட்டு எழுப்பினாள் உரிமைக்காரி. முந்தாநாள் ராவிலே மாமன் மகன் வாரதுக்கு முந்தி மச்சான்காரர் வயிற்றுக்கு வஞ்சனை பண்ணாமல் வசமாய்ச்சாப்பிட்டது தான். நேத்து முச்சூடும் காளவாய்ப் பக்கமே நாடலே; சோறும் தேவைப்படலேன்னு சொல்லிட்டாங்க ! ராத்திரிதான் திடுதிப்னு காய்ச்சல் வந்து, உசிரை சுண்டி இழுத்தாப்பிலே நெஞ்சிவலியும் வந்திடுச்சே ?... இன்னைக்கு உச்சி நேரமாயிடுச்சு ; இன்னமும் பத்தியக் கஞ்சி குடிக்காமல் இருந்தாக்க, குடல் காய்ஞ்சி போயிடாதா? ஒருவேளை காற்று, கறுப்பைக்கண்டு மச்சான் பயந்திட்டாகளோ ? மகமாயி ஆத்தாளே !' — தண்ணீராய் உருகினாள். உடையவள்.

உசும்பாமல் வீரமணி புரண்டு படுத்தான்.

சுந்தரி தன் கணவனை இப்பொழுது தட்டி எழுப் பலானாள்.

ஐயையோ !.... மகமாயி !

மூடின கண்களைத் திறக்காமல், வீரமணி அலறிக் கொண்டிருந்தான் ; கதறித் கொண்டிருந்தான். "அண்ணாச்சி முத்தையன் அண்ணாச்சியோ !...கூத்தும் கும்மாளமுமாய் இருக்கவேண்டிய உங்களோட வாழ்க்கை என்னோட இயல்பான மனித நேசம் மனிதாபிமானம் காரணமாகவும், விதியின் வினையான தூண்டுதலோட விளைவாகவும் பாழகிப் போச்சுதே ?— அந்தப் பாவப் பழிக்கு ஆளான என்னை நீங்க மன்னிச்சுப்புட மாட்டீங்களா ? மனசறியாமல் செஞ்ச பாவத்துக்கு மனசறிஞ்சு பரிகாரம் பண்ணத்தான் கங்காணித் தோப்புப் பாதாளக் கேணிக்குக் காலம்பறவே நலியாமல் கொள்ளமால் ஓட்டம் பிடிச்சேன். ஆனா, என் கெட்ட காலம், உங்க அயித்தை பொண்ணு, அதான், என் வீட்டுக்காரி கமுக்கமாய்ப் பின்புறத்தாலே வந்து என்னைத் தடுத்துப் பிடிச்சு இழுத்து மண்ணிலே தள்ளிப்பூடுங்க ! தொபுகட்னு விழுந்த என்னை நட்டுவச்சுத் தள்ளிக்கிட்டு வந்து இங்கிட்டுச்சிறை வச்சிருச்சு !... நான் பித்துக் குளி கிடையாது ? நான் பேடியும் இல்லே ; சோப்னாங்கி யும் இல்லே... பயந்தாங்கொள்ளியும் நான் இல்லே !— நான் மானரோசத்துக்குக் கட்டுப்பட்ட அசல் ஆம்பிளைச் சிங்கமேதான் !— ஆனாலும், என் மனசும் மனச்சாட்சியும் உங்களை தேருக்கு நேரா முந்தாநாள் கண்டதிலேருந்து என்னை அல்லும் பகலும் ஒரே சித்திரவதை செஞ்சுக் கிட்டே இருக்குது ! எந்த நேரத்திலேயும் நான் கண்ணை மூடிக்கிடுவேன் !— ஆகையாலே, உங்களுக்கின்னு ஆதி நாளிலேயே விதிச்சிருந்த உங்க அயித்தை மகள் சுந்தரிக்கு உங்க கைவசத்திலே இருக்கிற அந்தத் தாலியைக் கொண்டு மறுதாலி கட்டி, நீங்க ரெண்டு பேரும் ரொம்ப ரொம்பக் காலத்..." — தொடர்ந்த பேச்சுக்குத் தொடர்பு சேர்க்க மாட்டாமல் அவனை — வீரமணியைத் திணற அடித்தது அந்தப் பயங்கர ஓலம் !

சுந்தரி — வீரமணியின் சுந்தரி மகமாயி கோயில் அக்கினிச்சட்டியைத் தலைமேல் கவிழ்த்துக் கொண்ட வளாகத் துடிதுடித்து நடுநடுங்கிக் குலுங்கிக் குலுங்கிக் கதறிக் கொண்டே, "அட, பாவி!" என்று அலறிய, தாலி கொடுத்தவனின் சொக்காயை உடும்பாகப் பற்றி நிறுத்தி னாள்!" யோவ்! ஊரறியவும் சாதி சமூகம் அறியவும் நாள் பார்த்து நட்சத்தரம் பார்த்து எனக்குத் திருப்பூட்டி, உம்மோட அருமை பெருமையான பொஞ்சாதியாக ஆக்கிக்கிட்ட எனக்கு இப்ப பதினெட்டு, பத்தொம்பது மாசம் கழிஞ்ச இன்னிக்கு எவனோ அந்நியன் ஒருத்தன் மறுதாலி கட்டவேணும்னு ரோசிக்க வாய்க்குவந்தபடி உளறிக் கொட்ட மனசு துணிஞ்ச நீ... நீ... மனுச்ச சென்மமே இல்லே!.... மிருகத்திலேயும் கேடுகெட்ட ஈனத்தனமான, அற்பத்தனமான நீ... நீ... என்னை மான ரோசம் கெட்ட தேவடியாள்னா தப்புக் கணக்குப் போட்டே!... அட, பாவி!" என்று உச்சாடனம் பெற்ற வளைப்போன்று ஓங்காரக்குரலெடுத்து ஓலமிட்டவளாக, வீரமணியின் கன்னங்களிலே மாறி மாறி, மாற்றி மாற்றி ஓங்கி அறைந்தாள் சுந்தரி — வீரமணியின் சுந்தரி.

வீரமணி மருக்கொண்டு, பித்துப் பிடித்தவனாக, "ஐயையோ!" என்று கூக்குரலிட்ட வண்ணம் வெளியே பாயத் தலைப்பட்டான்.

மறு இமைப்பில், சுந்தரி குறுக்கே மறித்து, தனக்குத் தாலி கட்டிய வீரமணியின் சிண்டைப் பிடித்துக் குலுக்கி அலக்காக நிறுத்தினாள்!—ஏய்!.... பொட்டுப் பொழுதுக்கு முன்னே, சாமி பூதத்துக்குக்கூட அடுக்கா மல், மறுதாலி அப்படி இப்படின்னு அநியாயமாவும் அதர்மமாவும் பிதற்றிக்கிட்டு இருந்த உன்னோட அசிங்க மான உளறலை நீ முடிக்கிறத்துக்குள்ளவே, நானே பத்ரகாளியாய் உருமாறி உன்னை—உம்மை 'ஆக்கினை செஞ்சு உன் தலையை வாங்கியிருப்பேன்! .. ஆனா...

அன்னிக்கு என் ஆத்தாக்காரி என்னைச் சோதிக்க, நான் உங்களை ஒரு நம்பிக்கையோடே சோதிச்சப்ப, நீங்க ஒரு நல்ல ஆண்பிள்ளையாய் நின்னு எனக்கு நல்ல வாக்குத் தந்து, எனக்குக் கண்கண்ட தெய்வமாய் அமைஞ்சு எனக்குத் தாலிகட்டின ஒசத்தியான அந்தப் புண்ணியத் துக்கோசரந்தான் உங்களை நான் இம்மட்டோட விட்டுப் பூட்டேன் !...'' என்று பொங்குமா கடலைக் கொதித்துத் தன்னை மறந்த லயிப்பிலே செருமினாள். ''அந்தரங்க சுத்தியமான உண்மையுள்ள ஒரு பொஞ்சாதிக்கு உண்மை யான ஒரு புருசனாய் இருக்கிறத்துக்கு உண்டான அரு கதையை விற்றுப்பூட்ட உனக்குக் கொடுவாள் மீசை ஒரு கேடா ?...மனசு, மனச்சாட்சின்னு பைத்தியக்காரத்தன மாய் என்னென்னமோ புலம்புறீயே ?—உன்னோட மனசையும் மனச்சாட்சியையும் உடைப்பிலே போடய்யா !...தூவே !....'' என்று. கொந்தளித்துக் கூக் குரலிட்ட அவள் காறித்துப்பி விட்டு, வீரமணியை மறுபடி உலுக்கினாள்.'' யோவ் !...பின்னாலே போயிட்டு நொடியிலே திரும்பிடுவேன் ; அது மட்டும், கல்லுக் கணக்கிலே அங்கிட்டு இங்கிட்டு நகராம அப்படியே நில்லும் ! என் சொல்லை மீறினால், அப்புறம் நடக் கிறதே வேறே !...ஆமா ! கல்லாகிப்பூட்ட உமக்குக் கல்லாகி நிக்கிறத்துக்கு என்ன கேடாம் ?...'' என்று ஆணை பிறப்பித்து விட்டு உள்ளே விரைந்நாள் சுந்தரி.

அவள் ; சுந்தரி !

வீரமணி சிலையானான் !

சுந்தரி சபித்தாளோ ?

பரிகாரி வீட்டுக் கோழி வேளை தப்பின வேளையில் இப்போதுதான் கூவுகிறது !

பேய்க்கணங்கள் நெளிந்தன.

அள்ளிச் செருகிய கொண்டையில் மகிழம்பூச் சரத்தைச் செருகியபடி, புள்ளிவைத்த வேர்வைக் கோலத்தில் திருச்சூரணம் பொலிந்திடத் திரும்பினாள் சுந்தரி. பத்தியக்கஞ்சிச் சருவச்சட்டியைப் பூக்கல் தரையில் இறக்கி வைத்து, லோட்டாவில் ஊற்றி ஆற்றி உப்புக் கல்லைக் கொத்தாகவே அள்ளிக் கொட்டிக் கலக்கி, மறு படியும் வாயில் துளி ஊற்றிப் பதம்பார்த்துவிட்டு நீட்டினாள். ''இந்தாய்யா ? பத்தியக் கஞ்சியைக் குடியும்! உம்மருக்காக ஆசையோட வச்ச பத்தியக் கஞ்சியை உம்மோட ஆசைக் கண்ணாட்டியாய் நின்னு எங் கையினாலே கடைசியாய்க் கொடுக்கிறேன்; ஊம், குடியும் !'' என்றாள்.

மகுடிக்குக் கட்டுப்பட்ட நல்ல பாம்பாகி, மளமள வென்று பத்தியக் கஞ்சியைக் குடித்தான் வீரமணி. சுடு நீரும் உப்புக்கறித்திருக்கவேண்டும். 'நப்புக்' கொட்டினான்.

வீரமணியை ஊடுருவினாள் அவள்.

அவள் : வீரமணியின் சுந்தரி !

''ஐயாவே !... எம்புட்டு நேசமச்சான்காரவுகளே ! ஆத்தா மகமாயிக்கு இந்நேரத்துக்கும் திரிகரணசுத்தியான சாட்சியமாய் நின்னுகிட்டிருக்கிற உங்களோட அருமை பெருமையான பெண்டாட்டியாக என்னை ஆசை தீரக் கடைசியாய் ஒருவாட்டி நல்லாப் பார்த்திக்கிடுங்க !— உங்கமாதிரி இல்லே நான் !... நான் நினைச்சப்பவே என்னாலே செத்துப்போயிட முடியுமாக்கும் !... இப்ப நான்... நான் பூவும் பொட்டுமாய்ச் சுமங்கலியாய்ச் சாகப்போறேன் !— நான் சாகிறபரியந்தம் நீங்க நிலைப்

படியை விட்டு நகரவே படாது! ஆமா, ஆத்தா மேலே ஆணைக்கட்டிச் செப்பிட்டேன்!... கல் ஆகிட்ட உங்களுக்குக் கல்லாகி நிற்கிறத்துக்குக் கசக்கவா போகுது!... ஆமா... பூவும் பொட்டுமான உங்களோட அன்பான பொஞ்சாதியா மகராசிப் புண்ணியவதி நான் செத்துச் சிவலோகம் பறிஞ்சதுக்கு அப்பாலே, நீங்க எக்கேடு கெட்டும் எருக்கு முளைச்சுப் போய்த் தொலைங்க!..."

மார்பகத்திலே ஊஞ்சலாடிய, மானரோசத்தோடு ஊசாலாடிய தாலியைச் சிக்கெனப் பிடித்துக் கொண்ட சுந்தரி, எரிமலையாக வெடித்து பூகம்பமாகக் கிடுகிடுத்து புயலாகச் சிறி, மின்னலாகக் கீறிப் பாய்கிறாள்!

அவள் — சுந்தரி!...

உயிர் கொண்டவள் கிழித்த இலட்சுமணன் கோட்டைத் தாண்டமாட்டாமல், அடித்து வைக்கப்பட்ட கல் உயிர் பெற்ற பாவனையில் சுந்தரியின் வீரமணி ஒப்பாரி வைத்தான். "எனக்குத் தெய்வமான நீயே என்னை விட்டுப் பிரிஞ்சிட்டா அப்புறமா நான் எந்தத் தெய்வத்துக்கிட்டே விழுந்து புலம்பி முறையிடுவேனாம்? எம்புட்டு ஆசையான சுந்தரிப் பொண்ணே! நீ செத்துப் போனா, மறு நொடியிலேயே நானும் செத்துப் போயிடுவேன்!— உம்பேரிலே ஆணை இது!" — மண் கசிந்திடக் கதறிக்கொண்டே இருந்தான்!

வெய்யில் சுடாமல் எரிக்கிறது.

திட்டி வாசலுக்கு மெட்டி குலுங்கப் பாய்ந்த சுந்தரி, கால் இடறவே, தட்டித் தடுமாறிப் பார்வையை இறக்கியதும், "ஐயையே!.... ஆத்தாடியோ!" என்று மண்ணும் விண்ணும் அதிரப் பீறிட்டு அலறினாள்.

அவள் காலடியிலே முத்தையன் கிடக்கின்றான். அவனது நாசியிலிருந்தும் வாயிலிருந்தும் நுங்கும் நுரையுமாக ரத்தம் பீச்சியடிக்கிறது !—'' ஆத்தாடி... சுந்தரியோ !...அரை நாழிக்கு முந்தி உங்கிட்டேயும் உம் புருசன்கிட்டேயும் பயணம் சொல்லி விடை வாங்கிக்கிட நான் வந்தேன். உன்னோட நேச மச்சானின் புத்தி கெட்ட உளறல் பேச்சைக் கேட்ட நீ, கற்பின் கனலியாகிச் சினந்து சீறி உம் புருசனை ஆவேச ஆத்திரத்தோட அறைஞ்சே ! அறைஞ்சிட்டு அலறிக்கதறி வீரகர்ஜனை செஞ்சாய் ! சுந்தரி...! நம்ம மூணு பேருக்குள்ளே, சட்டப்படியும் சரி, விதிப்படியும் சரி, மெய்யாலுமே நான்தான் குற்றவாளி ! நான் செத்து மடியறதுதான் தர்ம நாயம் !...விதியோட விளையாட்டு இத்தோட மங்களம் பாடிக்கிடட்டும் !...நீயும் உம் புருசனும் எப்பவும் போலே கூடிக் குலாவிச் சந்தோசமாய் வாழுங்க !—கும்பிடு கொடுத்தான் ; கும்பிடுக்கு ஊனம் ஏது?.... தொண்டையை அடைக்கிறது ! கண்கள் மேலோங்கிச் சுருண்டு உருண்டன !

"ஐயையோ !...மாமன் மகனே !''

சுந்தரி ஓலமிட்டாள்.

ஓ ....

முத்தையனுக்குப் பேச இன்னும் இருக்கிறது !

சுந்தரி ... ஆத்தாளே சுந்தரி ! உன்னோட வயித்திலே வந்து பொறக்கப் போற உன்னோட அன்பு மகன் நான் !... ஆமா; இனிமே சத்தியமாய் நீ எனக்கு ஆத்தாளேதான் ! உனக்கு மகனாகப் பொறந்து வளர்ந்து ஆளானடியும், நீ மருமகளாகத் தேர்ந்தெடுக்கிறவளுக்குத் திருப்பூட்டத் தாலி வேணுமில்லையா ? இந்தா, ஆத்தா !''— அந்தத் தாலியைச் சமர்ப்பித்தான்

முத்தையன் : ஆத்தாளே ! எனக்கு நாழி ஆகிடுச்சு; இந்தக் கடைசி நேரத்திலே, உன்னோட அன்பான மடியிலேயே உன் மகன் நிம்மதியோட கடைசியாய்க் கண்ணை மூடிக்கிடச் செய்வியா ஆத்தாளே ?'' மூச்சு முட்டுகிறது ! கட்டபொம்மன் மீசை துடிக்கிறது !

நாட்டு வைத்தியர் சன்னாசி அம்பலம் ஓடோடி வருகிறார்.

பாவம் ....!

ஐயோ ... ஆத்தாளே ... மகமாயி !... அடிபாவி ! சண்டாளி ! ஐயையோ ! '',

மண்ணும் விண்ணும் நடுங்கின !:

தலைவிரி கோலமாக கேவிக் கேவிக்கதறிய சுந்தரி, அதோ, தன்னுடைய அருமை மகனுக்குத் தாய் முலைப் பால் பீச்சியடிக்க, அன்புடனும் பாசத்துடனும் முத்தமாரி பொழிந்துகொண்டே இருக்கிறாள் !....

தலைமாட்டில் நல்ல விளக்கு விம்மியது; விம்முகிறது!

மகிழம் பூக்கள் மணக்க மறக்கின்றன !...

ஆ !...

விதிக்கு — பகலிலே தங்கிய விதிக்கு அழக்கூடத் தெரிந்திருக்கிறது !

விதியாம்.... விதி !...

சே !....

* * *

# ஸ்ரீமதி சிற்றம்பலம்

## 1

இடை நேரத் தூக்கத்தை முடித்துக்கொண்ட கையுடன், கைக்கடிக்காரத்தைப் பாதத்தார் திருவாளர் சிற்றம்பலம்.

மணி மூன்று — பிற்பகல்.

கோடை வெயிலின் வெம்மை குறைந்ததாகத் தோன்றவில்லை, அன்றையச் சீதோஷ்ண நிலையின் கதி அப்படி இருக்கக்கூடும்.

மெத்தையைச் சுற்றி வைத்துவிட்டு, மண் கூஜாவைக் கவிந்து நீர் எடுத்து முகத்தைக் கழுவித் துடைத்தார். டவல் உதவியது. கைகால்களை முறை பிசகாமல் நீட்டி நெளித்து முடித்தவுடன், நிலைக் கண்ணாடியின் முன்னே போய் நின்றார் அவர். வகிடு ஒய்யாரமாக அமைந்தது. முன்புறப்பகுதியிலே, அங்கொன்றும் இங்கொன்றுமாக நரை முடிகள் சில பல்லை இளித்து அம்பலப்படுத்தின. அக்காட்சியைப் பார்த்தவுடன், அவர் மனம் வெதும்பினார். நெடுமூச்செறிந்தார். மறு கணம், அவர் மனக்குறையை விரட்டினார். கண்ணாடியில் தெரிந்த தம்முடைய அழகிய உடலின் வலுவும் கைகளிலே தென்பட்ட தசைக் கரணைகளும் அவருக்குப் புதுத் தெளிவை அளித்திருக்க வேண்டும். அதன் விளை பலனாக, சோர்வு அழிந்திருக்க வேண்டும்! முறுக்கு மீசை கறுத்துத் தழைத்துப் பொழிந்தது !...

நடந்து வந்தார். மாடியறையின் முன்பகுதிக் கைப்பிடிச் சுவரைப் பற்றியபடி நின்றார். ஜாஸ்' சங்கீதத்தின் ஒலி அசைவின் அலைகள் கீழ்த்தளத்திலே விளையாடிக் கொண்டிருந்தன. அவற்றின் எதிரொலி படியேறி வரத் தப்பவில்லை. குறையத் தலைப்பட்ட சூட்டின் அணைப்பில் மிதந்து வந்தது இளங்காற்று. அண்டியிருந்த வேப்பந்தழைகளின் கைங்கர்யம் அது.

"ஐயா !..."

அழைப்பின் பாசத்தை மட்டும் தான் அவர் அறிவார் என்பதல்ல; அந்தப் பாசத்திற்கு வாய்த்த அவ்வுருவத்தையும் அறிந்தவரே. உருவத்தை அறிந்தவருக்கு அவ்வுள்ளத்தைத்தானா தெரியாது ?

"என்ன ராணி ?..."

கேள்வியின் பாசத்தில் அன்பின் பரிவு விடையாகத் தொனிக்கவில்லையா ?

"சூப் கொண்டாந்தேனுங்க !"

"ஆல் ரைட்! ..."

முகத்தை நிமிர்த்தி அந்தப் பெண்ணைப் பார்த்தார்; நுட்பமான நளினத்துடன் அவள் விளங்கினாள். பணிப் பெண் என்ற தகுதியைப் பாதாளத்தில் தள்ளிவிட்டு, அவள் அழகு உச்சியில் உச்சம் பெற்றிருந்தது.

"சாப்பிடுங்க !.... நெஞ்செலும்பு சூப்!"

"ஓ. கே !....'

சைனாக்காரன் கைப்பட்ட மங்கு கோப்பை அது. அசூயை மேலிடத்தான் செய்தது — கோப்பையின்

பேரில்!... என்ன செய்வது?... அருவருப்பை உதறிவிட ஒரு நிமிஷம் வேண்டியிருந்தது. பிறகு, கோப்பையை வாங்கினார், அவளுடைய பூங்கரங்களைப் பதனமாகப் பற்றிப் பிடித்தப்படி, கோப்பையை வாங்கிக் கொண்டார். ராணியை ஒரு முறை பார்த்துக்கொண்டு, சூப்பைக் குடித்தார். சூப்பை மட்டுந்தான் அவர் பருகியிருக்க முடியும் அவளது திவ்யமான 'தேஜஸ்' அவருடனேயே தங்கிவிட்டிருக்கிறது.

காலிக் கோப்பையை வாங்கும்போது, அவரது கையைத் தொட்டு வாங்கினாள். "ஐயாவுக்கு ராத்திரிக்கு என்ன சமையல் ?" என்று கேட்டாள்.

வகைகள் சொல்லப்பட்டன.

விடை பெற்றாள்.

தாம்பரத்தைக் குறி இலக்காக்கிப் பறந்தது மின்சார வண்டி.

விவேகானந்தரின் நூல் தட்டுப்பட்டது இரண்டொரு தினங்களில் முடித்தாக வேண்டாமா? எடுத்தார். வசமாக நாற்காலியில் அமர்ந்தார். கால்கள் ஆடின, மனம் லயித்தது. பரவசக் கவர்ச்சி இழைந்தது

"கடவுளிடம் நம்பிக்கை அற்றவனை நாத்திகன் என்றன பண்டைய மதங்கள். தன்னிடம் நம்--பிக்கை அற்றவனே நாத்திகன் எனப் புதிய மதம் காட்டுகிறது!..."

அழகிய தத்துவச் சிந்தனைகள் பளிச்சிட்டன.

என்ன தோன்றிற்றோ எழுந்து உள்ளே சென்றார் பீரோவைத் திறந்தார். டைரியை எடுத்துப் புரட்டினார்

'ஓஹோ, நாளைக்குத்தான் மணிமாறன் வருகிறான்! வேறு பக்கங்கள் ஓடின. வேறு சிந்தனைகள் ஓடின. சிந்தனைகள் கிளைபரப்பி விரிந்து, அந்த விரிவில் அவரது, அவரது ஆழ்ந்த சித்தத்தின் அனுபவ முத்திரைகள் பதிந்து விளையாட, அவ் விளை யாட்டில் விதியும் கூட்டுச் சேர்ந்து, விளையாட்டின் முடிவையே மாற்றிவிட்டு வினயபூர்வமாக நகைப்புக் காட்ட, அந்நகைப்பிலே காலம் கண்ணீர் சொரிந்து முடிவு சொல்ல, அம்முடிவின் தலையெழுத்திலே இப் போது ஓர் ஆரம்பம் உதயமாகி யிருப்பதைப்போல— உதயமாக இருப்பதைப்போல அவரது உள்ளுணர்வின் சக்தி செப்பியபோது, அவர் மனம் அடங்கி, மகிழ்வின் அமைதி பூத்தது. உள்ளத்தின் உள்ளம் குறிப்புக் காட்டியது. 'எஸ்...இன்டீட் ! ... ஆம் ; மனிதன் மனித னாக— மனிதனாகவேதான் இருக்க வேண்டும் ?... அப்படித்தான் இருக்கவும் முடியும் !...'

தாழ்வாரத்தில் நின்று எட்டிப் பார்த்தார் சிற்றம் பலம். பங்களாக்கள் வான வளையத்தை முத்தமிட்டன. தியாகராய நகரிலே பணத்துக்கு முடை இல்லை, எட்டிப் பார்த்தவரின் விழிக்கோணத்தில் 'அம்பாஸடர்' எட்டிப் பார்த்தது. விரைந்து உள்ளே போனார். திரும்புகாலில், புதுக்கருக்குப் பெற்றிருந்தார். ஆடை பாதி, ஆள் பாதி என்பது மெய்! மெய்யில் நிலைத்த உடுப்புகளில் அவர் மாப்பிள்ளை போலத் தோன்றி மாப்பிள்ளையாக மாடிப்படிகளைக் கடந்தார். ஆஹா! அவரது நடையில்தான் எத்துணை துள்ளல், மிடுக்கு, காம்பீர்யம் ! ...

டாக்டர் யாரோ உள்ளே நுழையக் கண்டார். மருந்து எப்படி இருக்கும் ? நோய் எப்படியிருக்கும் ?...

கீழ்த்தளத்தில் வந்து நின்றார் அவர்.

உள்ளே பேரப்பிள்ளைகள் ராஜ்யம் நடந்துகொண்டிருந்தது. அந்த ராஜ்யத்திலே நயவஞ்சகச் சீனாக்காரனோ, நாணயமிழந்த பாகிஸ்தான்காரனோ தலை நீட்ட மாட்டான் !...

டாக்டர் திரும்பி விட்டார்.

இவர் திரும்பி மடங்கினார்.

பெரிதாக்கித் தொங்கவிடப்பட்டிருந்த அந்த அம்மணியின் படத்தை அண்ணாந்து நோக்கினார் அவர். 'கண்ணே சாரதா ! நீ என்வரை ஒரு தத்துவம் ஆகிவிட்டாய் !...ஆகவே, உலகத்தைப்பற்றி நீ கவலை கொள்ளாதே !—ஏனென்றால், உலகம் ஒரு பைத்தியம் !...'

கார் கடைத் தெருவை இலக்கு வைத்தது !

# 2

**வீ**தியின் வீதிக்கு நிகரான சூட்சுமத்துடனும் பண்புடனும் கடை வீதி விளங்கியது.

திருவாளர் சிற்றம்பலம் காரிலிருந்து விசையுடன் இறங்கினார். விசையுடன் வந்து நின்ற காரல்லவா? அதனால்தான் அவ்வாறு இறங்கியிருக்க வேண்டுமா?...

அவசரத்தின் துணை எனில், மனிதப் பிண்டத்திற்கு எப்போதுமே ஒரு நாட்டம், ஓர் ஒட்டுறவு!...

சிற்றம்பலம் எப்போதுமே ஆர அமரத்தான் எதையும் செய்வார். இந்நிலை, பிறவிப்பயனல்ல! சுவாமி விவேகானந்தரின் சில தத்துவங்கள் அவருக்குப் பிடித்தன. அதன் பலனான விதிபோல, அவருக்கு இம்மானுடப் பிறவியிலே ஒரு சுவை கனிந்தது. 'அரிது அரிது...மானிடராய்ப் பிறத்தல் அரிது!' என்ற உண்மைக் கோட்பாட்டின் உள்வட்டமாக அவர் இயங்கி, அல்லது இயக்கப்பட்டு, அச்சுழற்சியின் யந்திரகதியில், அவரே தனக்குத் தானே ஒரு கோட்பாடாகவும் விளங்கினார். ஆரோக்கியத்தின் ரகசியமாக—வாழ்வின் சமநிலைத் திட்பமாக அவர் தோன்றினார்.

'இரும்பு போன்ற தசைகளும் எஃகு போன்ற நரம்புகளும், எதனாலும் தடுக்க முடியாத அளவற்ற சக்தியும் வாய்ந்தவர்களே நாட்டின் பாதுகாப்புக்குத் தேவை!' என்ற சுவாமி விவேகாநந்தரின் உண்மைக் கூற்றுக்கள் அவருள் ஒரு புரட்சியாக உருப்பெற்றது. அப்புரட்சியின் பலனாக, அவரது சோனி உடல் வல்லமை எய்தி, ஆண்மையின் வீர்யம் மிகுந்து விளங்கியது. வறுமை

அவருள் செய்த தொண்டினை உதறி விட்டு, அவர் நாட்டுக்கு தொண்டு இயற்ற முனைந்தார். அம் முனைப்பைப் பின்னுக்கு இழுத்தது தரித்திரம். எனவே, காடுகளுக்குப் போய் தவம் செய்து, இந்த நல்குரவுக்குப் பாடம் போதிக்கத் திட்டமிட்டார். அது தருணம் யதேச்சையாக நிழலுக்கு ஒதுங்கினர். தாகத்திற்கு தண்ணீர் கொடுத்தாள் சாரதா. அவளே அவருக்கு வாழ்வின் நிழலானாள்; வாழ்வின் வளப்பக்கத்துக்கு நீர் ஊற்றும் சீதேவி ஆனாள். நீரினின்றும் நீர் பிரியமாட்டாத பாந்தவ்யம்! பாசம்!

எதிர்பாராத முடிவிலே எதிர்பாராத ஆரம்பம் உதயமானது.

"என் வாழ்வே ஒரு கதையாட்டந்தான் இருக்குது!....'

மனைமாட்சியும் நன்மக்கட் பேறும் கிட்டின. அவர் செய்து வந்த பிரார்த்தனைகளின் விளைவு நல்ல பலன் சொல்லி வந்தன.

தடம் என்றால் 'திருப்பம் இருந்துதானே தீர வேண்டும்!''

வந்த திருப்பம் சாரதாவை விழுங்கி விட்டது!...

முழுக்கைச் சட்டையை இழுத்து விட்டுக் கொண்டு குறுக்கு மறித்து நடந்தார். மஸ்லின் வேஷ்டியின் ஒரு பகுதியை வலக்கை முனையை விரலால் நீவி விட்டப்படி நடந்தார்.

அதோ, 'லஸ்' முனை.

'சாரதா ஸில்க் பாலஸ்' என்னும் கடையின் வாசற் படியில் ஏறினார். கல்லாவில் அமர்ந்திருந்த இளைஞன்,

சிற்றம்பலம் பெற்ற பிள்ளை—சாரதா பெற்ற பிள்ளை. எழுந்தான். அவர் குந்தினார்.

நாகரிகம் சூடு பிடிக்கும் நேரம் அது. பொழுது அணைந்து கொண்டிருந்தது. வெயிலின் சூடு இறங்கி விட்டது.

தேதி காலம்.

பெண்டுகள் ஏறி இறங்கினர்.

ரோக்காக்கள் கிழிக்கப்பட்டன.

ரூபாய்த் தாள்கள் உள் அறையில் பதுங்கின.

ஒருத்தி, கட்டுக்கழுத்தி. கையில் காஞ்சீபுரம் பட்டு வைத்திருந்தாள். வாடாமல்லி நிறத்தில் உடல்; மயில் கழுத்து பார்டர்.

ஒரு நினைவுச் சிதறல்.

லகான் அறுபட்ட குதிரையாக அவர் நெஞ்சு குதித்தது.

மகிழ்வின் குழந்தையாக நின்ற தருணம், மணப் பெண் சாரதாவுக்கு வாங்கியிருந்த புடவையும் இதே அச்சுத்தான். 'என் சாரதாவுக்கு அப்போது இந்தப் புடவையைப் பார்த்ததும் உண்டான சந்தோஷம் இவ் வளவு அவ்வளவல்ல! ...ம்! ... புடவையை வாங்கிக் கொண்டுபோய் விட்டாள் அந்த அம்மணி. 'சாரதா தன் புடவையை எனக்கு நினைவுச் சின்னமாகக் கொடுத்து விட்டுப் போய் விட்டாளே!...' கடிவாளம் மாட்டப் பட்ட புரவியாக அழுதது அவர் மனம்.

கூட்டம் நெரித்தது.

உள் மனத்தில் கசிவின் ஈரத்தை மனத்தெம்பு துடைத்தது.

ரூபாயை எண்ணிக் கொண்டேயிருந்தான் மணி பாலன். அவன் தலைச்சன். இந்தக் கடைக்கு அவன் பொறுப்பு. அவனது உடம்பு கொஞ்சம் வெளுப்பு தட்டி யிருந்தது. அதுவும் தான் எட்டுப்பிள்ளைகள் வரை ஜாபிதா வளர்ந்து விட்டதே!... அயர்வுக்காக காப்பி வந்தது. குடித்தான். பயந்து பயந்து குடித்தான் காரணம் இதுதான்: "அப்பாவுக்கு ஸிஸ்டம்னா ஸிஸ்டம் தான்!... எதுவுமே திட்டபடிதான் நடக்கும்! 'விதி என்பது மனத்தில்தான் சங்கற்பம் பெறுகிறது; ஆகவே, நம் மனசையே கண்ணாடியாக்கிக் கொண்டால் விதியை நித்தநித்தம் நாம் பார்த்துக் கொள்ள முடியும்'னு அப்பா சதா சொல்வாங்க! என்னவோ, அப்பாவே ரொம்பப் பேருக்கு ஒரு புதிராகத்தான் தோணுவார்!... எங்களுக்கோ அப்பா எப்பவும் ஓர் அதிசயமாகவே தோணுவார்! அப்பாவை, எழுபத்திரண்டு வயசு வாலிபர்னுதான் எல்லோரும் சொல்லுவாங்க!...

தேவலோகமாய்த் திகழ்ந்தது ஜவுளிக் கூடம்

சிற்றம்பலத்தின் தோழர்கள் வரவே அவரும் எழுந்து உள்ளே சென்றார், தொடர் நிழல்களுடன் பாரிஸ் அழகிகளின் லீலா விநோதங்களைச் சித்திரித்த படமொன்று புதிய தியேட்டரில் ஓடுகிறாம். துணை சேர்த்தார்கள். சிற்றம்பலம் ஒப்பவில்லை, ஓய்வு அவருக்கு அருமருந்து.

அப்போது அவருக்கு 'இணைப்பு' கொடுத்துத் தொலைபேசி கூப்பிட்டது.

வேலைக்காரப் பெண் அவரது க்ஷேமலாபம் பற்றி விசாரித்தாள்.

அவள் யார் தெரியுமா?

ராணி!...

# 3

ஆன்மீக பலத்தை ஆசனமாக்கி அமர்ந்தபடி நேயம் கலந்த உருவத்தையும் நினைவு கடந்த ஈடு பாட்டையும் பக்தியாக்கிக் கைதொழுது, எதிர்முகமாக நின்ற ஈசனை அழைத்துப் பிரார்த்திக் கொண்டிருந்தார் சிற்றம்பலம் அவர்கள். அப்பிரார்த்தனை ஊனையும் உயிரையும் உருக்கிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அதனால்தான், கண்ணீர் அப்படிப்பெருகி வழிந்ததோ ?

ஆம் ; கண்ணீர் இல்லையேல், சிரிப்புக்குரிய பங்கு மகத்துவம் மனிதனுக்குப் புரியவே புரியாது போலும்!

கண்ணீரின் ஒரு பகுதியை அனுபவித்தவருக்குச் சிரிப்பின் மறுபகுதியே தன்னாலேயே கிடைத்தது. நிழலற்றுத் திரிந்தவரே பலருக்கு நிழலானார். அன்று. இவருக்கும் நிழல் ஈந்த புண்ணியவதியோ இன்று நிழலுருவரும் பெற்று விட்டாள் !

பூசனை முற்றுப் பெற்றது.

அவர் கதவுகளை நன்றாகத் திறந்துவிட்டார். பூந்தென்றல் மிதந்தது. கன்னங்களில் உவர்க்கோடிட்டுக் கிடந்த கண்ணீரை அது போக்கியது. அமைதி பூத்திருந்தது, மனத்திடை. விண்ணிடை பூத்திருந்த நட்சத்திரப் பூக்களின் ஒளிச் சுகந்தத்தையும் அவர் அனுபவிக்கத் தெரிந்தவர்.

வழக்கமாக நெளியும் ஓர் ஆவல் உந்தியது. நடந்தார். மாடி ஹாலிலே அலங்கரிக்கப் பட்டிருந்த படங்களை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, அப்புறம் அந்த ஒரு போட்டோவை மாத்திரம் எம்பி எடுத்தார்.

சாரதா மரிப்பதற்கு ஒரு மாதம் முன்னம் எடுக்கப் பட்ட படம். அவருடைய குடும்பத்தின் உருவப்படம் அது. மணிபாலன் — மாலதி; மணி நாதன் — வடிவு; சரவணன் — சாந்தி. இப்படி ஒரு 'செட்'. அடுத்து, மணிமாறன். 'ஒண்டிக் கட்டை'!... அதோ, பெண்கள் இருவர் : சாருபாலா, சாருமதி !... இருவரும் அவரவர் புருஷன்மார்களுடன் ! அங்கங்கே குழந்தை குட்டிகள் அவரவர் குடும்பத்துடன்!... நட்ட நடுவில் சிங்றம்பலம்— சாரதா ஜோடி !...

கண்களை மூடிக்கொண்டார் பெரியவர். ஓர் அரைக் கணம் மோன நிலை !

''சாரதா ! நீ பொய் அல்ல; நீ தான் நிஜம் !... பொய்யாக இருந்த எனக்கு மெய்யின் உருவம் வழங்கிய தேவி நீ !....''

திடுதிப்பென்று அவருக்குத் தமது முதல் இரவின் ஞாபகம் சுடர் தட்டியது. மனத்தை என்னவோ செய்தது. சஞ்சலமும் சிரிப்பும் கை இணைத்து வலம் வந்தன.

இதயத்தில் அமைதியை வரவழைக்கவேண்டி, அவர் மாடித் தாழ்வரத்தில் நடந்தார். உடற்பயிற்சிச் சாதனங்கள் கிடந்தன. தன்மயமான கர்வத்திளைப்பில் ஊறினார் அவர். ஆளுயர கண்ணாடி அழைத்தது. போய் நின்றார். நாடகக்காரன் வேடப் பொருத்தத்தைச் சரி பார்த்துக் கொள்ளுவதையொப்ப அவர் பார்த்துக் கொண்டார். 'நான் இனி எந்த வேடம் கட்டப் போகிறேன் ?... ஏன் அப்படி நினைக்க வேண்டும் ?...'' முடிவு என்ற ஒன்றுக்கே அவர் இடம் வைக்க விரும்பார். ஓடும் மட்டும் தேர் ஓட்டும் !... உடலும் உள்ளமும் அவர் வரை பாதுகாப்புப் பொருள்கள்.

கடல் தாண்ட விழைவு பூண்டவர். அதற்காக, கால்வாயைத் தாண்ட கால்கள் பெறாமல் இல்லை !...

மணி எட்டு.

கடிகாரம் வந்தது.

ஆம் ; அதே ராணி !...

வேலைக்காரப் பெண் !...

சாப்பிடக் கூப்பிட்டாள்.

சாப்பாடு பரிமாறினாள்.

கீழே கார்ச் சத்தம்.

மூத்தவன் அப்போதுதான் கடையைக் கட்டிவிட்டு வந்திருக்கிறான்.

"பேபிக்கு இருமல் எப்படி இருக்காம் ? பார்த்தாயா ராணி ?"

"இப்போ பரவாயில்லை. ஏதோ புது மிக்சர் கொடுத்ததாம் குணம்தானா !..."

"ம் !"...

மோர்ச் சோறு.

எலுமிச்சம்பழ ஊறுகாய் தூவப்பட்டது.

"இன்னும் ஒருபிடி சோறு ..."

"ஊஹூம் !... உனக்கு அப்படிக் கேட்பது பழக்கம். இன்று நேற்றுப் பழக்கமா ; ஒரு வருஷத்துப் பழக்க

மாச்சே ?... மனிதன் உடம்பை வளர்க்கப்படாது ; அதை வலுப்படுத்தத்தான் வேணும் !... நான் கொடுத்த புஸ்தங்களைப் படித்தாயா ?...''

இப்போது சுவாமி விவேகாநந்தரின் சிந்தனைகளைப் படிச்சுக்கிட்டிருக்கேன். ஞானத் துறவிப் பரம்பரையைச் சேர்ந்தவர் ஆனாலும், பெண்களைப் பத்தி ரொம்ப மதிப்பும் அனுதாபமும் பாசமும் வச்சுக்கிட்டே ஒவ்வொரு சொல்லையும் சொல்லியிருக்காங்க !...''

''எஸ்...எஸ்... எனக்கு ரொம்பச் சந்தோஷம் !... நீ சுவாமிஜியை ரொம்பத் தெளிவாகப் புரிஞ்சுக்கிட்டு வாரதாவே நான் நினைக்கிறேன் !...''

எல்லாம் உங்களோட பயிற்சி !...''

அவர் சிரித்தார். முத்துப் பற்கள் வெகு நாகரிகமாக அழகு சிந்திக் காட்டின.

அவளுடைய எழிலுக்கு உகந்த அமுதச் சிரிப்பின் காந்தக் கவர்ச்சியின் மகிமைக்குக் கேட்கவாவேண்டும்?— ராணி மெல்ல இருமினாள். சிணுங்கல் இருமல்.

சிற்றம்பலம் பதறிப் போனார். உயிர்க் கழுவை யாரோ திருடுவதுபோல துடித்தார். ''ராணி, என்னம்மா இது டாக்டரை அழைக்கட்டா ?.... எனக்கு வைத்திருக்கிற பாலை நீ குடியம்மா !... கொஞ்சம்மஞ்சள் பொடியைத் தூவிச் சாப்பிடு !.... இவ்வளவு சின்ன வயசிலேயே உடம்பை அசட்டை செய்யப் பழகுகிறது தப்பு. ம்...என்னைப் பார்!... வருகிற மாசம் எனக்கு எழுபத்திரண்டாவது வருஷம் பிறந்த நாள் வரப் போகுது!... பாரேன் என்னை ...மைனர் மாதிரி! '' சிரிப்பின் கம்பீரத்தில், இத்தனை தொலைவுக் கற்களைக் கடந்துவிட்ட அயர்வு உள்வாங்கிவிட்டது.

"காலம்பற டாக்டரைப் பார்க்கிறேன்!..." அவள் தயங்கிச் சொன்னாள், நழுவ எத்தனம் செய்தாள். முடியவில்லை. கையில் வைத்திருந்த ஊசியில் நூலிழையைப் பொருத்த முனைந்தாள்.

"என்ன ராணி?... ஊசியை வாங்கி வெகுலாவகமாக நூலிழையை நுழைத்தார் அவர்.

"வந்து...ஊஹூம்... ஒண்ணுமில்லே!...."

அவள் மனத்தில் ஏதோ ஒரு செய்தி தொண்டைக் குழியை விட்டுப் புறப்பட துடிப்பதை அவர் அனுபவ பூர்வமாக உணர்ந்தார். அவள் மனத்தைத் தூண்டி அறிய விழைந்து, அவளது பூங்கரத்தைப் பற்றி இழுத்து அவளது எழிலார் வதனத்தை நிமிண்டி உயர்த்தி, "என்ன ராணி?" என்று வம்பு பண்ணுகையில், எவ்வித முன்னறிவிப்புமின்றி, அங்கே மூத்த மகன் பிரசன்னமாயிருக்கக் கண்டுங்கூட, தம் கைப்பிடியை விடாமலிருக்கவே, அந்தப் பெண்ணாகவே திமிறிக் கொண்டு விடுதலை பெற்று, பூஞ்சிட்டாகப் பறக்க வேண்டியவள் ஆனாள்!

# 4

ஞானபண்டிதனுக்கு ஞானப் பாலைப் பற்றித் துளியும் தெரியமாட்டாது. அவன் கைக் குழந்தை. அவனுக்குத் தன் அன்னையின் முலைப்பால் பற்றியே அறிவான். பாலமுதம் அருந்திய குதூகலத்திலே தவிழ்ந்து விளையாடினான். படுசுட்டி!...

அப்போதுதான் யோகாசனப் பயிற்சிகளை நிறை வேற்றிவிட்டு, காற்றாட பங்களாவின் 'லான்' பகுதிக்கு வந்தார் சிற்றம்பலம். காலை இளங்காற்று இதமாக வீசியது. மேலை நாட்டு வண்ணப் பூக்கள் வகை பிரித்துச் சிரித்தன. மகிழம் பூக்களின் மணம் எடுப்பாக வீசியது. முழுநேரக் கச்சேரியிலே அனைவரது அமோகமான பாராட்டுதலையும் பெற்றுவிட்ட ஓர் அபூர்வ ராகம் போல!

குழந்தை முன்புறப் பூங்காவுக்கு வந்துவிட்டது.

வேர்வையை துண்டுகொண்டு ஆற்றியபடி, சிரிப் பின் வழியிலே தடம் ஒற்றி நடந்து, சிரிப்புக்குச் சிரிப் பையே பரிசிலாகக் கொடுத்து, குழவியை எடுத்துத் தோளில் சாய்துக் கொண்டார்.

மணிபாலன் 'டீக்'காக உடுத்துக்கொண்டு வந்து நின்றான். தம்பியை அழைத்துவர விமான நிலையத் துக்குப் போகப் போகின்றான்!

சிற்றம்பலம் அங்கியிருந்தபடியே ராணியை அலட் டினார். ராணி கவரிமானென ஓடிவந்து மறுகி நின்றாள். மணிபாலனைக் கண்டதும் அவள் மௌனம் அமைந்து

நின்றாள். சிற்றம்பலம் தந்த சாவிக்கொத்தைத் திரும்ப அவரிடம் நீட்டியபோது, ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றையும் நீட்டினாள். அதை அவர் தம் புதல்வனிடம் கொடுத்தார். அவன் புறப்பட வேண்டியவன் ஆனான். புறப்பட்டால் போதும் என்னும் சுழலுக்கு ஆளான கட்டத்தில் இருந்தவனுக்குவிடை கிடைத்தால் போதாதா என்ன?

பேரனை மருமகளிடம் ஒப்படைத்தார். குளியலறைக்குள் பிரவேசித்தார். 'ஹம்மிங்' ஒலி கிளம்பியது, லங்கோடு திகழ உள்ளே இருந்தவரின் கையில் சோப்டப்பாவைத் திணித்துவிட்டு நகர்ந்தாள் ராணி—பணிப் பெண்.

உதயத்தின் கோலம் புள்ளிக் கோலம் இழைக்கத் தொடங்கிவிட்ட பொன்மயமான மாயப் பொழுதல்லவா அது.

பூப்பந்தை விட்டெறிந்து மகிழ்ந்த குழந்தை, அப் பூப்பந்து திரும்பி வந்து தன்னிடமே நிற்பதைக் கண்டு முகம் சுளிக்குமே; அதுபோலத்தான் உள்ளே சந்தோஷத்துடன் நுழைந்து, மீளும் தருணத்தில் சுரத்து இல்லாமலும் இருந்தார் சிற்றம்பலம். அதற்காக, எப்போதுமே நீரிலேயே அமிழ்ந்துவிட விழைபவரும் அல்லர். எதிலுமே ஒரு கட்டுப்பாடும் நியமமும் வேண்டுமே அவருக்கு!...

வெகுமதி பெறப்போகும் பாணனின் நிலையில் அவர் மனம் இருந்தது.

மணிமாறன் சற்றைக்கெல்லாம் வந்துவிடுவான்!... அவருக்குக் கிடைக்கப்போகும் பரிசல் அவனேதான்!... அச்சுத் தொழில் நுட்பக் கல்விக்காக ஜெர்மனிக்கு அரசாங்கத்தின் சார்பில் சென்றவன் அவன்! அப்பப்பா!... அதற்குள் ஓராண்டு ஓடிவிட்டதா?... 'வழியனுப்பி

வைத்த மகனை வரவேற்று ஆரத்தி எடுத்து திருநீறு பூசி வாழ்த்த அன்னை இல்லை!' என்ற நிர்ணயிக்கப்பட்டு விட்ட யதார்த்தத்தின் உண்மையை இதயத்தின் உள் மயமான உணர்வு அறிவித்தபோது, அவர் கலங்கிப் போனார்.

ஈரத்துண்டில் ஈரம் சேர்ந்தது.

மாடியில் அவரது தனி அறையில் நறுவிசான ஒப் பனையுடன் உட்கார்ந்திருந்தார் சிற்றம்பலம். சந்தனப் பொட்டும் ஜவ்வாது பொட்டும் குலுங்கின ; மணத்தன. புத்தர் சிலைக்கடியில் அவரது குளர்ச்சிக் கண்ணாடி காட்சி பொருளானது.

ராணி வந்தாள்.

காலைச் சிற்றுண்டி வந்தது.

இடியாப்பம், புதினா துகையல். அசல் உருக்கு நெய்.

ருசியில் திளைத்தது நாக்கு.

"இன்னும் கொஞ்சம்..."

"ம்... உன் மாமூல் உபசரணை... நடக்கட்டும்!..." மெல்லிய நகைப்பொலி அரவம் காட்டியது. ஊஹூம் அரவமன்று!...

அவர் அவளைப் பார்த்தார்.

மதுக்குடம் ஏந்தி நின்ற மணமலராய்ப் பொலிவுற்று நின்றாள் அவள். இனக் கவர்ச்சி குரலெடுத்துப் பாடாத பகுதி இல்லை!...

வசந்தம் புறப்பட்டதா?

தேவமனோஹரி பண் பரப்பியதா ?

மனோரஞ்சிதம் மகிழ்ந்தா ?

பூலோக சொர்க்கம் இதுதானோ ?...

ஆண்மையின் வீர்யம் கிளர்ந்தெழுந்தது !

அவர் அவளையேப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'ஈசனே !'

சமன் நிலை கொண்டார்.

''ராணி !...'' என்று பரிவுடன் குரல் தந்தார். வேர்வை ஓடியது.

''ஐயர் ! நான் போய்விடட்டுமா ?...ஏச்சும் பேச்சும் கூடுதலாப் போயிட்டது !...இங்கிருந்து போயிடத்தான் போறேன் ! ஆமாம் !''—தேம்பினாள். இதழ்க் கடையில் அழுகை, கண் விளிம்பில் சுடுநீர்.

கண்ணீரைத் துடைத்தார் அவர்.

''மற்றவர்களுக்கு வேறே ஜோலி இல்லே !...அதுங்களும் பைத்தியமும் ஒரு ஜாதி !—நீ எதுக்காக என்னை அனாதையா விட்டுப்பிட்டுப் போகணும் !... நான் உயிரோடு இருக்கிறமட்டும் நீ எதுக்கும் கவலைப்படத் தேவையில்லைன்னு அன்னிக்கே சொன்னதுதானே ராணி !....'' பண்பாட்டில் பிரிவு பேசியது.

ஒரு நாள் :

கடல் மல்லைக்கு 'பிக்னிக்' சென்றார். துணை ராணி தான். புதிதாக மணம் புரிந்து கொண்ட இளவட்டத்தையொத்து அவர் காணப்பட்டார். சதா ராணியின்

'கொசுவத்'தையே சுற்றிச் சுற்றி வந்தார். எந்த ஒரு பேச்சுக்கும் அவர் அவளைத் தொடாமல் பேசுவது கிடையாது.

ஆங்கிலேய இணை ஒன்று அறிமுகம் ஆனது.

"இந்த யுவதிதான் உங்கள் இனிய பாதிபோலும்!" என்று கேட்டார் எட்மண்ட் லூயிஸ். ஆங்கிலேயக் கனவான் அவர்.

"நோ...நோ...! ஷி இஸ் மை லேடி ப்ரண்ட்!"

ராணி அப்பேச்சை ஆமோதித்தாள். தலையை உலுக்கினாள். கொண்டைப் பூச்சரம் சிலிர்த்தது.

ஆங்கிலத் தம்பதி கை குலுக்கி விடை பெற்ற போதில், பாரதத்தின் மாண்புக்கு ஓர் இலக்குப் புள்ளியாக அமைந்திட்ட, மஹாபலிபுரச் சிறப்புக்களை வாஞயரப் பேசு முன்னே, 'அந்த இளம்பெண் அந்தப் பெரியவரது மகள்தான் என்றே நான் முதலில் கருதினேன்! என்றுதான் அதிசயப் பேச்சை உதிர்ந்தாள்.

"ராணி,..."

"ம்!..."

"நீ போ!... அதோ கார் வந்து விட்டது:... நீ போ!...

ராணி படி தாண்டினாள்.

சிற்றம்பலம் கீழே வந்தபோது, அவர் பார்வையில் வழக்கம்போல சாராதாவின் புகைப்படம்தான் முதல் தரிசனம் ஆனது.

# 5

மணிமாறன் வந்துவிட்டான் !

நாகரிகத்தின் புது மெருகு வெள்ளோட்டம் வந்தது.

வாழ்க்கைப் பரிசிலைச் செம்மை பாய்ச்சி செலுத்திக் கெலித்தவருக்கு இப்போது கனவின் பரிசிலாக இதோ, மணிமாறன் நிற்கிறான்—பிரத்தியட்ச உண்மையாக இவன் தொடக்கம் தொட்டுப் படிப்பில் காட்டி வந்த அக்கறை காரணமாக, இவரும் மகன் படிப்பில் அக் கறை செலுத்தலானார். மூத்தவன் வெறும் பட்டம் பெற்றுக்கடையில் ஒட்டிக் கொண்டான். பி. காம். படிப்பு ; அமைதியாக இருந்து விட்டான். இரண்டா மவன் அப்படி இல்லை. நெடுஞ்சாலைப்பிரிவு எஞ்சினியர். திருச்சியில் உத்தியோகம். மூன்றாம் புள்ளி சரவணன். எம். பி. பி. எஸ். தஞ்சாவூரில் வ. உ. சி. நகரில் 'ப்ராக்டிஸ்'. கடைக்குட்டிதான் மணிமாறன். ஒன்றிக் கட்டை. பெண்களையும் நல்ல இடம் பார்த்து, நிதி மிக்க இடங்களிலேதான் கட்டிக் கொடுத்திருந்தார். 'மணி மாறனுக்கு வெகு விரைவிலேயே மத்திய அரசாங்கத்தில் பொறுப்பான அலுவல் கிட்டிவிடும். கூடிய சீக்கிரமே அவனுக்கு அவன் இஷ்டப்படி கல்யாணம் காட்சி செய்து விடவேணும்!...

கணம் ஒன்றோ, இரண்டோ! நினைவுகளோ ஆயிரம்! கனவுகளுக்கோ கணக்கு இல்லை !— வாழ்வின் சிக்கலே இதுதான் ; சூட்சுமமும் இதுவேதான் !

இதோ பிள்ளை !

பாசத்திற்குப் பாசம் 'பூப்பலி' செலுத்தியது.

இரண்டாங்கட்டில் வந்தமர்ந்தார் சிற்றம்பலம்.

கையில் மணிமாறன் வைத்திருந்த 'கூலிங்க்ளாஸ்' துப்புரவான அந்தம் பெற்று விளங்கிற்று. உடுப்புகள் எடுப்பாக இருந்தன. பெர்லினிலும் ஹெடில்பர்கிலுமாக படித்த நுட்பங்களை விவரித்தான். ரொட்டி டின்கள் சில தலைநீட்டின. குழந்தைகள் தலைநீட்ட அட்டியில்லை. முதல் டின்னைத் திறந்து முதல் ரொட்டியை அப்பாவிடம் மரியாதையுடனும் பாசத்துடனும் நீட்டினான் மணி மாறன்.

அவர் வாங்கிக் கொண்டார், உணர்ச்சிப் பெருக் குடன், 'என் பிள்ளை தருகிறான்!... கொடுத்து வாங்குகிற தத்துவம் பெரிய அர்த்தம் கொண்டதல்லவா?'

"இன்னொன்று கொடு!..." என்று கேட்டார் சிற் றம்பலம்.

அவனோ ஒரு ரொட்டிப் பெட்டியாகவே கொடுத் தான். "ஆல்ரைட்!... மிச்சத்தை எல்லாருக்கும் பகிர்ந்து கொடு... என்று சொல்லிக் கொண்டே, "ராணி!" என்று குரல் கொடுத்தார்.

ராணி குனிந்த தலை நிமிராமல் வந்தாள். நெற்றித் திலகம் நேர்த்தி.

அவளிடம் பிஸ்கட் டின்னைச் சமர்ப்பித்தார் அவர்.

அவள் பதவிசுடன் கை ஏந்திப் பெற்றுக் கொண்டாள்.

"தம்பி, இவள் பெயர் ராணி!... உங்க அம்மா போனதுக்கப்புறம் இந்தச் சின்னப் பெண்தான் என்னை கவனிச்சுக்கிட்டு வருது! ம்!"

ராணியைப் பற்றிய அறிமுகத்தைத் தன் தந்தையின் வாய்மொழியாகக் கேட்ட மணிமாறன் மிகவும் அமைதி கொண்டான். 'அப்பா படிச்சது அதிகமில்லாவிட்டாலும் உலகத்தையும் உலகோரையும் படிச்சது ரொம்ப ஜாஸ்தி!... ரியலி...ஏ...இன்ட்ரடக்ஷன்! எஸ்...! எளிய இனிய தேவதை போலல்லவா தோன்றுகிறாள் இந்தப் பெண்!...' இன்னும் கொஞ்ச நேரம் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவனுக்கு கூடவில்லை.

அவள் போய் விட்டாள்.

மணிமாறனை நோக்கித் தம்முடைய பார்வையை நாட்டியவேளையில், அவன் தவழ்ந்து சென்ற அழகின் சுவைப்பில் மனம் கிறங்கிப்போனதை 'இனம் கண்டு கொண்டிருப்பாரோ?...

மூத்தவனைக் கடைக்கு ஏவினார்.

கடல் கடந்து வந்தவனை ஓய்வு கொள்ளப் பணித்தார்.

மாலையில் துணிமணி முதலிய பரிசுகளை குடும்பத்தவர்க்குக் கொடுக்க வேண்டுமென்பது அவ்விளைஞனது திட்டம்.

சிற்றம்பலம் மாடியை நாடினார்.

மாலை வந்தது.

மயக்கத்தின் வனப்பும் வந்தது.

தன் வரவுபற்றி அறிவிக்க மணிமாறன் பல்கலைக் கழகக் கட்டிடத்துக்குப் போய் மீண்டான்.

பங்களாவில் பெரியவர்கூட இல்லை.

கீழே மூத்த அண்ணி மட்டுமே இருந்தாள்.

மணிமாறனின் கண்கள் சுற்றிச் சூழ தேடின.

ராணி தோட்டப்பகுதியில் நின்றாள். மலர்களின் மலராக நின்றாள். காலையில் ராணியைப்பற்றிய பிரஸ்தாபம் ஏதாகிலும் யார் வாயிலிருந்தாவது வெளிவருமென்று தான் அவன் எதிர்நோக்கியிருந்தான் !— ஏதும்வரவில்லை அதற்கான 'ஏதும்'இல்லாமல் இருக்கலாமே ?...

ராணியைச் சந்தித்துப் பேசினால் மனசுக்குத் தெம்பாகவும் பொழுது போக்காகவும் இருக்கும் என்றெண்ணினான் மணிமாறன். 'வயதொத்த யுவனும் யுவதியும் மனமொத்த நண்பர்களாகவே பழகி, தங்கள் தங்கள் நேசத்துககு ஓர் அர்த்தத்தை உண்டு பண்ணிக்கொள்ளுகிறார்கள். இரண்டு நண்பர்கள் பழகுவதில்லையா அப்படி ... இது மேலை நாடுகளிலே வெகு சாதாரணம் !... இங்கே தான் யுவன் — யுவதி நட்புக்குப் புதுப்பொருள் கற்பிக்கிறார்கள் ! காதலென்றும் கூதலென்றும் !' அண்ணியை எண்ணினான். அவளது இங்கிதப் பண்பில் நம்பிக்கை வைத்து அவன் நடந்தான்.

அழகே ஒப்பற்ற ஆபரணமாகக் கொண்டு இலங்கினாள் ராணி.

இளமையின் அதீதமான பொலிவே தனக்குக் கிடைத்த ஆடம்பரமான ஒப்பனை என்ற கருவத்துடன் அவள் நின்றாள்.

"ராணி ! ..."

நாணம் காட்டி, நகை காட்டி ஒதுங்கினாள் ராணி,

"பிஸ்கட் நன்றாக இருந்ததா ?...."

"ஆமாம்!"

"அப்படி உட்காருங்கள்?"

"..."

"சும்மா உட்காருங்கள்."

"ஐயாவுக்குச் சமையல் ஆகவேணும்!"

"பொழுது இருக்காது!"

"வேலை ஆக வேண்டாமா?... வேலையைப் பார்த்துக் கொண்டா பொழுது ஓடுகிறது!..." கையிலிருந்த ஏடு புரண்டது.

"இது நீங்கள் படிக்கவா?"

"பின்னே?" கொஞ்சம் சூடாகவே வந்தது பதில்.

விவேகா நந்தரின் நூல்.

"ஐயா தந்தது. அவர்கள் பழக்கியது!"

"ஓ! ..."

அந்தப் புத்தகத்தை வாங்கியபோது, 'அப்பாவுக்கு எல்லாம் தெரியும். ஒழுக்கம், கட்டுப்பாடு போன்ற தார் மீக வரம்புகளுடன் இரக்கம், தயை, அன்பு, பாசம், கருணை, போன்ற குண நலன்களும் சீராக வளர்க்கப்பட்ட பெரியவர் அவர். பெரியவர்களுக்கு அவர்களின் தகுதி அடிமனத்தின் வாயிலாக முன்கூட்டியே தெரிந்து விடுமாம்!...' என்று சிந்தித்து, பிறகு வாங்கிய நூலைப் புரட்டினான். எடுத்த எடுப்பில், "எது எது உண்மை யானதோ, எது எது பரிசுத்தமானதோ, எது எது புனித

மானதோ, பெண்மை பெண் இனத்தில் எனப் போற்றப் படுவது எதுவோ, அதற்குப்பெயர் சீதை!'' என்ற உண்மைகள் பிரகடனப்படுத்தப்பட்டவையாக பளிச் சிட்டன.

அவ்வரிகளைப் படித்தபோது, அவன் விழிகள் கலங்கின. அவன் ராணியைப் பார்த்தான்.

"உங்களைப் பற்றி கொஞ்சம் நான் அறியலாமா?'' என்று கேட்டான் அவன்.

"கொஞ்சம்தான் சொல்ல வேண்டியது உள்ளது. உங்கள் அப்பாவை பார்க்கும்வரை அனாதையாக இருந்த அபலை நான். இன்று எனக்கு ஒரு நிழல் இருக்கிறது. நாளை எனக்கு ஒரு வாழ்வு கிட்டி விடும்!...'' தன்னம் பிக்கையின் சுடர் மௌனப் புன்னகை புரிந்தது.

அந்தி வானத்தின் விந்தைகள் சொல்லில் அடங்கி விடுமா?

பூச்செடிகளுக்கு நீர் பாய்ச்ச வந்தான் தோட்டக் காரன்.

"உள்ளே போகலாம்!''

அவன் முன்னே சென்றான்.

அவள் மாடிப்படியில் கால்வைத்த நேரத்தில், அவன் அவளிடம் ஓர் அழகிய பட்டுச் சோளித் துணியைக் கொடுத்தான்.

"வேண்டாம். ஐயா கொடுத்தது நிரம்ப இருக்கு!'' அச்சம் விழி பிதுங்கியது.

"பரவாயில்லை. இதையும் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் தன்மையை நான் ரொம்பவும் போற்றுகிறேன்... என் அன்புக்கு ஒரு அடையாளம் இது !...

''அடையாளம் என்ற ஒன்று இருந்துவிட்டால், அப்பால் அது அன்பாக எப்படிங்க இருக்க முடியும் ?... பிரதிபலனை எதிர்பார்க்கும் ஒரு உபகாரம் ஆகி விடாதா ?''

இருவரும் உரையாடிய சமயம், ''பேஷ் !'' என்ற பேச்சொலி சிரிப்புக் கலந்து கேட்டது.

அங்கே ஸ்ரீமான் சிற்றம்பலம் நிச்சலனமாக நின்றார். "வாங்கிக்க ராணி !'' என்றார். குரலில் எவ்விதமான மாற்றமும் இல்லை. தெளிந்த நிதானம் பிறழவில்லை.

ராணியின் பூங்கரங்களிலே இப்போது அந்தப் பட்டுத் துணி இருந்தது.

விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டின் பிறந்த ஊரான அலம் எனும் நகரில் அம்மேதையின் இல்லத்தைத் தரிசித்துத் திரும்புகையில் வாங்கப்பட்ட இந்தப் பட்டின் நினைவை மணிமாறனால் மறக்க வாய்க்காது.

அதேபோல, அப்பட்டு அண்டிய இடத்தின் இந் நினைவையும் மறக்க மாட்டான் !

# 6

'வாக்கிங்' போய்த் திரும்பினார் 'சாரதா ஸில்க் பாலஸ்' முதலாளி. தெரு விளக்குகள் எரிந்தன. நீராடினார். நீறு பூசினார். பூஜையை நிறைவுபெறச் செய்தார். மாலைப் பதிப்புச் செய்தித்தாள் வந்திருந் தது. புரட்டினார். ஐம்பத்துநாலு வயசு சினிமா நடிகர் ஒருவர், தான் பார்க்க சின்னக் குழந்தையாக இருந்தவள் இப்போது தன்னுடன் கதாநாயகியாக நடித்திருப்பதைப் பற்றிப் பிரமாதமாக அளந்திருந்த செய்தியை அளவுகட்டிப் பிரசுரித்திருந்தார்கள்.

சிற்றம்பலம் உள்ளுக்குள்ளே நகைத்துக்கொண் டார். 'தமிழ் நாட்டிலே எதற்கும் ஒரு ஆச்சரியக் குறி தான்!'

எந்த ஒன்றிற்கு முற்றுப்புள்ளி இட்டு முடிக்க ஒப்பாதவர் சிற்றம்பலம். 'மனிதனை இயக்கும் ஒரு கருவியே தெய்வமும் வினையும்; ஆகவே எந்த ஒன்றும் இந்த ஒரு முடிவைத்தான் எய்துமென்று முன்னதாகவே நிர்ணயம் செய்துவிட்டு, அதன்பின் தெய்வத்தின் பேரில் பழி போட்டுவிட்டுச் சும்மா இருப்பது தர்மமாகாது' என்கிற கருத்து உடையவர் அவர்.

சாரதாவின் உயிர் தொண்டைக்கும் வாயிக்குமாக இழுத்துக்கொண்டிருந்தது.

சிற்றம்பலம் சின்னப் பிள்ளை மாதிரி விம்மி வெடித் துக் கொண்டிருந்தார். தன் இன்னுயிரின் மறுபாதி அவ்வளவு சுளுவாக—அத்துணை சீக்கிரமாக தன்னிட

மிருந்து பிரிந்துவிட அவர் ஒப்பவில்லை. பட்டணத்தில் உள்ள பல பெரிய டாக்டர்களைக் கலந்தார். தெய்வத்தையும் துணைக்கழைத்தார். ஒருவர் சொன்ன ஒரு நூதனக் கண்டுபிடிப்பு மருந்து பயன் தந்தது. என்றோ போய்விடுமென்று எல்லோரும் எதிர்ப்பார்த்த அவ்வுயிர் அதற்கப்புறம் பதினைந்து தினங்கள் 'ஜம்'மென்று உடற் கூட்டில் ஒட்டியிருந்தது. அவளுடன் வாழ்வு நடத்திய நாற்பத்திரண்டு வருஷங்களிலே ஒரு முழு நாள் என்பதாக அவளைவிட்டு அவர் இருந்ததில்லை. அப்படிப்பட்ட நெருக்கத்தின் மகிமையை பின்னும் அனுபவிக்க—உணர—மகிழ அவருக்கு மீண்டும் ஒரு பதினைந்து நாட்கள்—அல்ல, பதினைந்து யுகங்கள் கிட்டின. மண்ணுக்கும் விண்ணுக்குமாகக் குதித்துவிட்டார் அவர்.

அடுத்ததாக ஒரு நினைவு சிலும்பியது. செம்மறிக் கடா மாதிரி.

ஞாபகம் வைத்துப் போற்றத்தக்க ஒரு ஞாபகமாக அது உணர்வு காட்டியது. கண்ணீரில் கனத்த கபாலம் இனி இறங்கிவிடலாமா?

'ராணி!'

சாரதா கண்களை மூடிக்கொள்வதற்குக் கச்சிதமாக முதல் நாள் ராணி வந்தாள். ஒரு புதினத்தின் ஓர் அத்தியாயம் முடிந்து மறு அத்தியாயம் ஆரம்பமாகும் கதை.

மனைவியின் உடல் நலம் காரணமாக மனம் நலிந்திருந்த சிற்றம்பலம் கோடம்பாக்கம்வரை இரட்டை மிதித்துக்கொண்டு நடந்தார். பரந்து அகன்றிருந்த மார்பு மெல்லிய காற்றின் ஸ்பரிச சுகத்தில் லேசாக சுகம் காண முடிந்தது. நோக்கமில்லாத நடை. 'சாரதாவின்

நிலை பயமாக இருக்குது. அவள் இல்லாமல் நான் எப்படி இனி உயிரோடு இருக்க முடியும்? என்னில் அவளாக இருந்த தெய்வப் பெண் அல்லவா அவள்!.... தெய்வப்பெண்...! தெய்வாம்சம் கூடிய மனைவி!....அவள் மாதிரி இனிமேல் என்னை யார் அப்படிக் கவனிச்சுக்கப் போறாங்க?.... என்ன கேள்வி இது?.... யாரலே அப்படி என்னை அவ்வளவு உரிமையான கவலையோட பராமரிச்சுக்க இயலும்?...இத்தனை வருஷத்துக்கும் வாழ்க்கையை நான் கூத்தாக நினைச்சதில்லே! இனிமேல்தான் அப்படி ஆயிடப்போகுது!...வாழ்க்கை என்கிறது வாழ்ந்து ஆக வேண்டுமென்று மனிதனுக்கு விதித்திட்ட ஆண்டவன் கட்டளையா? ஊஹூம், அப்படி நான் ஒத்துக்கிட ஒப்ப மாட்டேன்! வாழ்க்கை என்கிறது வாழ்ந்து தீர வேண்டிய கடமை—மனிதனின் கடன்!...அவ்வளவே தான்! ம்...எனக்கும் கடமை இருக்குது! ஆமா திஸ் ஒன்லி....இஸ் ட்ரு...' வெய்துயிர்ப்பு வெளியேறியது. ஆனால், தன் நிழலை விரட்ட எத்தனிக்கும் பாலகனைப் போன்று ஓர் ஆற்றாமை மட்டும் மிஞ்சியது.

'ஜிம்னாஸ்யம்' ஒன்றின் சொந்தக்காரர் எதிர்ப் பட்டார். அடிநாளைய நட்பு. குசலம் விசாரித்துக் கொண்டனர். அம்மனிதர் தளர்ந்து போயிருந்தார். கைக்கம்பு இல்லையெனில் அவர்பாடு அந்தரம்தான்!

தமிழ் நாட்டின் ஹாலிவுட் பகுதி ஆயிற்றே!—பிரபலமான நடிகர் ஒருவரின் அகால மரணம் பற்றிப் பேசிக் கொண்டார்கள். அரைக்கணம் அதிர்ந்து போனார். 'பெரிய ஸ்டார் ஆனார் இப்படித்தான் வாழணும் என்கிற ஒரு அடக்கம் இல்லாமல் 'கண்டபடி' வாழ்ந்துவிட்டுப் போய்விட்டார், பாவம்! மற்றவர் களுக்கு இவர் ஒரு எச்சரிக்கை ஆகிவிட்டார். அந்த வகையில் அவர் பாவம் கழிந்துவிடும்...கழுவாய் கிடைத்துவிடும்!...'

இப்போது தம்மைத்தாமே ஒரு முறை நோக்கிக் கொண்டார். தமக்குத்தாமே சிந்தித்துக்கொண்டார். 'கற்பு நிலை என்பது ஆணுக்கும் இருக்கவேண்டும். என் வரை இப்பண்பிலே நான் நீதியுடன் நடந்துவிட்டேன். என் சாரதாதான் என் நீதி! .'

திரும்பிக் கொண்டிருந்தார்.

வழியில் வழிமறித்துக் கிடந்தாள் ராணி.

விழியை வழியாக்கிப் பார்த்தார் சிற்றம்பலம்.

பருவத்தின் முதல் வாசலை மிதித்திருந்த நேரத்தில், அவள் ஏன் இப்படி ஆகிவிட்டாள். ஓடிய டாக்ஸியை அழைத்து, ராணியை வீட்டுக்கு அழைத்துச் சென்றார். பரிசோதனைகள் நடந்தன. நஞ்சு சாப்பிட்டிருக்கிறாள் ராணி. அழகின் ராணிக்கு இப்படி ஓர் அவகேடு ஏன்?... பொறியைக் கலக்கி விதி விளையாடலாமோ? ஓர் இங்கிதம் வேண்டாமா? இங்கிதமின்றி நடந்துவிட்ட பேய் உலகிலேருந்து விடுதலை பெற முடிவு கட்டியிருக்கின்றாள்!

எப்படியோ, ராணி மறுபிறவி கொண்டு எழுந்தாள். 'என் பசியையும் என் அழகையும் துஷ்பிரயோகம் செய்தாள் ஒரு அரக்கி. என்னையுமறியாமல் என் மானத்தைப் பறிகொடுத்தேன். என்னை ஏன் காப்பாற்றினீர்கள்?'—அவள் புலம்பினாள். விஷயம் இதுவே. அவள் அழுத பாஷை நீளம்!...

வாழவேண்டுமென்கிற தத்துவத்தின் கடமைப் பண்பாட்டில் அவதாரம் செய்த மனிதப் பிறப்புக்கு, தன் போக்குப்படி சாவதற்கு அனுமதியே கிடையாது என்ற தம் சித்தாந்தத்தை—ஏட்டளவில் எழுதப்பட்ட

ஒரு முதுரையை ஒரு வடிவமாக்கிப் பேசிய தம் கருத்து மொழியை எடுத்தியம்பினார்.

அவளோ விழித்தாள்.

அவரோ அவளுக்கு நம்பிக்கை ஆனார்.

படுத்த படுக்கையில் கிடந்த சாரதாவுக்கு இப்போது நம்பிக்கை ஆகும் பேறு ராணிக்குக் கிடைத்தது. உயிர் ஊசலாடும் கட்டத்தில் சாரதா வேண்டினாள் : 'அம்மா ராணி' உன்னைப் பார்த்தா ஒரு வேலைக்காரி என்னாலே மதிப்பிட முடியலை. என் பிரியமான புருஷனை உன்கிட்டே ஒப்படைச்சிட்டுத்தான் போறேன். அந்த ஒரு நிம்மதியோட தான் போறேன்!...

சிற்றம்பலம் நிமிர்ந்து குந்தினார்.

கண்கள் பொடித்தன.

'சாரதா!...

மேசையில் கிடந்த அந்தச் சாமானை எடுத்தார் பேனா வடிவு கொண்டிருந்த அதன் அடிப் பொத்தானை அழுத்தினார். அது ஒரு 'வாக்கிங் ஸ்டிக்' ஆக உருக் காட்டிற்று. மணிமாறன் அப்பாவுக்குக் கொடுத்த பரிசு!...

அவர் சிரித்துக் கொண்டார். சிரிப்பும் அழுகையும் அவர் மட்டில் பேதம் காட்டாது அந்தப் பொருளை தூக்கி வீசிவிட்டு, எழுந்தார். எலுமிச்சம்பழ ரசம் கொஞ்சம் அருந்தினால் தேவலாம் போலிருந்தது. 'ராணி!' என்று பெயர் தொண்டைக்குழியில் மிதந்தது. ஏனோ அழைக்கக் காணோம். கைவிரல் பூ மோதிரத்தை நெருடிவிட்டபடி, புத்தக அலமாரிக்கு நெருங்கினார்

மனம் பின்னிக் கிடந்தது. எப்போதுமே அவர் மனம் இத்துணை உளைச்சல் கண்டதில்லை. நெற்றிப் பொட்டு நரம்புகள் முறுக்கேறின. ரத்த நாளங்கள் துடித்தன. எலுமிச்சைச் சாறு பிழிந்து ஒரு மிடறு குடித்தார். பிறகு தீவிரமான சிந்தனைக்குப்பின் ஒரு திட்டம் பெற்றார். 'ஆமாம், அதுவே சரி...!'

படிக்கட்டில் இறங்கினார் சிற்றம்பலம். அதன் அடிப்பகுதியில் ராணி நின்று, மெய்சோர்ந்த நிலைப்புடன் கண்ணீர் மாலை தொடுத்துக் கொண்டிருந்தாள், ராணியின் விதி என!...

ராணியின் மாரகச் சேலையைச் சமன் செய்து போர்த்தினார் கலைந்திருந்த முடிகளைச் சீராக்கினார். கண்ணீரைத் துடைத்து விட்டார். அவருக்கு மீண்டும் அழுகை முட்டியது. அவள் கையில் மணிமாறனின் பரிசுத்துணி காணப்பட்டது.

"ராணி..."

"... ... ..."

"ராணி...!"

"இதை உங்க மகன்கிட்ட நீங்களே குடுத்திடுங்க!...."

"ஏன்?...."

"எனக்கு இது வேண்டாம்!...."

"அப்படின்னா, நீ அவனை விரும்பவில்லையா?"

விரும்புறேன்!... உங்க மகனாக அவரை விரும்புகிறேன்!"

“ராணி!...”

இத்தனை அழுகையையும் இது பரியந்தம் அவள் எந்தக் கிட்டங்கியில் சேமித்து வைத்திருந்தாள்.

‘என் புள்ளி பிசகி விட்டது .. இனி நான் என்ன செய்ய வேண்டும்?.... இப்போது ராணிதான் பேசி ஓய்ந்தாளா?... அப்படியென்றால் .. அப்படியென்றால்...?’

தர்மம் அவரை அழைத்ததோ ?

மண்டை ஓடு கொதித்தது.

உலகம் பூதாகரமாக விசுவரூபம் எடுத்து, பேய்க் கணமாக எக்காளமிட்டுச் சிரிக்கத் தொடங்கியது.

கீழே சிதறிக் கிடந்த நூல் விரிந்தது.

“...தன்னிடம் நம்பிக்கை அற்றவனே நாஸ்திகன்...!”

உணர்ச்சிகளை ஆளவல்ல ‘சித்து’ கைவரப்பெற்றவர் சிற்றம்பலம். ‘பாவம், ராணி !...’

தர்மம் புன்னகை சிந்தத் தொடங்கிற்று.

# 7

திருவாளர் சிற்றம்பலம் அவர்களுக்கு அன்று பிறந்த நாள் விழா, எழுபத்திரண்டாவது பிறந்த நாள் வைபவம் !....

மாலையில் விசேஷம் !

துயில் கலைந்து எழுந்ததுமே, சிற்றம்பலத்தின் மனம் மப்பும் மந்தாரமும் கலைந்து வெளி வாங்கிய வானமாக இருந்தது. உடற்பயிற்சி, குளியல், பிரார்த்தனை போன்ற நித்திய கடன்களையெல்லாம் வழக்கம்போலவே சுறுசுறுப்பாகவே செய்து முடித்துக்கொண்டு தம் அறைக்கு வந்து அமர்ந்தார்.

வழக்கம்போலவே அவருக்கு எல்லா வகையிலுமே துணை நின்றாள் ராணி.

காலைச் சிற்றுண்டி வந்தது.

அவர் அனுபவித்துச் சாப்பிட்டார்.

விக்கல் எடுத்தது.

நீர் கொடுத்தாள்.

குடித்தார்.

புதுச் சொக்காயை அணிந்துகொண்டார் அவர். புதிய ரோஜாப்பூவை நீட்டினாள் அவள். 'எனக்கு ஒரு மானசீகத் தூண்டுகோலாக இருந்தீர்கள். நீங்களும்

போய்விட்டீர்கள், நேருஜி!' — பூவைச் செருகிக் கொண்டார்.

கீழே சிற்றம்பலத்தின் பெண்கள் வந்து இறங்கினார்கள். குரல்கள் அம்பலமாயின. மற்றவர்கள் இரவே வந்து சேர்ந்தார்கள்.

''ராணி, ராத்திரி நிம்மதியாகத் தூங்கினாயல்லவா?'' என்று கேட்டார், பெரியவர்.

''ஓ! '' நளினமுடன் பதிலிறுத்தாள். அவள் மார்பகம் எம்பியது ; தணிந்தது. ஆரம்பம், முடிவு என்ற இவ்விரண்டையும் ஒன்றாய் மதித்துத் திரியும் தவப் பெண்போல நிர்மலமாக இருந்தது அவளது பால் வழியும் அரவிந்த முகம்.

அவளை இமை பாவாமல் பார்த்தார் ; பார்த்தார்; அப்படிப் பார்த்தார்.

அவர் இமைகள் கசிந்தன.

அவள் ஜரிகை அங்கவஸ்திரத்தை எடுத்துக் கொடுத்தாள்.

எப்போதும் அவள்தான் அவரது கழுத்திலே போட்டு விடுவாள்.

இன்று அப்படிச் செய்யவில்லை.

அவரும் அதைப்பற்றிக் கேட்டுக் கொள்ளவில்லை.

இளநகை வரிக்கோடிட்டது அவருடைய இதழ்க் கரையிலே.

''சாப்பிடு!''

"ம் !"

அவள் புறப்பட முனைந்தாள்.

அவர் மேஜை இழுப்பை வெளியே இழுத்தார்.

மணிமாறன் அன்று ஒருநாள் ராணிக்குத் தந்த அந்தப் பரிசுப் பொருள் இன்னமும் அங்கே மூடி வைக்கப் பட்டிருந்தது. ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு 'டக்' கென்று மூடிவிட்டார்.

ஏதோ காரியமாக, அங்கு மணிமாறன் வந்தான். ராணியை ஜாடையாகப் பார்த்தபடியே, தந்தையிடம் ஏதோ பேசினான். குடும்பத் தாக்கல், "மரியாதைக்குக் கேட்கிறான் அண்ணா. சந்தோஷம்தான். அதுதான் நான் பழக்கிக் கொடுத்த பழக்கம். டின்னரில் இரண்டொரு ஐட்டங்களைக் குறைத்துவிடச் சொல்! தம்பி! நீ எனக்குக் கொடுத்த அந்த நுதனமான ஊன்றுகோல் பிரமாதம் !... சரி .... விண்வெளி யுகமகிமை பற்றி நீ பேச ஆரம்பித்து விடுவாய்... ! போ.... வேலைகள் நடக்கட்டும். சற்றுப்பொறுத்து நானே கீழே வருகிறேன் !...."

மணிமாறன் போய்விட்டான்.

ராணி தொண்டையைக் கனைத்துக்கொண்டு, "அந்தத் துணியை உங்க பிள்ளையிடம் கொடுக்கலீங்களா ?" என்றாள்.

"என் பிள்ளையின் துணியா ?" எல்லாம் என் சொத்தல்லவா ? எல்லாம் என் சுயார்ஜிதமாக்கும் !...."

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. முகம் குழம்பிப் போனது.

"ஒரு பாட்டைக் கேளேன் !..."

"... ..."

"ராணி!"

"ம் !..."

சிற்றம்பலம் பெரிதாகக் கனைத்துக்கொண்டு, தொண்டையைப் பதனப்படுத்திவிட்டு பிறகு பாடினார்.

"முத்து முகப்படியோ முச்சந்தி வீதியிலே
பத்தாம் இதழ்பரப்பிப் பஞ்சணையின் மேலிருத்தி
அகத்தை யடக்கிநிலை ஆருமில்லா வேளையிலே
குத்து விளக்கேற்றி என் கண்ணம்மா
கோலமிட்டுப் பாரேனோ !"

அழகணிச் சித்தரின் ஆத்மலயம் பளிச்சிட்டிருக்குமோ ?

பாடிவிட்டு அவர் சிரித்தார்.

கேட்டுவிட்டு அவள் சிரித்தாள்.

புத்தகத்தை வெறி பிடித்தவர்போல ஒரே எட்டில் வீசிவிட்டு, அவள் கைகளைப் பற்றத் துடித்து, பிறகு அதே நொடியில் பின் வாங்கிக்கொண்டு, ராணியைக் கூப்பிட்டு, அவளை நேருக்கு நேராக ஒரு கணம், இரண்டு கணம் என்று சில கணப்பொழுதுவரைப் பார்த்திருந்து முடித்து, பிறகு திரும்பவும் பேச ஆரம்பித்து, 'ராணி' என அழைத்து, "உனக்கு நான் முடிவு சொல்லவேண்டும் ! இல்லையா ?" என்று வெள்ளைத்தனமான பான்மையுடன் வினவிவிட்டு, அடுத்த நிமிஷம் அப்படியே மௌனச் சிலையாகி விட்டார் !

ராணி துடிதுடித்தாள்.

“ஐயா !...”

“ராணி !”

“ம் !”

“உனக்கு நான் என் முடிவைச் சொல்லிவிடவேணும், இல்லையா ?”

சிற்றம்பலம் தம்மை முழு மனத்துடன் நம்பிய இறுக்கத்துடன், உந்திக் கமலத்தினின்றும் பிறந்த அமுதச்சிரிப்பினை மெள்ள மெள்ள உதட்டுக் கோணங்களிலே உலவ விடலானார் !

# 8

பிறந்த நாள் விழா ஆரம்பமாயிற்று.

பங்களா விழாக் கோலம் பூண்டது.

பஞ்சுமெத்தை இடப்பட்ட நாற்காலியில் திருமிகு. சிற்றம்பலம் அவர்கள் வீற்றிருந்தார். மகாராஜாவுக்கு நேராக! — வருவோர் போவோரின் வணக்கத்தைக் கவரு கிற ஜெயஸ்தம்பமாக! புத்தாடைகள் அவருக்குப் புது மணம் ஊட்டின மலர்மாலையின் வாடை உள்வட்ட மாக நெடி ஏற்றியது.

அந்தி மயங்கி வந்தது.

பட்டணத்துப் பிரமுகர்கள் பலர் விழாவுக்கு வந்து சிறப்பித்தனர் வந்த பெரிய மனிதர்கள் அனைவரும் வயதில் சின்ன மனிதர்களாகவே இருந்து விட்டார்கள். ஆனபடியால், அவர் யாரிடமிருந்தும் ஆசி பெற பாக் கியம் செய்திருக்கவில்லை மாறாக, அவரது வாழ்த்துக் களைப் பலர் பெற்று ஏகினர்.

சிற்றம்பலத்தின் இதயத்தின் இதயம் சதா 'சாரதா சாரதா' என்றே உச்சரித்துக் கொண்டிருந்தது. 'சாரதா, நீ இருந்த இடம் என் நெஞ்சில் உனக்காகவே என்றென்றும் காத்துக் கிடக்கும்!'

இரு பாதிரிமார்கள் வந்தார்கள்.

ஒருவருக்கு இல்லறத்தில் இருக்க அனுமதி.

மற்றவருக்குத் துறவுதான் விதி.

அவரவர் மதச்சார்பு அப்படி.

மணிமாறன் அனைவரையும் வரவேற்றான்.

ஜனாப் முகமது ராவுத்தர் வியாபாரக் கூட்டாளி அவர் வந்தார். பரிசு டப்பா ஒன்றை ஓர் எடுபிடி சுமந்து வந்தான்.

சிற்றம்பலம் மறுத்தார்.

ஜனாப் கடைசிப் பட்சமாக, சட்டைப் பையிலிருந்து ஒரு சிறந்த 'செண்ட்' சீசாவை எடுத்து, அதை எழுபத் திரண்டு வயசு இளவட்டத்தின், ஜிப்பாவில் நெடுக பூசினார். நெடி, நெடிதுயர்ந்து பரவியது.

இசை நிகழ்ச்சியொன்று தொடங்கியது.

அப்போது, ராணி புது உடை திகழ, கூட்டத்தை விலக்கிக்கொண்டு வந்து, சிற்றம்பலத்தை நெருங்கி வந்தாள். அதற்கு, மணிமாறன் நிரம்ப உதவினான்.

வந்த ராணி, சோளியின் உட்புறமிருந்த ஓர் உறையை எடுத்து அதைச் சிற்றம்பலத்தின் கைகளில் பணிவுடன் தொட்டு வைத்தாள். அவரது செந்நிறப் பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.

சிற்றம்பலத்தின் கையிலிருந்த உறை கழன்றது.

''மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு நீண்ட ஆயுள் தரும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,

**வேலைக்காரி ராணி.**

சிற்றம்பலம் உணர்ச்சிவசப்பட்டார்.

"ராணி !"

"ஐயா !"

அங்கிருந்து பிரிய விடை கேட்டாள் ராணி.

"ஆ !" என்று மலைத்தார் சிற்றம்பலம்.

"ராணி !..."

"ஐயா !..."

"ராணி, நான் இனி உனக்குச் சொந்தம் !..."

"மெய்யாகவா ?....கடவுளே, நான் பாக்யவதி !...."

விழாப்பந்தல் அதிசயக் குறியை முகப்பு வெளியில் பறக்கவிட்டது.

# 9

திருவாளர் சிற்றம்பலம் அவர்கள் ராணியைத் தன் உடைமை ஆக்கிக் கொண்டார் முறைப்படி.

அதன் விளைபலனாகக் குடும்பத்தில் பூத்த பூசல்களுக்குச் சட்டப்படி வழிதேடினார். தான் சம்பாதித்த சொத்துக்களில் ஒரு பகுதியை தன் குடும்பத்துக்கு வைத்துக்கொண்டு, மிகுதியைப் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் பாகம் பிரித்துக் கொடுத்தார். ஒவ்வொருவருக்கும் தனித் தனி வீடு. இந்தப் பங்களாவை இவரே வைத்துக் கெண்டார். அப்பாவின் குணத்தை அறிந்த பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் இன்னும் ஒருபடி மேலாக அவரைப் பற்றி அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பை விதி அமைத்தது.

''இப்போ என்னை என் மக்கள் மட்டுமில்லை, ஊர் உலகமும்கூட ரொம்ப அப்பட்டமாக புரிஞ்சுகிட்டிருக்கும்!'' என்ற வீரச் சொற்களை முடிவுரையாக்கி மற்றவர்களைக் கதிகலங்கி ஓடச் செய்துவிட்டு அவர் வழக்கம் போல எவ்விதமான சலனமும் இன்றித் தம்முடைய தனியறையில் உட்கார்ந்தார். சாரதாவின் படத்தின் கீழ் நின்று, ''கண்ணே சாரதா! நீ தான் என்வரை உண்மை மற்றதெல்லாம் பொய். உலகத்தைப் பற்றி நீ செவி சாய்க்காதே. அது ஒரு பைத்தியம்'' என்று சொல்லி நிறுத்தினார்.

அப்புறமும் தொடர்ந்து, ''சாரதா! டியர்!... என்னைப் பாதுகாக்க நீ முன்பு என் நிழலாக இயங்கினாய். இப்போது உன் மன விருப்பப்படியே ராணி வந்திருக்கிறாள். அது அவள் கடமையாம். சொல்கிறாய்!...உன்

மரணப்படுக்கையில், என்னை அவள் கைகளில் நீ ஒப்படைத்துப் போவதாகச் சொன்னாயல்லவா! அந்த ஒரு வாக்கையே வேதவாக்காக மதித்து என்னை தன் கைப்பிடியில் அமர்த்திக் கொண்டுவிட்டாள் ராணி. அதிசயமாகத் தான் இருக்கிறது. நேற்றுவரை நானே கனவிலும் நினைத்திராத எதிர்பார்த்திராத ஒரு முடிவு, சாரதா...இது! நான் நாளை ஒரு கதை ஆகப்போகின்றவன். அவளோ இன்றே ஒரு கதை ஆகிவிட்டாள் சாரதா, நீ இனி நிம்மதியாக இரு. ஏன் தெரியுமா? நான் இப்போது நிம்மதியாக இருக்கிறேன். ஆமாம்! நான் இனி நிம்மதியுடன் இருப்பேன். ஆகவே, நம் ராணியும் இனி நிம்மதியுடன் இருப்பாள்!...மாயப் பிறப்பறுக்க வேண்டுவார்கள். எனக்கு அம்முடிவு வேண்டவே வேண்டாம்! நீயும் ராணியும் எனக்கென இருக்கையில், இனி நான் எத்தனை காலம் வேண்டுமென்றாலும், வாழக் கடமைப் பட்டவனாயிற்றே! '' ஒன்றுமட்டும் உண்மை. நம் ராணி இருக்கிறாளே ராணி, அவள்தான் மெய்யான தியாகச் சுடர்! ஆனால் அதிசயம் என்னவென்று கேளேன்...அவள் என்னைத்தான் பெரிய தியாகி என்று புகழ்கிறாள்! சாரதா!... நீ சொல்! உனக்குத் தெரியும் என்னை. எப்படியோ ராணியின் ஆசையைப் பூர்த்தி செய்து விட்டேன் ஆமாம்; அட்டியில்லை. நான் மனிதனாக—மனிதனாகவே இருந்துவிட்டேன்! உனக்குப் புரியாதா என் உள்ளம், பேச்சு?... சாரதா!...நீ தேவதை! இல்லையென்றால், நீ திரும்பி வந்து என்னை ஆட்கொள்வாயா?...'' என்று தமக்குத்தாமே பேசிக் கொண்டிருந்தார் அவர். தமக்குத்தாமே நம்பி, அந் நம்புதலையே ஓர் இலட்சியமாகக் கொண்டு, இந்த இலட்சியத்தை வாழ வைத்துவிட்ட அமைதியில் சிந்தை தெளிந்த கனிவுடன் நல்ல மூச்சுவிட்டு, நல்ல சிரிப்பை உதிர்த்தார் அவர்.

அவரது விழிவரம்புத் துளிகளை ராணி துடைத்தாள்.

அவளது கண்ணீரைத் துடைக்கும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது.

நாட்குறிப்பின் அன்றையத் தேதியிட்ட தாளில் சிற்றம்பலம் கீழ்க் கண்டவாறு குறிப்புக்களை எழுதி யிருந்தார்.

''ஈசனே!.... சோதனைகள் இல்லையென்றால் உன் சுயரூபம் தெரியாதா எனக்கு?... எனக்கு நான்தான் எல்லாம். இது முதல் அங்கீகாரம். அப்புறம்தான் என்னை இத்தனை காலமாகக் கட்டிக் காத்தது. இனி... இனிமேல்... உன் சோதனை என்பேரிலே விளையாடத் தொடங்கி விடும்!... என் ராணியை நீ அறிவாய். அவள் இருபது வயதுப்பெண். அவளது மங்கல நாணைக் காக்கும் பொறுப்பில் இப்போது உனக்குத்தான் பெரும்பங்கு வந்து விட்டிருக்கிறது!... என்னுடைய சாரதாவைக் காப்பாற்று!... தெய்வமே!.... என்ராணிக்கு மாறாத சிரிப்பையும் மாற்ற முடியாத நெஞ்சுரத்தையும் அருள்!... என்னை நீ அறிவாய். எல்லாம் கடந்தவன் நான் ; எல்லாம் கொண்டவனும் நான்தான்!....''

# 10

உயர்திரு சிற்றம்பலம் தம்பதி எங்கெங்கோ தேன் நிலவுப் பயணம் போய் மீண்டனர். எங்கெல்லாமோ க்ஷேத்திராடனம் போய்த் திரும்பினர்.

ஊர்ப் பத்திரிகைகள் 'அதிசயம்—ஆனால் உண்மை' என்ற பகுதியில் மேற்படி செய்திகளைக் கட்டம் கட்டி வெளியிட்டுப் பணம் சம்பாதித்தன.

அன்று ராணி படுக்கையை விட்டெழுந்ததும் வாந்தி எடுத்தாள்.

அவரோ ரிஸிவரைக் கையில் எடுத்தார்.

டாக்டரோ சர்க்கரைத் துகளை கையில் எடுத்தார்.

சிற்றம்பலத்தின் வரிசைப் பற்கள் வெகு துல்லியமாகப் பளிச்சிட்டன.

பூஞ்சிட்டுக்கள் குறுக்கு மறித்துப் பறந்தன.
தொழு கடன்பொழுது.

அவர் மனம்விட்டு, வாய்விட்டுப் பாடினார்; நினைவில் குதித்த ஏதோ ஒரு திருவாசகப் பாடல்; பாடினார் ;

''மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
யூறி நின்றென்றுளெழு பரஞ்சோதி
யுள்ளவாகாணவந் தருளாய் ;

தேறலின்றெளிவே சிவபெருமானே,
திருப்பெருந்துறையுறை சிவனே,
பீறிலாப்பதங்களி யாவையுங் கடந்த
இன்பமே யென் னுடையன்பே !''

அதே நேரத்தில் :

திருமதி சிற்றம்பலம் தன்னுடைய நாட்குறிப்பில் அன்றையத் தேதியைப் புரட்டி இதயம் தோய்ந்த நல்லுணர்வின் நன்றிப் பெருமிதத்துடன் எழுதலானாள் :

''சமுதாயத் தீவினைகளுக்கு பலியான பெண்களுக்குக் கைகொடுக்க அன்று ஒரு மகாத்மா வாழ்ந்தார். இன்று ஒரு சிற்றம்பலம் அவர்கள் எனக்குக் கிடைத்திருக்கிறார், என் கனவைச் செயற்படுத்தி நனவாக்க, அவர் தியாக மனிதரானார். எனக்கு நிழலான அவர் இப்போது என்னையும் நிழலாக்கிப் பெருமைப் படுத்திவிட்டார் !...

மனிதன் கடவுளாக வாழவேண்டுமென்று எழுதிப் பேசி ; உபதேசம் செய்துவிட்டு, இறுதியில் திரைமறைவிலே கேவலமான — அற்பத்தனமான — கேடுகெட்ட மிருகமாக வாழ்ந்து போலிக் கூத்து ஆடி அடங்குகிற மாயப் பிரபஞ்சத்திலே என் சிற்றம்பலம் அவர்கள் ஒரு புரட்சி மனிதர். அவர் வாழ்வு எப்போதும் அவர் கைகளிலே தான் ! மனிதன் மனிதனாக— மனிதனாகவே வாழக் கடமைப்பட்டவன் என்ற

சித்தாந்தத்தில் — நியதியில் பற்றுக் கொண்டு, அதன் பிடிப்பில் தம்மைத் தாமே நம்பி, அந் நம்பிக்கையையே காலத்திற்குக் கொடுத்த பதிலாக்கிவிட்டு, இப்போது அவரே ஓர் உதா ரணம் ஆகி, எனக்கு உத்தாரணம் அளித்தார். நான் கொடுத்து வைத்தவள். அதனால் அவரை நான் எடுத்துக் கொண்டேன் !

"என் பெண்மைக்கு ஒரு பொருள் கிடைத்துவிட்டது. எனக்குப் பூரணத்துவம் கிட்டிவிட்டது, அவருடன் இந்த ஒரு சில நாட்களாக நான் வாழ்ந்த — வாழ்ந்துவரும் சொர்க்கவாழ்வே என்வரை கோடானுகோடி யுகதர்மங்களாக என்னுள் நிரந்தரச் சத்திய மாகி நிழலாடும் ! மனிதாபிமானத்துக்கு ஒரு தர்மமும், நன்றிக் கடனுக்கு ஒரு கடிதமும் கிடைத்துவிட்டன, உலகத்துக்கு! அந்த உலகத் தைப் பற்றி எனக்கு இனி அக்கறை ஏது ?

"ஆம் ; எனக்கு வழங்கப்பட்டுள்ள 'காட் பும், 'என்னை அணைத்து என்னுள் வளர்ந்து வரும் நிழலும் எனக்குப் பொருளாகி பொருள் ஆன அந்த மகத்தான சக்தியும்தான் எனக்கு விதி, வினை, தெய்வம், உலகம் எல்லாம் !.... ஆமாம் !...... இதுவே யதார்த்தமான உண்மை !..."

காற்று பாங்குடன் வீசிற்று.

பேனாவை மூடி விட்டாள் திருமதி சிற்றம்பலம். கண்களையும் இதயத்தையும் அவளால் அப்படி மூடிவிட

முடியவில்லை, தவித்தாள். சூன்யத்தின் அண்டப் பெருவெளியில் மாயையின் ரூபமாக அவளது பூங்கரங்கள் ஓங்கிக் குவிந்தன. பூந்தாளையுன் இனிப்பும் ஈரமும் நாக்கில் ஊறத் தொடங்கின ! ...

பாவம், 'விதி' விழித்துக்கொண்டிருந்தது !....

''ஆம்; 'விதி' விழித்துக்கொண்டுதான் இருந்தது.



# நூலாசிரியர் பற்றி

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | **பூவை. எஸ். ஆறுமுகம்** |
| புனைப்பெயர்கள் | : | கார்த்திகைபாலன், மறைநாயகன், இளைய பிரான், பிறைசூடி |
| பிறந்த நாள் | : | *31—01—1926* |
| பிறந்த ஊர் | : | பூவை மா நகர், புதுக்கோட்டை மாவட்டம். |
| முதல் கதை | : | *15—8—1947* சுதேசமித்திரனில் "கரகம்". வெளியிட்டவர் 'சாண்டில்யன்'. |
| இலக்கியப் பணி | : | "பொன்னி' 'காதல்' 'மனிதன்' 'உமா' ஆகிய இதழ்களில் சேவை. பல்வேறு துறைகளில் 175 நூல்களுக்கு மேல் படைத்தது. |
| அரசுப் பணி | : | ஏலக்காய் வாரியத்தில் பத்தாண்டு காலம். |
| நாடகப் பணி | : | 'ஜாதி ரோஜா' 'சமுதாயப்புரட்சி நாடகக் கதை வசனம் |
| திரை உலகப்பணி | : | 'கூண்டுக் கிளி' கதை வசன உதவியாளர், "சொந்தங்கள்" வாழ்க"-மூலக்கதை. |
| நடப்புப் பணி | : | எழுத்துப்பணி தொடர்கிறது; இனிமேலும் தொடரும். |